4
1211

அருவிக்கரை ஆசிரமம்

சுதர்சன் - ரா.வீழிநாதன்

அமுத நிலையம்

அருவிக்கரை ஆசிரமம்

(நாவல்)

சுதர்சன்



மொழிபெயர்ப்பு:

ரா. வீழிநாதன்

அமுத நிலையம் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை—18

முதற் பதிப்பு: ஜனவரி, 1953
அமுதம்—60
உரிமை பதிவு

171041

விலை ரூ. 1—8—0

நேஷனல் ஆர்ட் பிரஸ்,
சென்னை—18.

முன்னுரை

பிரபல ஆங்கிலப் பேராசிரியர் டிக்கன்ஸ் "டாம்பேயும் மகனும்" என்னும் நவீனத்தை முதலில் தொடர்ச்சியாக ஒரு சஞ்சிகையில் வெளியிட்டார். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் இந்தக் கதையை ஆவலுடன் படித்து வந்தார்கள். கதையில் இளம் டாம்பே மரணத் தறுவாயில் இருப்பதான நிலையில் ஒரு இதழில் கதை நிறுத்தப்பட்டிருந்தது. அடுத்த இதழ் அமெரிக்காவில் கப்பலில் வந்து இறங்கியவுடன் பார்ஸல் பிரிக்கப்பட்டு ஒரு இதழ் வெளியே எடுக்கப்பட்டது. கப்பலில் கூடியிருந்த ஏராளமான வாசகர்கள், "டாம்பே உயிர் பிழைத்தானு?" என்று கூக்குரலிட்டுக் கேட்டனராம்.

இந்தச் சம்பவம் நல்ல தொடர்கதைகள் மக்கள் உள்ளத்தையும் உணர்வையும் எப்படிக் கொள்ளை கொள்கின்றன என்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்குகிறது. இம்மாதிரி உணர்ச்சி வேகத்திற்கு இலக்காகாமலிருப்பதற்காக நான் பத்திரிகைகளில் தொடர்கதைகளைப் படிப்பதில்லை. ஆனால் 'அருவிக்கரை ஆசிரமம்' என்னும் கதை என்னை எடுத்தவுடன் கவர்ந்துவிட்டது. ஆகையால் வாரம் தவறாமல் படித்தேன். அதற்குக் காரணம் ஆசிரியர் சுதர்சனின் கலா மேதையிலும் ரா. வீழிநாதனின் மொழிபெயர்ப்பு லாகவத்திலும் எனக்குள்ள மதிப்பும் நம்பிக்கையுந்தான்.

மேலோட்டு நாகரிகம் நமது இளைஞர்களை எவ்வளவு மயக்குகிறது, மனத்தைப் பாழ்படுத்துகிறது என்பதையும், மானிடப் பிறவியில் பெண்ணினம் எப்படித் தெய்வாம்சம் பொருந்தியதா யிருக்கிறது என்பதையும் 'அருவிக்கரை ஆசிரமம்' தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ரா. வீ. மொழிபெயர்ப்பு நிபுணர் மட்டுமல்ல, அபாரமான அசல் கதைகள் எழுதியவர், எழுதி வருபவர் என்பதைத் தமிழ் உலகம் நன்கு அறியும். ஆகையால் அவரைப்பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. எனவே, வாசகர்கள் இனி கதையின் ரஸத்தைப் பருகத் தொடங்கலாம்.

கோபாலபுரம்,
சென்னை 8-1-53

ரா. நா.

முகவுரை

ஸ்ரீ சுதர்சன் ஹிந்தி மொழியில் எழுதிய 'அநுவிக்கரை ஆசிரமம்' என்னும் இந்தக் குறு நாவல் 'கல்கி' பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளி வந்தது.

பாரதத்தின் பெருமையைப் போதிக்கும் இந்நூலை நேயர்கள் உற்சாகத்துடன் பாராட்டினர்கள்; வரவேற்பு அளித்தார்கள். இது இப்பொழுது புத்தக உருவம் பெறுவதற்கும் நேயர்களேதாம் காரணம். முன் இரு நூல்களையும் போலவே, இதற்கும் பெரு மதிப்பு அளித்து நேயர்கள் எனக்கு உற்சாகம் ஊட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

என் வேண்டுகோளுக்கு இணங்கி இப் புத்தகத்துக்கு ரத்னச் சுருக்கமாக அழகிய முன்னுரை எழுதி அருளிய தமிழ் நாட்டுத் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ஸ்ரீ ரா. கி. அவர்களுக்கு என் இருதய பூர்வமான வணக்கத்தையும் வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப் புத்தக உருவத்தில் பிரசுரிப்பதற்கான அநுமதி அளித்து, உற்சாகம் ஊட்டிய 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கும், 'கல்கி' பத்திரிகையின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ டி. சதாசிவம் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

எனது நூல்களுக்கு அழகிய முறையில் புத்தக உருவம் கொடுத்து வரும் அமுத நிலையத்தாருக்கும் என் நன்றி.

'கல்கி' காரியாலயம்
சென்னை 8-1-53

ரா. வீழிநாதன்

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

அருவிக்கரை ஆசிரமம்

1. நான் ஓர் இந்தியன்

மாலை நேரம். நான் கப்பலின் மேல் தளத்தில் உட்கார்ந்து, மேல் திசையிலே மறையும் மாலைக் கதிரவன் அந்தி வானத்திலே அற்புதமாக அள்ளிச் சொரிந்து சிருஷ்டித்துக் கொண்டிருந்த வர்ண விசித்திர ஜாலக் காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தேன். அதே சமயம் யாரோ என் பின்னல் வந்து என் இரு தோள்களிலும் இலேசாகக் கைகளைப் பதியவைத்து அன்பு ததும்பும் இனிய குரலில், "மன்னிக்கவேணும், உங்கள் தனிமையைக் கலைக்க நேர்ந்ததற்காக!" என்றார்.

நான் பின்னல் திரும்பிப் பார்த்தேன். முகத்தில் இளநகை தாண்டவமாட அவன் தான் நின்று கொண்டிருந்தான். என் உள்ளத்தில் இனந் தெரியாத ஒரு இன்பத் துடிப்பு எழுந்தது. அவன் என்னுடன் மார்செயில்ஸிலேயே கப்பலேறி விட்டான். அவனுடைய உருவம், அழகிய தோற்றம், சுபாவம்-இவை கப்பலிலிருந்த அத்தனை பிரயாணிகளின் உள்ளத்திலும் ஒருவித வியப்பை உண்டாக்கியிருந்தன. 'எப்படியாவது அவனுடன் நாம் அறிமுகம் செய்து கொள்ள மாட்டோமா?' என்ற ஆசை எல்லாருடைய உள்ளத்தையுமே ஆட்கொண்டிருந்தது.

ஆனல் அவன் நாள் முழுவதும் தனித்தே இருந்து வந்தான். அவனுடைய கனிவான முகத் தோற்றமும் விசித்திரப் போக்கும் வசீகரண மந்திரத்தைப் போல என் உள்ளத்தை ஆகர்ஷித்து விட்டன. என்னையறியாமலே என் உள்ளம் அவனுடைய அன்புத் தளையில் கட்டுண்டது. 'எப்படியாவது இவனிடம் அறிமுகம் செய்து கொள்ள முடிந்து விட்டால், நாள் முழுவதும் இவனுடனேயே உட்கார்ந்திருக்கலாமே!' என்று எண்ணுவேன். விநாடிக்கு விநாடி, நிமிஷத்துக்கு நிமிஷம் என் உள்ளத்தில் அந்த ஆசை வலுப் பெற்றுக் கொண்டே வந்தது. இங்கிலாந்திலேயே வசித்து வந்ததனல் உள்ளத்தில் மேல் நாட்டு நாகரிகம் குடிகொண்டிருக்க வேண்டும். இல்லா விட்டால் இந்த மேல் பூச்சு நாகரிகம் இந்தியர்களிடம் ஏது? இந்தியர்கள் வெளி வேஷத்தை விரும்புகிறவர்களோ அல்லது அதற்குக் கட்டுப்பட்டு நடக்கிறவர்களோ இல்லையே! ஆனல் ஏன் அவன் எப்பொழுதும் ஏகாந்தத்தையே நாடுபவனுகவும் சொற்களை அளந்து உபயோகிக்கிறவனுகவும் இருந்தான்? யாரையும் அவன் பார்ப்பதும் இல்லை; யாருடனும் அவன் பேசுவதும் இல்லை. தான் உண்டு, தன் காரியம் உண்டு என்றுஇருந்தான்.

கப்பலில் உள்ள மற்றப் பிரயாணிகள் ஒருவருக்கொருவர் நண்பர்களாகி விட்டார்கள். ஆனல் அவன் மட்டும் எப்பொழுதும் தன் அறையேகதியாக இருந்தான்; அதிலேயே அடைந்து கிடந்தான். அவனே ஆங்கிலேயன். ஆனல் அவனுடைய உடைகளோ இந்தியர்களைப் போலிருந்தன. அவன் இந்திய உடையில் தெய்வீகக் களை பொருந்தியவனுகக் காட்சி அளித்தான். அதே போன்று ஆயிரக் கணக்கான, லட்சக்கணக்கான மக்கள் உடையணிந்து கொண்டு நான் பார்த்திருக்கிறேன். ஆனல் அந்த ஆங்கிலேயனுக்கு அந்த உடை உடலோடு ஒட்டி அமைந்திருந்ததுபோல, வேறு யாருக்கும் உடலோடு

ஒட்டி எடுப்பாக அமைந்து நான் இதுவரை பார்த்ததே இல்லை. நானே நவ நாகரிகத்தில் அதிகப் பற்றுதல் கொண்டவன். ஆனால் அப்படிப்பட்ட என்னுடைய உள்ளமே அந்த ஆங்கிலேயனின் எளிமையைக் கண்டு அயர்ந்து விட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அவனைப் பார்த்தபின்தான் எனக்கே நம் நாட்டு நாகரிகத்தின் மீது பற்றும் அபிமானமும் ஏற்பட்டன. நம் நாட்டு நாகரிகத்தின் பெருமையை எண்ணி எண்ணி நான் பூரித்தேன். அடிக்கடி என் கூட்டுப் பிரயாணிகளைப் பார்த்து, "பார்த்தீர்களா? அவனுக்கு நம் நாட்டு பொருள்கள் தான் பிடித்திருக்கின்றன!" என்று சொல்லி மகிழ்வேன். ஆனால் அவனுக்கு நம் நாட்டுப் பொருள்களின் மீது அவ்வளவு பற்றுதல் ஏற்படக் காரணம்? அந்த ரகசியந்தான் யாருக்குமே விளங்கவில்லை. அவனுடன் பேசிப் பழக வேண்டுமென்ற கட்டுக் கடங்காத அவா என்னை உந்தித் தள்ளியது. ஆனால் ஒவ்வொரு தடவையும் அந்தப் பாழாய்ப் போன நவ நாகரிகம் என் குரல் வளையைப் பிடித்துப் பேச வொட்டாமல் அடித்து விட்டது. ஆகவே, அப்பொழுதெல்லாம் அந்த நாகரிகத்தின் மேல் எனக்கு எரிச்சல் எரிச்சலாகப் பற்றிக்கொண்டு வந்தது.

அவனை என்னெதிரே கண்டதும், என் மனம் மலர்ந்தது; அகம் மகிழ்ந்தது. "இல்லை, ஸார்! இந்தத் தனிமை என்னைக் தேள்போலக் கொட்டிக் கொண்டிருந்தது. நல்லவேளையாகத் தாங்கள் கைகொடுத்துக் காப்பாற்ற வந்தீர்கள். தங்களுக்கு என் நன்றி!" என்றேன் இலேசாகச் சிரித்தவாறே.

அவனும் சிரித்து, "நீங்கள் எவ்வளவு நல்லவர்! உங்களைப் பார்த்துப் பேசிப் பழக வேண்டும் என்று எனக்கு எவ்வளவு கொள்ளை ஆசை, தெரியுமா?" என்றான்.

"அப்படியானால் தாங்கள் என் அறைக்கு வருகிறீர்களா!" என்று நான் அவனைக் கேட்டேன்.

"ஓ! தாராளமாக!" என்று முகத்தில் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் பொங்கப் பதில் அளித்தான் அவன்.

நானும் அவனும் என் அறைக்குச் சென்று உட்கார்ந்து லோகாபிராமமாகப் பேசலானேம். நான் கனவிலும் காணுத, சற்றும் எதிர்பாராத அந்த ரகசியம் அப்பொழுதுதான் வெளியாயிற்று.

"நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்களோ?" என்று நான் அவனைக் கேட்டேன்.

"நானு? முல்தானுக்கு!" என்றான் அவன்.

"நீங்கள் அங்கே ஏதாவது உத்தியோகத்தில் இருக்கிறீர்களோ? எந்த இலாக்காவில் இருக்கிறீர்கள்?" என்று நான் அவனை விசாரித்தேன்.

"இல்லை, நான் அங்கே உத்தியோகத்தில் இல்லை. என் வீடே அங்குதான் இருக்கிறது!" என்றான் அவன்.

"உங்கள் வீடா?"

"ஆமாம், என் வீடுதான். ஏன், உங்களுக்கு நான் சொல்வது வியப்பை அளிக்கிறதோ?" என்று முகத்தில் வியப்புக்குறி தாண்டவமாடக் கேட்டான் அவன்.

"ஆமாம். நிஜமாக வியப்பாகத் தான் இருக்கிறது. ஏனென்றால் இந்தியாவுக்கு முதல் தடவையாக நீங்கள் போகிறீர்களாக்கும் என்று நான் இதுவரை எண்ணிக் கொண்டிருந்தேன்!" என்றேன்.

"நீங்கள் எண்ணியதில் தவறு ஒன்றும் இல்லை; சரிதான். இதற்கு முன்பு நான் இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்ததேயில்லை!" என்றான் அவன்.

"என்ன?"

கார்முகில்கள் சூழ்ந்து விட்டால் இரவின் இருள் இன்னும் அதிகமாகி விடுகிறதல்லவா? அதுபோல் என் வியப்பு இன்னும் பன்மடங்கு அதிகமாகியது. அப்பொழுது என் முகம் வேறு அதற்குச் சரியான எடுத்துக் காட்டாக விளங்கியிருக்க வேண்டும்.

அவன் சிரித்துவிட்டு, "அப்படியானால் என்னை நீங்கள் ஆங்கிலேயன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"தங்களை வேறு விதமாக எண்ணுவதற்கு வேறு எதுவும் முகாந்தரம் இருப்பதாகத் தோன்றவில்லையே!" என்றேன் நான்.

"அப்படி நீங்கள் நினைப்பதுதான் தவறு!"

"அப்படியானால் நீங்கள்....."

"நான் ஓர் இந்தியன்தான்!"

நடக்கக்கூடாத காரியம் நடந்து விட்டது போல், நிகழக்கூடாத நிகழ்ச்சி நிகழ்ந்து கேள்விப்பட்டது போல் நான் உட்கார்ந்த இடத்திலேயே ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்தேன். பிறகு எனக்கு ஏற்பட்டிருந்த அந்த வியப்புச் சிறிதும் தணியாதவனாய், "நான் பல ஊர்த் தண்ணீர் குடித்திருக்கிறேன். இதுவரை என் கண்கள் என்னை ஏமாற்றியதில்லை. இவ்விஷயத்தில் இதுவரை எனக்கு என்மேல் பூரண நம்பிக்கை இருந்தது. குறைந்த பட்சம் ஆளைப் பார்த்து ஊரைச் சொல்லும் விஷயத்தில் நான் ஏமாறவே மாட்டேன் என்று எண்ணி இறுமாந்திருந்தேன். ஐரோப்பாவில் உள்ள தனித் தனி மாகாணத் தவர்களைக்கண்டு பிடிப்பதில்கூட நான் இதுவரை சிறிதும் தவறினதில்லை. ஆனால் இப்படி ஒரு இந்தியனையே கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடும் நிலைமை எனக்கு ஏற்பட்டது இதுதான் முதல் தடவை. இம்மாதிரி என்றைக்காவது ஒருநாள் நடக்கக் கூடும் என்று நான் கனவில் கூட நினைத்ததில்லை!" என்றேன். அப்பொழுது வெட்கத்தினால் என் முகம் சிவந்தது. தலையைக் குனிந்துகொண்டு விட்டேன்.

ஆனால் அடுத்த கணமே தலையை நிமிர்த்தி, "ஆனால் நீங்கள் இந்தியாவுக்குப் போவது இதுதான் முதல் தடவை என்று சொன்னீர்களே!" என்று கேட்டேன்.

"ஆமாம், இது முதல் தடவைதான்!" என்று அவன் சாந்தமாகப் பதில் அளித்தான்.

"ஆமாம், உங்களுக்கு இந்திய மொழிகளில் ஏதாவது தெரியுமோ?" என்று கேட்டேன்.

"தெரியாது!"

அதற்குமேல் பேச எனக்கு நா எழும்பவில்லை. ஆனால் என் கண்களில் மட்டும் வியப்பு இன்னும் பன் மடங்கு அதிகமாகி விட்டது. ஆகவே, நான் சிறிது நேரத்துக்குப் பிறகு, "ஆமாம், நீங்கள் இந்தியர்; ஆனால் உங்கள் நிறம் ஆங்கிலேயர்களைப் போல் அவ்வளவு சிவப்பாகவும் வெளுப்பாகவும் இருக்கிறது. நீங்கள் இந்தியர்; ஆனால் நீங்கள் இந்தியாவைப் பார்த்ததில்லை. நீங்கள் இந்தியர்; ஆனால் உங்களுக்கு ஒரு இந்திய மொழியும் தெரியாது. இப்படி இருக்கும்பொழுது நான் உங்களைப் பற்றி என்னவென்று எண்ணுவது?" என்றேன்.

அந்த ஆங்கிலேயன் அதற்குப் பதிலாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, "இப்பொழுது ஒன்றும் கேட்காதீர்கள். இன்னொரு சமயம் சாவகாசமாக என் கதையைச் சொல்லுகிறேன்!" என்றான்.

"இல்லை, இல்லை! இப்பொழுதே சொல்லுங்கள். கேட்டால்தான் என் மனம் நிம்மதி அடையும். உங்கள் கதையைக் கேட்டு முடிக்காத வரையில் எனக்குத் தூக்கம் பிடிக்காது!" என்றேன்.

அவன் மௌனம் சாதித்தான். முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவனிடம் இவ்வளவு சீக்கிரமாக நம் கதையைச் சொல்லுவது உசிதமா, இல்லையா என்று அவன் யோசித்தானோ, என்னவோ? அவனுடைய முக பாவம் அவன் அம்மாதிரி சிந்தனையில்தான் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அவன் வெகு நேரம் பேசாமலே உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளத்தில் அப்பொழுது ஒரு பெரும் போர் நிகழ்ந்திருக்க

வேண்டும் என்பதையும் அடிக்கடி மாறுபட்டுக் கொண்டிருந்த அவனுடைய முக பாவம் உணர்த்தியது. அவன் மன்னிப்புக் கோரினான். "இன்னொரு சமயம் சொல்லுகிறேன். இப்பொழுது என்னை விட்டு விடுங்கள்" என்று என்னிடம் எவ்வளவோ மன்றாடினான்.

ஆனால் நான் விடுவதாயில்லை. என்னுடைய இந்தியப் பிடிவாதமும் ஆக்கிரஹமும் அவனை மேற்கொண்டு பேச விடாமல் தடுத்துவிட்டன. ஆகவே, அவன் வேறு வழியின்றி, "என் கதையை முதல் முதலாக உங்களிடம் தான் சொல்லுகிறேன். இதுவரை யாரிடமும் சொன்னதில்லை. எத்தனையோ பேருக்கு 'அப்புறம் சொல்லுகிறேன். அப்புறம் சொல்லுகிறேன்!' என்று காலந் தாழ்த்தி வந்திருக்கிறேன். அப்புறம் ஆர்வம் குன்றிப்போனதால் அவர்கள் என்னிடம் கதை கேட்க முன் வந்ததில்லை. ஆனால் உங்கள் பிடிவாதத்துக் கெதிரே 'மாட்டேன், முடியாது!' என்று சொல்ல என் மனம் முன் வர மாட்டேன் என்கிறது. நீங்கள் இந்தியப் பத்திரிகைகளுக்குக் கதை எழுதுவது உண்டு என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஒரு வேளை என் வாழ்க்கை உங்களுக்கு மனோரஞ்சகமாகத் தோன்றக் கூடும். அப்படியிருந்தால் உங்களுக்கு ஒரு கதைக்கு விஷயம் ஆயிற்று அல்லவா? ஆகவே என் வாழ்க்கைக் கதையைத் தங்களிடம் சொல்லுகிறேன்!" என்ற பூர்வபீடிகையுடன் ஆரம்பித்தான்.

நான் கவனமாக அவன் கதையைக் காது கொடுத்துக் கேட்கும் நோக்கத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

★

சகோதரா! எனது பூர்விகம் மூல்தான் தான். ஏனெனில் என் தாத்தா மூல்தானில் தான் வசித்து வந்தார். அங்கே இப்பொழுதுகூட ஜனங்கள் அவர் பெயரைக் கேட்டாலே தெய்வமாகப் பூஜித்து வருகிறார்கள். அவர் பணக்காரராயிருந்தார் என்பதற்காகமட்டும் அல்ல; அவர்

நன்னடத்தைக்கும் நாணயத்துக்கும் பெயர் போனவராகத் தலைசிறந்து விளங்கினார் என்பதற்காகத்தான். இந்தக் காரணங்களால் என் தாத்தாவுக்கு முல்தான் முழுவதிலும் நல்ல செல்வாக்கு இருந்து வந்தது. அவர் வீதி வழியே எங்கேயாவது சென்றால் போதும், ஜனங்கள் அவரைத் தரிசிப்பதற்காக ஏகக் கூட்டமாகக் கூடி விடுவார்கள். அவர் எந்த வழக்குக்காவது தீர்ப்புச் சொன்னால் சொன்னதுதான். அதை மீற யாருக்குமே துணிவு ஏற்படாது. எந்த விஷயத்திலும் அவர் கீறிய கோட்டுக்கு யாரும் வேறு சொல்ல மாட்டார்கள். எங்கள் சமூகத்தினரிடையே அவருக்கெதிரே தலை நிமிர்ந்து வார்த்தையாடும் துணிவு இதுவரை யாருக்குமே உண்டானதில்லையாம். அவர் இறந்த அன்றைக்கு நகரம் முழுவதும் கடையடைப்புச் செய்து ஹர்த்தால் அநுஷ்டித்தார்களாம். பிரபலமான செய்தித் தாள்கள் அவருடைய மரணத்தைக் குறித்து வருத்தம் தெரிவித்து நினைவு மலர்கள் வெளியிட்டன என்றும் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுது என் தகப்பனார் இங்கிலாந்தில் இருந்தார். தம் தகப்பனாரின் மரணச் செய்தி கேட்டு அவர் மிகவும் மனம் உடைந்து போய்விட்டார். வெகுநாட்கள் வரை அவர் வீட்டை விட்டு வெளியே தலைகாட்டவே இல்லை. எப்பொழுதுபார்த்தாலும் தம்தந்தையை நினைத்து அழுதவண்ணமாகவே இருந்தாராம். அவர் இங்கிலாந்துக்குத் தொழிற் கல்வி கற்பதற்காகப் போயிருந்தாராம்.

என் தாத்தா இறந்துவிடவே, என் தாய் என் தகப்பனாரை உடனே திரும்பி வந்து விடுமாறு கூறிக் கடிதம் எழுதினாளாம். 'என் தந்தை இல்லாத ஊருக்கு எனக்குத் திரும்பி வரப் பிடிக்கவே இல்லை' என்று அவர் அதற்குப் பதில் கடிதம் எழுதினாராம்.

என் தாயோ சுத்தப் பட்டிக்காடு. அவளுக்கு அதிகம் எழுதப்படிக்கக் கூடத் தெரியாது. 'இங்கிலாந்து

எங்கே இருக்கிறது? அங்கே போவதென்றால் எப்படிப் போவது?' என்பதெல்லாம் கூட அவளுக்குத் தெரியாது. கணவனிடமிருந்து இம்மாதிரிக் கடிதம் வந்துவிடவே, அவளுக்குத் தன் உயிரே உடலை விட்டுப் பிரிந்து விட்டது போலத் தோன்றியது. ஆனால் அவள் அதற்காக அழவோ வருத்தப்படவோ இல்லை. நிலபுலன்களின் பொறுப்பை நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு குமாஸ்தாவிடம் ஒப் படைத்து விட்டுத் தைரியமாக இங்கிலாந்துக்குப் பிர யாணமாகி விட்டாள். மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்களே, அது எவ்வளவு உண்மை! கணவனையே தெய்வமாக நினைத்துக் கொண்டிருந்த — ராமன் இருக்கும் இடம் அயோத்தி என்று எண்ணிக் கொண்டிருந்த — அவளுக்கு அன்பு வழி காட்டிவிட்டது. என் தந்தைக்கு அவளுடைய அன்பிலும் கற்பிலும் காத லிலும் பரிபூரண நம்பிக்கை இருந்தது. ஆனால் அவள் இவ்வளவு தூரம் தனியாக இங்கிலாந்துக்கு வந்துவிடு வாள் என்ற நம்பிக்கை தான் அவருக்கு இல்லை. ஆனால் அன்பினால் செய்ய முடியாத காரியம் ஒன்று உண்டா?

இங்கிலாந்துக்கு வந்த பின்னரும் அவள் எத் தனையோ தடவை இந்தியாவுக்குத் திரும்பிப் போய் விடு வோம் என்று என் தந்தையிடம் சொல்லியிருக்கிறாள். ஆனால் அவருக்கு இங்கிலாந்தின் குளிர் நிலையும் சீதோஷ்ண ஸ்திதியும் மனத்துக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டன. ஆகவே, அவர் இங்கிலாந்தை விட்டு இந்தியாவுக்குத் திரும்பிப் போக மனம் ஒப்பவில்லை. அவர் லிவர்பூலில் ஒரு கடையைத் திறந்து அங்கே வேலை செய்யத்தொடங்கினார். சில தினங்களுக்குள்ளேயே வியாபாரம் நன்கு வளர்த்து விட்டது. பணம் தண்ணீர்ப் பிரவாகத்தைப் போல வந்து குவியத் தொடங்கியது. வரும்படிக்கு ஒருவழி ஏற்படா விட்டால் ஒரு வேளை என் தகப்பனார் இந்தியாவுக்குப் போய்விடச் சம்மதித்திருப்பாரோ, என்னவோ? ஆனால்

கடை வியாபாரம் வலுத்துவிடவே, அது அவருக்குக் காலைக் கட்டிப் போட்டது போலாகிவிட்டது. ஆகவே, அவர் இந்தியா செல்லும் எண்ணத்தை மனத்திலிருந்து அறவே அகற்றிவிட்டார். இந்தியாவில் உள்ள நிலபுலன் களைக் குமாஸ்தாவையே கவனித்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவர் இங்கிலாந்திலேயே இருப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

சகோதரா! அந்த நாட்களில்தான் நான் பிறந்தேன். நான் பிறந்ததைக் குறித்து என் தாய் தந்தையருக்கு ஏற் பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை. பிள்ளைச் செல்வத் தைப் பெற்றுவிட்டால் பெற்றோருக்கு மகிழ்ச்சி ஏற்படு வது இயல்புதானே? எனக்கு ஹரிஸேன் என்று பெயர் வைத்தார்கள். என்னை அன்புடன் வெகு செல்வமாக வளர்த்தார்கள். நான் பெரியவனானேன். ஆனால் எனக்கு நான் இந்தியன் என்பது தெரியவே தெரியாது. நான் என்னை ஒரு ஆங்கிலேயனாகவே தான் எண்ணி வந்தேன். இச்சமயத்தில் தான் என் தாய் இறந்துவிட்டாள். என் தகப்பனாருக்கும் இந்தியாவுக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருந்த அவள் இறந்துவிடவே, என் தகப் பனாருக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போய்விட்டது. அவர் முழுக்க முழுக்க ஆங்கிலேயராகவே மாறிவிட்டார். அவர் என்னை ஹரிஸேன் என்று கூப்பிடா மல் ஹாரிஸன் என்று அழைத்து வந்தார். தம்மைக்கூடக் கபூர் என்று சொல்லிக் கொள்ளாமல் கூப்பர் என்று சொல் லிக் கொண்டார். இதற்கெல்லாம் காரணம் என்ன, தெரியுமா? பாரதியத்தின் மீது ஆங்கிலேயம் வெற்றி கொண்டதுதான். ஆனால் ஐயோ! என் அம்மா மட்டும் உயிரோடு இருந்தால், நான் இந்தமாதிரித் துர்ப்பாக்கியம் பிடித்த நாட்களைக் காண நேர்ந்திராதல்லவா? நான் அன் னிய தேசத்தவன், அநாதை என்பது மட்டும் அல்ல; தேசப் பற்று என்னும் தனத்தை, மதிப்பில்லா மாணிக்

கத்தை, ஐசுவரியத்தை இழந்த அபாக்கியவானுக அல்லவா இருந்தேன்! 'நாம் இந்தியன்'- என்ற நினைப்பு எனக்கு இருந்தால் தானே? தேசப் பற்று என்பது என்னவென்று தெரிந்தால் அல்லவா நாட்டின் நினைவு இருப்பதற்கு? இவ் விதம் பதினெட்டு வருஷங்கள் ஓடிவிட்டன. நான் கல் லூரியில் கல்வி பயிலும் பொருட்டுச் சேர்ந்தேன். அப் பொழுதுதான் முதல் முதலாக 'நான் இந்தியன்' என்னும் விஷயம் எனக்குத் தெரிய வந்தது.

2. இன்ப முகம்

சகோதரா! நான் இப்பொழுது சொல்லப் போகும் விஷயம் உனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். என்மீது உனக்கு வெறுப்பை ஊட்டலாம். நான் உண்மையை ஒளிக்காமல் சொல்லுகிறேன் என்பதற்காகவாவது என்னை மன்னித்துவிடு. நான் இந்தியன் என்பது தெரிந்த பொழுது எனக்கு ஏற்பட்ட மனவேதனையைச் சொல்லி முடியாது. ஏனெனில் நான் இந்தியர்களைக் கிள்ளுக்கீரை யாகக் கருதி வந்தேன். இந்தியாவைப் பொறுத்தவரை என் அபிப்பிராயங்கள் மிக மிக மட்ட ரகமாக இருந்தன. இந்தியாவை ஒரு தேசமாக எண்ணக்கூட என் மனம் மறுத்தது. ஆகவே, நான் இந்தியன் என்று தெரிந்த பொழுது, நான் என் பார்வையிலேயே வீழ்ந்தவனாகி விட்டேன். இந்தியத் தாய் தந்தையருக்குப் பிள்ளையாகப் பிறந்த நாம் மிக மிகத் தாழ்ப்பாக்கிய சாலியாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணி மிகவும் மனம் புழுங் கினேன். தங்கம் என் கண்களுக்குப் பித்தளையாகத் தோற்றமளித்ததுதான் இதற்குக் காரணம். நான் என் ஜாதியை யாருக்கும் தெரியப்படுத்தியதில்லை. வெள்ளை யுடையில் கறை பட்டுவிட்டால் மூடி மூடி மறைத்து வைத்துக் கொள்ளுவது போல் நான் என் ஜாதியைப் பொறுத்த ரகசியத்தை மூடி மூடி மறைத்து வைத்துக்

கொள்ளலானேன். அந்த நாட்களை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் கூட உள்ளமும் உடலும் நடுங்குகின்றன; மயிர்க் கூச்செறிகின்றன. தலை வெட்கத்தினால் தொங்கிவிடுகிறது. ஆனால் அந்தக் காலத்தில் என் நிலை இந்த மாதிரி இல்லை. நாம் இந்தியன் என்ற எண்ணம் எழும்போதெல்லாம் எனக்கு இருதயமே வெடித்து விடும் போலிருந்தது. அவலட்சணத்திலும் அவலட்சணமான மனிதனுக் கெதிரே கண்ணாடியைக் காட்டினால், அவன் வெட்கித் தலைகுனியத் தானே செய்வான்? அதுபோல நான் வெட்கிக் கூனிக் குறுகிப் போவேன். இதெல்லாம் எதற்குச் சொல்லுகிறேன், தெரியுமா? அந்தக் காலத்தில் எனக்கு இந்தியன் என்றால் அவ்வளவு வெறுப்பு. ஆகவே, நான் என் பெயரை ஹாரிஸன் கூப்பர் என்றே சொல்லி வந்தேன். கையெழுத்துப் போட நேரும் பொழுதுகூட எச். கூப்பர் என்று தான் போடுவேன். நான் இந்தியன் என்னும் விஷயம் என் நண்பர்களில் யாருக்குமே தெரியாது. நானும் என்னை இந்தியன் என்று அதுகாறும் வெளியிட்டுக் கொண்டதில்லை; வெளியிட்டுக் கொள்ள விரும்பியதும் இல்லை.

அந்தக் காலத்தில் எல்லாம் எனக்கு இந்தியர்கள் மனிதர்களாகவே தோன்றியதில்லை. குற்றம் புரிந்து குஷி நிரப்பும் ஆசாமிகளையும் இந்தியர்களையும் ஒன்றாகவே நான் நினைத்து போட்டு வைத்திருந்தேன். எப்பொழுதாவது இந்தியக் கனவான் எங்கள் கடைக்கு வந்து விட்டால், நான் அவரை உற்று உற்றுக் கவனிப்பேன். இவருக்கும் நமக்கும் எந்தெந்த விஷயங்களில் ஒற்றுமை – வேற்றுமை இருக்கின்றன என்பதை ஆராய முற்பட்டு விடுவேன். அப்பொழுது என் நிறம், நடை உடை, பாவனை, கண்கள், பேச்சு எல்லாமே வெவ்வேறு விதமாக இருப்பதாகத் தோற்ற மளிக்கும். அப்புறந் தான் மனம் எனக்குச் சற்று நிம்மதி அடையும். வழக்கில் வெற்றி

கண்டவன் நிம்மதியாக நீண்ட மூச்சு விட்டு 'அப்பாடா!' என்று தன் சிரமத்தைத் தீர்த்துக் கொள்ளுவானே, அது போல நான் நிம்மதியான நீண்ட மூச்சு விட்டு என் மனத்தை அழுத்தி வந்த அந்தச் சுமையை ஒருவாறு குறைத்துக் கொள்ள முயல்வேன்.

ஆனல் என்றைக்காவது ஒரு நாள் நம் ஜாதி விஷயம் ஜனங்களிடம் வெளிப்பட்டு விட்டால் என்ன ஆகும் என்ற எண்ணம் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதை யாகத் திரும்பத்திரும்ப என் உள்ளத்திலே இடம் பெறும். உடனே என் இருதயத்தைப் பெரும் சுமை அழுத்தத் தொடங்கி விடும். அப்புறம் என் தலைவிதியை எண்ணி என்னை நானே நொந்து கொள்ளுவேன். எதற்காக இந்தி யனுகப் பிறந்தோம் என்ற எண்ணம் என் உள்ளத்தை வாட்டிப் பிழியத் தொடங்கி விடும்.

கடைசியில் ஒரு நாள் நான் பயந்த விதமே ஆகிவிட் டது. என் ஜாதியைப் பற்றிய ரகசியம் ஒரு நாள் என் கல்லூரித் தோழர்களிடையே வெளிப்பட்டு விட்டது.

அன்று ஒரு நாள் சாயந்திரம் நான் நண்பன் ஒருவன் வீட்டுக்குத் தேநீர் அருந்துவதற்காகப் போயிருந்தேன். என் நண்பன் என்னைப் பார்த்ததும், "ஹலோ! இன்று எனக்கு ஒரு புதிய விஷயம் தெரிய வந்தது!" என்றான்.

அவன் அதைச் சொன்னதுமே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டியது. நான் பதற்றத்துடன், "என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"ஆனல் அதில் எனக்கு இன்னும் நம்பிக்கை உண் டாகவில்லை!" என்றான் அவன்.

அவன் விஷயத்தைச் சொல்லாமல் பூர்வ பீடிகை போட்டுக் கொண்டே போனது என் மனத்துக்கு இன் னும் அதிகப் பரபரப்பை அளித்தது. "விஷயம் என்ன? விவரமாகச் சொல்லேன்!" என்றேன் துடிப்புடன்.

"கோபித்துக் கொள்ள மாட்டாயே?"

"மாட்டேன்!" என்று ஒப்புக்குச் சொன்னேனேனே ஒழிய என் உள்ளத்துள்ளே தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது.

"உனக்குக் கிராஸைத் தெரியும் அல்லவா?" என்று அவன் தயங்கியவாறே கேட்டான்.

"அவனைத் தெரியாமல் என்ன? மிகமிக நன்றாகத் தெரியுமே!" என்றேன்.

"நீ இந்தியன் என்று அவன் இன்று கல்லூரியில் சொல்லிக் கொண்டிருந்தான். ஏன் ஹாரிஸன்! இதென்ன, அவன் சொல்வது உண்மைதானா?" என்று கேட்டான்.

அச்சொற்களைக் கேட்டதுதான் தாமதம்; என் கண்களில் தீப்பொறி பறக்கத் தொடங்கிவிட்டது. என்னை எனக்கெதிரிலேயே நேருக்கு நேர் யாரோ அவமானப் படுத்திவிட்டது போன்ற உணர்ச்சி எழுந்து உள்ளத்திலே தீப்பிழம்பைக் கக்கத் தொடங்கி விட்டது. அச்சமயத்தில் என்கையில் துப்பாக்கியும் இருந்தது. கிராஸும் என் கண்களில் பட்டிருந்தானானால், அவனை அங்கேயே தீர்த்துக் கட்டி விட்டுத்தான் மறுகாரியம் பார்த்திருப்பேன். என் ஜாதியை மறைக்க நான் என்ன வெல்லாம் பாடுபட்டேன்! என் ஜாதியின் ரகசியத்தை மூடி மூடி எவ்வளவு ஜாக்கிரதையாக மறைத்து வந்தேன்! கடைசியில் ஒரு நொடியில் என் பிரயத்தனங்கள் அவ்வளவும் வீணாகி இப்படி ரகசியம் வெளிப்பட்டு விட்டதே! நான் இவ்வளவு நாளும் மூடி மூடி மறைத்து வந்த என் ஜாதி ரகசியம் எல்லோருக்கும் தெரிந்த, வெட்ட வெளிச்சமான பகிரங்க ரகசியமாகவா ஆக வேண்டும்? இந்தப் பாவத்துக்கு நான் என்ன செய்வது?

ஆனால் நான் எப்படியோ சிரமப் பட்டுத் துணிவை வர வழைத்துக் கொண்டு, "அந்தப் பயல் பொய் சொல்கிறான். அதற்கு ஏற்ற தண்டனையை ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவன் அநுபவித்தே தீரவேண்டும்!" என்று கறுவியவாறே கூறினேன்.

ஏதோ மேலுக்கு இப்படிச் சொல்லிவிட்டேனே ஒழிய மனத்துக்குச் சிறிதும் அமைதி கிட்டவில்லை. மறு நாள் கல்லூரி செல்லும் நேரம் வந்ததும் என்னை வெட்கம் பிடுங்கித் தின்றது. 'நாம் இந்தியனுகப் பிறந்து எவ்வளவு பெரிய தவறு இழைத்துவிட்டோம்?' என்பதை நினைத்த மாத்திரத்தில் என் உள்ளம் புழுங்கியது; உடல் குன்றியது; தலை வெட்கத்தினுல் கவிழ்ந்தது. அவ்வளவு தான். அதற்குப் பிறகு கல்லூரிக்குப் போக வேண்டும் என்ற எண்ணமே என்னை விட்டு அகன்றுவிட்டது. நான் அத்துடன் படிப்புக்கு மூற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் கடை வேலைகளைக் கவனிக்கலானேன். அதற்கு அடுத்த வருஷமே என் தகப்பனர் காலமாகிவிட்டார்.

இப்பொழுது என் கடைக்கு நான் தான் எஜமானன். நல்லதோ, கெட்டதோ, கஷ்டமோ நிஷ்டூரமோ, லாபமோ நஷ்டமோ எல்லாம் என் கையில்தான் இருந்தது. நான் என்ன செய்தாலும் என்னை ஏன் என்று கேட்க ஆள் யாரும் இல்லை. நான் வைத்ததுதான் சட்டம் என்று ஏற்பட்டுவிடவே, என் இஷ்டப்படி யெல்லாம் ஆட்டம் போடலானேன். அதிகாரம் கைக்கு வந்துவிட்டால் யாருமே ஆட்டம் போடுவது இயல்புதானே?

சகோதரா! நான் என் மனம் போன போக்குப்படி யெல்லாம் இந்த உலகத்தின் இன்பங்களை அநுபவித்தேன். கவிகள் இந்த உலகத்தின் எழிலை எத்தனையோ விதமாக வருணித்திருக்கிறார்கள். கவிகளின் வருணனையைப் போலவே, என் கண்களுக்கும் இந்த உலகம் எழில் மிக்க ஒரு சோலையாகக் காட்சி அளித்தது. சோலை என்றால் பூத்துக் குலுங்கும் பலவித விருக்ஷங்களும் பழங்களைத் தாங்கிப் பணிவாக நிற்கும் பலவகை மரங்களும் இருக்க வேண்டும் அல்லவா? பணம், பேரழகு, பருவம் இம் மூன்றும் உலகம் என்னும் சோலையின் மிக மிக இனிமையான பழங்களாக எனக்குத் தோற்ற மளித்தன. அம் மூன்றும்

என்னிடத்தில் ஏராளமாக வேண்டிய அளவு இருந்தன. ஆகவே, அவற்றைக் கொண்டு நான் நினைத்த விதமெல்லாம் இன்பங்கள் அநுபவித்து வந்தேன்.

நானே என்னைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து கொள்வதாக நினைத்து விடாதே. நான் சாதாரணமான ஆங்கிலேயர்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அழகுள்ளவனாக இருந்தேன் என்பதை என்னால் இங்கு சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஏன்? ஜனங்கள் கூட அப்படித்தான் எண்ணி வந்தார்கள். என் நிறத்தில் ஒன்றும் அவ்வளவு விசேஷம் இல்லை. ஆங்கிலேயர்களின் நிறமே வெள்ளையானது. எத்தனையோ ஆங்கிலேயர்கள் என்னைவிட வெள்ளை நிறத் தோல் படைத்தவர்களாக இருக்கத்தான் இருப்பார்கள். ஆனால் என்னிடத்தில் இருந்த இந்தியத் தோற்றமும் அதன் அழகும் ஆங்கிலேயர்களிடம் ஏது? அது மட்டுமா? பெண்களைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை என்னவென்று சொல்வது? அவர்கள் பெண்களைப் பெண்களாக மதித்தால் தானே? தங்களுக்கு இன்பம் தரும் கைப் பொம்மையாகத்தான் கருதினார்கள். அவர்களுடைய வெறியாட்டத்துக்கு எத்தனை பெண்கள் இலக்காகி இருப்பார்களோ, தெரியாது. ஆனால் நான் பெண்களை உடல் இன்பம் தரும் பாவைகளாகக் கருதவில்லை. அவர்களுடைய உள்ளத்துக்கு மதிப்புக் கொடுத்து அவர்களுடன் விளையாடினேன்; சிரித்துப் பேசி மகிழ்வெய்தினேன். ஆனால் நாகரிகத்தின் மரியாதைக்கு மீறி எதுவும் செய்யவில்லை.

கடைசியில் ஸ்டெலா என்னும் பெண் ஒருத்தி தன் அழகின் முழு பலத்தையும் பிரயோகித்து என் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டாள். அவளைச் சாதாரணப் பெண் என்று சொல்லுவது தவறு. அவள் அழகில் அப்ஸரஸை நிகர்த்திருந்தாள்! அழகில் ரம்பை, ஊர்வசி என்று இந்தியக் கதைகளில் வருணிக்கிறார்களே, அந்த

அழகிகள் கூட அவளிடம் அழகுக்குப் பிச்சை வாங்க வேண்டும். அவள் அழகு மனத்தை மயக்கும் திறன் உடையதாக இருந்தது. அவள் சாதாரண ஆங்கிலேயப் பெண்களைப் போல் மட்ட ரகமானவளாக எனக்குத் தோன்றவில்லை. பேச்சுக்குப் பேச்சுப் பல்லைக் காட்டிக் 'கல கல' வென்று சிரித்ததில்லை. அவள் தன் உதடுகளில் புன்னகையை வருவித்து இலேசாகத் தன் முத்துப் போன்ற பல் வரிசைகளைக் காட்டுவதே தனி அழகாக இருக்கும். அவள் அழகிலே நான் என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன். அதன் பலனாக அவளைக் கண்டாலே என் மனம் இறங்கத் தொடங்கியது.

ஸ்டெலா அடிக்கடி என் கடைக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள். அவள் கடைக்கு வந்துவிட்டால் எல்லோருக்கும் முன்னால் நான் அவளைத்தான் கவனிப்பேன். நான் அவளை எவ்வளவுக் கெவ்வளவு முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு அதிக நேரம் கடையில் தங்க வைக்க வேண்டும் என்பதற்காக இல்லாத முயற்சிகள் எல்லாம் எடுப்பேன். அறியாப் பாலகன் அழகிய பொம்மையிலே மனத்தைப் பறி கொடுத்து மதி இறங்கி நிற்பானே, அது போல நான் அவள் அழகில் மயங்கிக் கண் கொட்டாமல் அவளையே பார்த்தவாறு நிற்பேன். இப்படியாக எங்கள் காதல் கதையின் முதல் அத்தியாயமான அறிமுகப்படலம் ஆரம்பமாகியது. ஆரம்பமான அந்த அத்தியாயம் 'விடு விடு' என்று முன்னேறி எங்கள் இருவரையும் பாசக் கயிற்றில் பிணைத்து விட்டு முடிந்த சுவடே தெரியாமல் முடிந்து விட்டது. அதற்குப் பிறகு நாங்கள் இன்னும் வெகு சுதந்தரத்துடன் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசலானோம். அவள் ஒருநாள் வராமல் இருந்து விட்டால் என் மனம் அமைதி இழந்துவிடும். அவள் வரச் சிறிது நேரம் ஆகிவிட்டால்கூடத் தவியாய்த் தவிப்பேன். குடிகாரன், தான் குடிக்கும் போதைப் பொருள் குறிப்பிட்ட

நேரத்தில் கிடைக்கா விட்டால் எப்படி ஆலாய்ப் பறப் பான்? அதே நிலைமையைத்தான் நானும் அடைந்து விடுவேன். நான் அவளை எதிர் பார்த்து எதிர் பார்த்து மணிக் கணக்காக வாசற் படியிலேயே நிற்பேன். எனக் குக் கடை வியாபார விஷயத்திலே மனம் நாட்டம் கொள்ளாது. என் கண்கள் வழிமேல் விழி வைத்த வண்ணம் 'அவள் எப்பொழுது வருவாளோ?' என்று ஒருமைப்பட்ட உள்ளத்துடன் கனைப்படையாமல் நோக் கிக் கொண்டே இருக்கும். இவ்வளவு பக்தி சிரத்தை யுடனும் ஒருமித்த உள்ளத்துடனும் பக்தன் கூடத்தான் வழிபடும் தெய்வத்தை வணங்க மாட்டான் என்பதுதான் என் திட்டமான அபிப்பிராயம்.

ஆனல் ஒரு விஷயம். என் நிலைமை மட்டுந் தான் அப்படி இருந்தது என்பதில்லை. அவளுடைய நிலைமையும் என் நிலைமையையே தான் ஒத்திருந்தது. ஒருதலைக் காமமா யிருந்துவிட்டால் அதில் என்ன சுவாரஸ்யம் இருக்க முடியும்? என்னைப் பார்த்ததும் அவளுடைய முகத்திலே தனிக்கலை வீசத் தொடங்கிவிடும்; அவளுடைய அகன்ற கீண்ட அழகிய விழிகளிலே மின்னொளி பளிச்சிடும். அடிக்கடி அவள் என்னிடம், "உன்னையின்றி எனக்கு இன்பம் இல்லை. உன்னைப் பிரிந்து வீட்டுக்குச் சென்று விட்டால், என் அன்புக் கன்பான பொருளைப் பறி கொடுத்தவள் போலாகி விடுகிறேன். உனக்கு என்ன? நீ கடையில் உட்கார்ந்து உன் வேலையைக் கவனிக்கிறாய். நானே வீட்டுக்குப் போய் உன்னை எண்ணி எண்ணிக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கிறேன். என் நிலையை ஒருவாறு உணரவிரும்பினல், நீரில் வாழும் மீனைப் பிடித் துக் கொதிக்கும் மணலில் போட்டுப் பார் தெரியும்! அது போலத்தான் என் உள்ளம் உனக்காகத் துடியாய்த் துடித்துத் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறது!" என்று சொல்லுவாள்.

இதைக் கேட்கும் பொழுது நான் இறக்கை கட்டிக் கொண்டு சொர்க்கத்துக்கே பறந்து விடுவேன். உலகத்து இன்பங்கள் அனைத்தும் எனக்காகவே உண்டாக்கப்பட்டிருப்பதாகவும், என்னைப் போன்ற பாக்கியசாலி இந்த உலகத்திலேயே இருக்க முடியாது என்றும் எண்ணி நான் இறுமாந்து போவேன். ஆனால் சகோதரா! அந்தக் கனவு இப்பொழுது கலைந்து விட்டது. என்னைப் பிடித்த அந்த மோகினி என்னை விட்டு மாயமாக மறைந்து விட்டது. ஆனால் இன்றும் என் அசைக்கமுடியாத அபிப்பிராயம் என்ன, தெரியுமா? இன்றுவரை நான் ஸ்டூலாவைப் போன்ற அழகியைப் பார்த்ததே இல்லை என்பதுதான். இந்த அபிப்பிராயத்தை உள்ளத்திலிருந்து களைந்தெறிவதற்கு என்னால் ஆனமட்டும் முயற்சி செய்து செய்து பார்க்கிறேன். ஆனால் நான் அசைக்க அசைக்க அந்த அபிப்பிராயம் வேரூன்றுகிறதே ஒழிய, என் மனத்தை விட்டுச் சிறிதும் அகலுவதாயில்லை.

அழகில் அரம்பையர்களைப் பற்றி நான் எத்தனையோ கதைப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். உள்ளத்தைக் கிறங்க வைக்கும் கவர்ச்சி மிகுந்த அவர்களுடைய எழிலுருவத்தைப் படங்களில் பார்த்திருக்கிறேன். இருதயத்தைக் கொள்ளை கொள்ளும் அவர்களுடைய கடைக்கண் வீச்சை நாடகங்களிலே கண்டிருக்கிறேன். ஆனால் உண்மையில் இவை யெல்லாம் இந்த உலகத்திலேயே நிகழக் கூடியவை என்ற எண்ணம் இது வரை எழுந்ததில்லை. ஸ்டூலா என்னுடைய அந்த எண்ணத்தை அடியோடு மாற்றி விட்டாள். நான் கதைகளிலும் காவியங்களிலும் படித்திருந்த அவ்வளவு அங்க லட்சணங்களும் ஸ்டூலாவிடம் குடி கொண்டிருந்தன. அவளுடைய அந்த இன்ப முகம் இன்னும் என் கண் முன்னே நிற்கிறது. நகரத்தில் உள்ள எத்தனையோ லட்சாதிபதிகள் அவளுக்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கக் கூடச் சித்தமாயிருந்தார்கள். ஆனால்

அவள் என்னைத் தவிர வேறு யாரையும் கண் நிமிர்ந்து பார்க்கக்கூட விரும்பவில்லை. இதை அறிந்த நான் வெறி பிடித்தவன் போல் ஆடத் தொடங்கிவிட்டேன். ஸ்டூலா என்னுடையவள், என்னிடமிருந்து அவளை யாராலும் பிரிக்க முடியாது என்ற எண்ணம் உள்ளத்தில் வலுப் பெறவே, என்னுடைய மனமயில் தன் இன்பச் சிறகுகளை விரித்துக் களிநடம் புரியத் தொடங்கி விட்டது.

3. மனப் புண்ணுக்கு மருந்து

டிஸம்பர் மாதம் பிறந்தது. ஸ்டூலா கிறிஸ்துமஸுக்காகப் புது நகைகள் செய்யக் கொடுத்திருந்தாள். புத்தாடைகள் தைக்கக் கொடுத்திருந்தாள். அவள், தான் வாங்கும் ஒவ்வொரு பொருளையும் என்னிடம் கொண்டு வந்து காட்டி, தான் செய்யப் போகும் ஒவ்வொரு காரியத்தையும் என்னிடம் சொல்லிப் போவதைக் காணும் பொழுது, 'அப்பப்பா! அவளுக்கு நம்மிடந் தான் எவ்வளவு பிரியம்! என்னிடம் வந்து சொல்லாவிட்டால் அவளுக்கு மனம் கேட்காது; பொழுது போகாது போலிருக்கிறது. அன்பு என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்!' என்று எண்ணி எண்ணி நான் மிகவும் மனம் மகிழ்வேன்.

'நம்மிடம் உயிரையே வைத்திருக்கும் இவளுக்கு நாமும் ஏதாவது பரிசு வழங்க வேண்டாமா?' என்ற எண்ணம் என் உள்ளத்திலே ஒருநாள் எழுந்தது. ஆனால் என்ன பரிசு வழங்கலாம் என்று யோசித்தேன், யோசித்தேன்; அப்படி யோசித்தேன். உணவை மறந்து உடையை மறந்து, உறக்கத்தை மறந்து, பல நாட்கள் யோசித்தேன். இவ்வளவு யோசனைக்குப் பின் கடைசியாக, அவளுக்குப் பரிசு வழங்குவதற்காக ஒரு முத்து மாலையைத் தேர்ந்தெடுத்தேன். அந்த மாலை மிக மிக அழகாக இருந்தது

அதன் அழகைக் கண்டதும் நான் பூமியிலிருந்து ஒரே தாவாகத் தாவி வான வெளிக்கே பறந்து விட்டேன்.

பக்கத்திலே ஸ்டூலா முகத்திலே முத்து முறுவல் தாண்டவமாட நின்று கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. அப்படியே அவள் கழுத்தில் அந்த முத்து மாலையை அணிவித்து அவள் அழகை மனக் கண்களாலேயே பருக முயன்றேன். 'அவள் அணிந்ததனால் அந்த முத்து மாலையின் அழகு உயர்ந்ததா அல்லது அந்த முத்து மாலையை அணிந்ததனால் அவள் அழகு அதிகரித்ததா?' என்னும் பிரச்னையில் என் மனம் ஈடுபட்டது.

ஆனால் அதன் விலையைக் கேட்டபின் மண்ணுலகை மறந்து வான வீதியிலே பறந்து கொண்டிருந்த என் மனம் சிறகு ஒடிந்த பறவையைப் போல மறுபடியும் மண்ணிலே வந்து விழுந்தது. அப்பா! இவ்வளவு விலையா? ஒரு பவுனு, இரண்டு பவுனா? நூற்றிருபது பவுன் அல்லவா? இவ்வளவு பவுன் கொடுத்துப் பரிசு வாங்கி அவளுக்கு அளிக்க வேண்டியது அவசியந்தானா?

அதைக் கையிலேயே வைத்துக்கொண்டு வேறு மாலைகளைப் பார்க்கலானேன். ஆனால் அவற்றில் ஒன்றும் என் கண்களுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் பணத்தைப் பிரேமை வெற்றி கொண்டுவிட்டது. நான் அதே மாலையை வாங்கி ஸ்டூலாவுக்கு அன்பளிப்பாக அளித்து விட்டேன். அதைப் பார்த்த ஸ்டூலா அயர்ந்து போய் விட்டாள். பெருமை பூரிக்க என்னைப் பார்த்து, "தாங்கள் அன்புடன் அளித்த இந்த அன்பளிப்புக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?" என்றாள்.

"நீ இதை அணிந்து கொள்ளுவதுதான் எனக்கு நீ செய்யும் பெரிய கைம்மாறு!" என்றேன் நான்.

"அது போகட்டும், இதன் விலை என்ன?"

"இதன் விலைதானே! உன் கடைக்கண் பார்வை தான்!" என்றேன் பார்வையில் பிரேமையொளி பளிச்சிட.

"அதைக் கேட்கவில்லை. இதன் உண்மை விலையைக் கேட்கிறேன்!" என்றாள் அவள்.

"உண்மை விலை உனக்கு எதுவாயிருந்தால் என்ன? இதைக் கிறிஸ்துமஸ் பண்டிகை அன்றைக்கு அணிந்து கொள். இது உன் கழுத்தில் ஏறிவிட்டால் இதன் மதிப்பு இன்னும் பன்மடங்கு உயர்ந்துவிடும்!" என்றேன்.

ஸ்டூலாவின் உள்ளத்திலே அன்பும் ஆனந்தமும் ஏக காலத்தில் கரை புரண்டு பொங்கிப் பெருகவே, ஆவேசம் வந்தவள் போல என்னை இறுகத் தழுவிக் கொண்டாள். அப்பொழுது அவள் காட்டிய அன்பு எவ்வளவு உண்மையானதாகத் தோன்றியது, தெரியுமா? நான் மகுடி வசப்பட்ட நாகம் போல் அவள் அன்பின் அரவணைப்பில் கட்டுண்டு மதி மயங்கி நின்றேன். அதுவரை நான் என்னை எப்படித்தான் அடக்கி ஆண்டு வந்தேனோ, தெரியாது. அவள் அரவணைப்பில் கட்டுண்ட பின் என் இருதயம் என் வசம் இழந்து அவள் வசமாகிவிட்டது. நான் இன்ப போதையில், காதல் வெறியில் என் நிலையை ஒரேயடியாக மறந்துவிட்டேன்.

அடுத்த நிமிஷம் நான் ஸ்டூலாவின் இருமென் கரங்களையும் என் கரங்களில் ஏந்திக் கொண்டேன். அப்புறம் என்ன? நாங்கள் இருவரும் எங்களை மறந்து இன்ப லோகத்துக் கேளிக்கைகளில் ஈடுபட்டுவிட்டோம். இதுவே கடைசியில் என் பாக்கியத்தை நிர்ணயிக்கும் பரீக்ஷையாகவும் முடிந்து விட்டது. எனக்கு இது வரை பிரசங்கம் செய்து பழக்கம் இல்லை. அவ்வாறு பிரசங்கம் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டதில்லை. ஆயினும் அப்பொழுது என் வாயிலிருந்து வெளிவந்த சொற்களில் எங்கிருந்துதான் அந்தத் தேனின் இனிமை வந்து கலந்ததோ, தெரியவில்லை. ஸ்டூலா அதைக்கேட்டு அசந்து போய் அப்படியே மெய்ம்மறந்து உட்கார்ந்து விட்டாள். நான் அவளிடம் கல்யாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்

தேன். அவள் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. இலேசாக ஒரு புன்னகையை வீசி விட்டுத் தலை குனிந்து கொண்டாள். அப்புறம் என் ஆனந்தத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? எதிர்பார்த்த பதில்தான் எனக்குக் கிடைத்துவிட்டதே! நாணம் கலந்த மௌனம் சம்மதத்துக்கு அறிகுறிதானே? காதல் பரீக்ஷையில் தேறிவிட்ட மகிழ்ச்சியில் என் உடல் புல்லரித்தது; உள்ளம் உவகை எய்தியது. காரியம் கை கூடி விட்டால் மனத்தில் மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பே அல்லவா?

அன்று கிறிஸ்துமஸ் பண்டிகை. அந்தி நேரம். மக்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களைச் சுமந்து கொண்டு வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களுடைய முகத்தில் தாண்டவமாடிய மகிழ்ச்சியையும் உதடுகளிலே நெளிந்த புன்முறுவலையும் விழிகளிலே பளிச்சிட்ட ஒளியையும் பார்க்கப் பத்தாயிரம் ஜோடிக் கண்கள் கூடப் போதாதுதான். அன்றைக்கென்று உலகத்தில் உள்ள துக்கங்களும் தரித்திரங்களும், இந்த உலகத்தை விட்டு ஓடி ஒளிந்து கொண்டு விட்டனவோ என்றுதான் தோன்றியது. மக்கள் அவ்விதம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தனர். 'ஏழைக்கு ஏது இன்பம்?' என்று கேட்கத்தோன்றவில்லை. ஏழை பணக்காரன் என்று அன்றைய இன்பம் ஒருவேளை பாரபக்ஷம் பார்க்கவில்லையோ, என்னவோ? ஆனால்.....ஆனால் என் மனம் மட்டும் மிகவும் வாட்டமுற்றிருந்தது. அதற்குக் காரணம் என்ன என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பொழுதோ போய்க் கொண்டிருந்தது. ஆனால் அவளைக் காணோம். நான் வழிமேல் விழிவைத்த வண்ணம் அவள் வருகையையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். எதிர்பார்த்து எதிர்பார்த்து என் கண்கள் பூத்துப் போயினவே ஒழிய, ஸ்டூலா வரும் வழியாயில்லை. நான் அடிக்கடி அலுத்துக் கொண்டேன்.

'அவள் நம்மை ஒரு பொருட்டாக மதித்தால்தானே? மதித்திருந்தால் இத்தனை நேரம் எட்டு ஊருக்கு வந்திருக்க மாட்டாளா? இத்தனை நேரம் நம்மைத் தவிக்க விடுவாளா?' என்று ஒரு சமயம் எண்ணுவேன். இன்னொரு சமயம், 'அவளுக்கு என்ன வேலையோ? நம்மிடம் உயிரையே வைத்திருக்கும் அவள் வராமல் இருப்பாளா? கட்டாயம் வருவாள்! பெண்களுக்கு அலங்காரம் செய்து கொள்வதென்றால் அதிக நேரம் பிடிக்கும் என்று சொல்வார்களே! ஒரு வேளை அவள் அலங்காரம் செய்துகொள்வதில் ஈடுபட்டிருக்கலாம் அல்லவா?' என்று எண்ணி மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்வேன். அது மட்டும் அல்ல; அவள் அலங்காரம் செய்துகொள்ளும் அழகை மனக் கண்களால் கண்ணுற்று ரசிக்கவும் தொடங்கிவிடுவேன்.

இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பொழுதுதான், 'இனிமேல் அவள் வந்தால்கூட அவளுடன் முகங்கொடுத்துப் பேசக்கூடாது' என்று முடிவும் கட்டினேன். இதே சமயம் யாருடைய காலடி ஓசையோ கேட்டது. நம்பிக்கை இழந்திருந்த இருதயம் பட படத்தது. கண்கள் வாசற் புறம் ஓடி, 'யார் வருகிறார்கள்?' என்று பார்த்தன. அவள்! ஆம், அவளேதான் வந்திருந்தாள்! ஆனால் இது என்ன? நான் எதிர்பார்த்தபடி மலர்ந்த முகத்துடனும் சிரித்த உதடுகளுடனும் அவள் வரவில்லையே, ஏன்? உள்ளம் உடைந்து போன, வருத்தமே உருவான ஏமாற்றச் சிலையாக அல்லவா அவள் வந்திருந்தாள்! இதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?

அவளுடைய அந்த நிலைமையைக் கண்ணுற்றதும் என் கோபம் - தாபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து ஓடிவிட்டன. இருதயத்தின் ஆழத்திலே அக்ஞாத வாசம் செய்யப் புகுந்திருந்த அன்பு அந்தக் காட்சியைக் காணப் புழுங்கியது. அதற்கு மேல் என்னால்

அவளைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. நான் ஓடிப் போய் அவளை அணைத்துக் கொண்டேன். பிறகு பதற்றமுற்ற குரலில், "ஸ்டெலா!" என்று அழைத்தேன்.

அவள் வாய் திறந்து ஒன்றும் பதில் பேச வில்லை. ஆனால் அவளுடைய கண்களிலிருந்து நீர் பொல பொல வென்று உதிர்ந்தது.

"ஆச்சரியமா யிருக்கிறதே! இன்றைக்கு என்னிடம் வந்து நீ இப்படி அழுகிறேயே, காரணம் என்ன? விஷயத்தைச் சொல்லு!" என்று அவளைக் கைப்பிடியாக அறைப்பக்கம் அழைத்து வந்தவாறே கேட்டேன்.

அப்பொழுதும் அவள் பேசவில்லை.

"உன் மௌனம் என் நெஞ்சைப் பிளக்கிறது. என்னிடம் கூட என்ன விஷயம் என்று சொல்லமாட்டாயா?" என்று பரிவுடன் கூடிய குரலில் கேட்டேன்.

ஸ்டெலா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, "என்னத்தைச் சொல்ல? வாய் திறக்க வழி இருந்தால் தானே? நீங்கள் வாங்கித் தந்த அந்த முத்து மாலை எங்கேயோ காணுமற் போய்விட்டது!" என்றாள்.

சகோதரா! அதைக் கேட்டதும் என் இருதயத்தில் இரும்பைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. அந்த மாலையின் அழகைச் சொல்லி முடியாது; அது அவ்வளவு அழகா யிருந்தது! அதன் விலைதான் என்ன குறைச்சலா? அன்புக்கு விலை மதிக்க முடியுமா? அதன் விலையுடன் மதிப்புக்கு அப்பாற்பட்ட என் இருதயத்து அன்பையும் அல்லவா சேர்த்துப் பரிசாக அளித்திருந்தேன்! 'கிறிஸ்துமஸ் எப்பொழுது வரப்போகிறது? ஸ்டெலா அந்த முத்து மாலையை அணிந்து கொண்டு என்னெதிரே தன் முத்து முறுவலை அள்ளி வீசிக்கொண்டு எப்பொழுது காட்சி அளிக்கப்போகிறாள்?' என்று நாட்களையும் நாழிகைகளையும் எண்ணிக் கொண்டிருந்தேன். 'அந்த மாலையை அணிந்து

கொண்டு அவள் நம்மெதிரே வரும் பொழுது எவ்வளவு அழகாகக் காட்சி அளிப்பாள்! சௌந்தரிய தேவதையே உருவெடுத்து வந்தாற் போலிருக்கும்' என்றெல்லாம் கனவுக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன்; கற்பனைப் புரவியில் பறந்து கொண்டிருந்தேன். என் உள்ளத்தில் என்ன என்ன ஆசைகள், என்ன என்ன ஆவல்கள் எல்லாம் இடம் பெற்றிருந்தன, தெரியுமா? ஆனால் என் மனக் கோட்டை இப்படியா தகர்ந்து மண்ணுக வேண்டும்? எனக்கு மனம் பொறுக்கவில்லை. துக்கத்தினால் தலைகுனிந்து கொண்டேன். நான் வருத்தப்படுவதைக் கண்ட ஸ்டெலாவின் வருத்த முற்ற முகம் இன்னும் வருத்த முற்று விட்டது. அவள் கண்களிலிருந்து கிளம்பிய நீர் கன்னங்கள் வழியே வழிந்தோடிற்று.

"இனி அழுவதனால் என்ன பிரயோசனம்? போனது போனது தானே? இனி திரும்பி வரப்போகிறதா? கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவது சகஜந்தானே? இம்மாதிரிப் பொருள்கள் தொலைந்து போவது என்பது நமக்குப் புதிதல்லவே!" என்றேன்.

என் இந்தச் சமாதானச் சொற்கள் ஸ்டெலாவின் விசிப்புக் கெதிரே என்ன செய்ய முடியும்? இலேசான இரும்பு ஆணிகளைத் தண்ணீரில் விட்டெறிந்தால், அவை ஆழத்தில் அமுங்கித்தானே போகின்றன? அதேபோல் என் ஒவ்வொரு சொல்லும் அவள் விசிப்பின் ஆழத்திலே அடங்கி விட்டன. அதனால் எவ்விதப் பிரயோசனமும் உண்டாகவில்லை; அவளுடைய கண்ணீர்ப் பெருக்கில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை. இதைப் பார்த்தும் என் உள்ளம் இன்னும் வாட்டமுற்றது. நான் அவள் அருகில் சென்று எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்றேன். ஆனால் கிடைத்த பலன் பூஜ்யந்தான்.

பெண்கள் தங்கள் நகைகள் கெட்டுவிட்டால், அந்தத் துயரத்தைத் தாங்க மாட்டார்கள் என்று நான் பிறர்

சொல்லக் கேட்டிருக்கிறேன். ஸ்டீலாவின் வருத்தமும் அழுகையும் எனக்கு அது முற்றிலும் உண்மை என் பதைப் புலப்படுத்தின. அவளுடைய அந்தத் துயரத்தைப் போக்க எனக்கு அப்பொழுது ஒரே ஒரு வழி தான் புலப் பட்டது. உடனே கடைத் தெருவுக்கு ஓடி அதே போன்ற ஒரு மாலையை வாங்கிக் கொண்டு வந்தேன். அது ஸ்டீலா வின் மனப் புண் ணுக்கு மருந்து வைத்துக் கட்டினாற்போ லாயிற்று. அப்புறம்தான் அவள் கண்களி லிருந்து ஆருகப் பெருகிக் கொண்டிருந்த நீர் குறைந்தது. அவள் மனப்புண் குறையக் குறைய என் இருதயத்துக்குச் சாந்தி யும் இன்பமும் கிட்டின. முழுகப் போகும் படகுக்குக் கரை தட்டுப்பட்டு விட்டால், அதில் இருப்போர்க்கு மகிழ்ச்சி உண்டாவது இயல்புதானே? அதே போல என் காதல் படகு காப்பாற்றப் பட்டதை எண்ணி நான் மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன்.

இந்த மகிழ்ச்சிக்குப் பிறகு வழி திறந்து விட்டது. ஸ்டீலா சங்கோசத்தை விட்டு என்னிடம் நேர்த்தி நேர்த் தியான பொருள்கள் எல்லாம் கேட்கத் தொடங்கிவிட் டாள். ஆரம்ப காலத்தில் இதை யெல்லாம் கண்டு நான் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தேன். அப்பொழுதெல்லாம், இம்மாதிரிக் கேட்டு வாங்கிக் கொண்டு அவள் என் மீது பேருபகாரம் செய்வதாகவே எனக்குத் தோன்றியது. ஆனால் பிற்காலத்தில் அந்த உபகாரங்களே, அபகாரங் களாக உருத் தரித்து விட்டன.

சகோதரா! அந்தக் காலத்தில் நாங்கள் நாள் முழு வதும் ஒன்றாகவே இருப்போம்; ஒருகண நேரம்கூட இணை பிரிய மாட்டோம். காலை வேளைகளில் கை கோத்துக் கொண்டு உலாவச் செல்வோம். காலை இளஞ் சூரியனின் கனகக் கிரணங்கள் இயற்கையின் எழில் மிக்க காட்சிகளு டன் இன்பமாக விளையாடுவதைக் கண்டு ரசிப்போம்; புள்ளினங்கள் பாடும் பிரேம கீதத்தைக் கேட்டு இன்புறு

வோம். பகல் வேளைகளில் எங்கள் காதலை வளர்த்து வளமுறச் செய்யும் பேச்சுக்களிலே பொழுதைப் போக்கு வோம். மாலை வேளைகளில் மஞ்சள் வெயில் இருக்கும் பொழுது கடற்கரைக்குச் சென்று காதல் தம்பதிகள் கை கோத்துக் கொண்டு போவதைக் கவனிப்போம். கடல் அலைகள் சுருள் சுருளாக மிதந்து வந்து ஒன்றை ஒன்று தழுவிக் கொள்ளும் காட்சியைக் காணக் காண எங்கள் உள்ளம் தெவிட்டாது. இரவு வேளைகளில் இன்பம் பயப் பதற் கென்றேதான் தியேட்டர்கள் இருக்கின்றனவே! நாள் தவறினாலும் தவறலாம்; நாங்கள் தியேட்டர் செல் வது தவறாது. இப்படியாக இன்ப போதையில் மயங்கிய நான் கடை வியாபாரத்தை அறவே மறந்து விட்டேன். சிறுகச் சிறுக, என் கவனம் குறையக் குறைய, கடை வியாபாரமும் மந்தமாயிற்று. ஆனால் அதை யெல்லாம் நான் சிறிதும் பொருட் படுத்த வில்லை. மேல் நாட்டு நாகரிக மோகத்தில் மூழ்கி, மனத்தை மகிழ்விப்பதிலேயே பொழுதைப் போக்கி வந்தேன். அதன் பலனாகக் கடைசி யில் ஒரு நாள் கடை அடைக்கப் பட்டு 'ஸீலு'ம் வைக்கப் பட்டது. அப்புறம் என்ன? நான் ஒன்றுக்கும் உபயோக மில்லாதவனாக, உதவாக் கரையாக ஆகிவிட்டேன். சொத் துச் சுதந்தரம் பறிபோன பின் யார் நம்மைச் சிந்துவார் கள்? அச்சமயத்தில் ஸ்டெலாவின் மனம் கூடக் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருவதாகத் தோன்றியது. 'சேச்சே! ஸ்டெலாவின் மனமாவது, மாறவாவது? இதெல்லாம் உன் வீண் பிரமை. ஸ்டெலா அப்படிப்பட்டவள் இல்லை!' என்று நானே என் மனத்தைத் தேற்றிக் கொண்டேன். இம்மாதிரியாக எண்ணி எண்ணி நான் மண் சுவர் அல்ல; மணல் சுவரைத்தான் எழுப்பியிருந்தேன். மணல் சுவரை எவ்வளவு தூரம் தான் உயர்த்திக்கொண்டு போக முடி யும்? ஆனால் இன்ப லாகிரி என்னை இதை யெல்லாம் பற்றிச் சிறிதளவாது சிந்திக்க விட்டால் தானே?

4. தியேட்டர் தகராறு

அன்று ஒரு நாள் இரவு நானும் ஸ்டூலாவும் ஒரு நாடகம் பார்க்கப் போயிருந்தோம். திடீரென்று நாடகக் கொட்டகையில் கூடியிருந்த கூட்டத்தின் ஒரு பகுதியில் குழப்பம் ஏற்பட்டது. 'உஸ்! உட்காரு! பேசாதே! ஆர்டர்! ஆர்டர்!' என்று பல திசைகளிலிருந்தும் கூச்சல் எழுந்தது. ஆனால் அதற்கு ஒன்றும் பலன் ஏற்பட வில்லை. குழப்பம் குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக் கொண்டேதான் போயிற்று.

நாடகம் பார்ப்பதற்காகச் சில இந்திய மாணவர்களும் வந்திருந்தார்கள். அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே ஏதோ சச்சரவு ஏற்பட்டு அது மூற்றியது. அதற்குள் யாரோ, "இந்த இந்தியப் பன்றிகளை அடித்து நொறுக்குங்களடா!" என்றூன். அதைக் கேட்டது தான் தாமதம்; நான் என் நிலை மறந்தேன். என்னை இனந் தெரியாத ஒரு வெறி ஆட்கொண்டது. ஏன், எப் படி என்றெல்லாம் கேட்டால் என்னால் சொல்ல முடி யாது. அந்த வெறியின் வேகத்தில் நான் சண்டை நடந்து கொண்டிருந்த இடத்துக்கு ஓரே ஓட்டமாக ஓடினேன். அங்கே ஆங்கிலேயர்கள் இந்திய மாணவர்களை அடித்துக் கொண்டிருந்தார்கள். என் நரம்புகளில் மூறுக்கு ஏறி யது. அந்தச் சமயம் என் கைகளில் எங்கிருந்துதான் அவ் வளவு பலம் வந்ததோ, தெரியாது. நான் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு, உள்ளே சென்று இந்திய மாண வர் களின் சார்பில் சண்டை போடலானேன். பின் வாங்கிக் கொண்டிருந்த இந்திய மாணவர்கள், அவர்கள் சார்பில் நான் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டதும், பின் வாங்குவதை நிறுத்தி விட்டு உணர்ச்சி பெற்றுச் சிறி யெழுந்து முன்னைக் காட்டிலும் பன் மடங்கு ஆத்திரத்து டன் மறுபடியும் ஆங்கிலேயர்களைத் தாக்கத் தொடங்கி

விட்டார்கள். நான் அவர்களை உற்சாகப் படுத்திச் சண்டையிடச் செய்து கொண்டிருந்தேன். இதற்குள் என் தலையில் யாரோ ஒங்கித் தடியினால் அடிக்கவே, நான் மூளை சிதறி மயங்கிக் கீழே சாய்ந்துவிட்டேன்.

எனக்குப் பிரக்ஞை வந்த பொழுது, நான் ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்தேன். எனக்கு ஏற்பட்ட காயம் ஒன்றும் அவ்வளவு பிரமாதமான தில்லை. சாதாரணமானதுதான். இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே நான் குணம் அடைந்து விட்டேன். நான் குணம் அடைந்து வெளியே வந்ததும் வராததுமாக அடிதடி வழக்கு ஆரம்பமாகிவிட்டது. என் வாக்கு மூலம் நியாயஸ்தலத்தில் பெரிய பரப்பரப்பை உண்டு பண்ணியது. என்னைப் போன்ற மனிதன் இந்தியனாக இருப்பான் என்று யார் அங்கே எதிர்பார்த்திருக்கப் போகிறார்கள்? என் உருவத்தைப் பார்த்து யாரும் ஆங்கிலேயன் என்று எண்ணியிருப்பார்களே ஒழிய, நான் இந்தியனாக இருக்கக் கூடும் என்று கனவில் கூடக் கற்பனை செய்திருக்க நியாயம் இல்லை அல்லவா? ஆகவே, ஜனங்கள் என் வாக்கு மூலத்தைக் கேட்டதும் 'கச முச' வென்று என்னைப் பற்றிப் பேசிக் கொள்ளலாயினர். இந்திய மாணவர்கள் என்னைத் தங்கள் இஷ்ட தெய்வமாகவே எண்ணிப் பரிவுடன் பார்க்கலாயினர். ஆனால் இதனால் எல்லாம் எனக்கு ஒன்றும் ஆச்சரியம் ஏற்படவில்லை. ஆனால் ஸ்டெலா என் சார்பில் சாட்சியம் கொடுக்க மறுக்கவே, எனக்கு ஏற்பட்ட வியப்பையும் அதிர்ச்சியையும் சொல்லி முடியாது. ஏனெனில் அது வியப்பையும் அதிர்ச்சியையும் அளிக்கக் கூடிய விஷயம்தானே? எந்தப் பெண்ணை நான் என் உயிருக்கு உயிராக எண்ணி வந்தேனோ, எவளுக்காக என் வியாபாரத்தையே கவனிக்காமல் வீணாக்கிக் கொண்டேனோ, எவளுடைய காதலிலும் அழகிலும் மயங்கி என் ஜீவனோபாயத்தின் மார்க்கத்தையே கெடுத்துக் குட்டிச்

சுவராக்கிக் கொண்டேனே, எவளுடைய மோகத்தில் மயங்கி என் வாழ்க்கையையும் அதன் வருங்காலத்தையும் விழலாக்கிக் கொண்டேனே, அவள் எனக்காக இரண்டு வார்த்தைகள் சொல்லக்கூட மறுத்து விட்டாள் என்றால் எனக்கு எப்படி இருந்திருக்கும்? நீயே சிந்தித்துப் பார்! நான் என் மனத்திலே எழுப்பியிருந்த மணல் சுவர் சரிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது.

அப்பொழுது அவள் நியாயஸ்தலத்தில் தான் இருந்தாள். அவள் என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே, அதை என்ன வென்று சொல்லுவது? அவள் தன்னை ஏதோ ஆகாயத்திலிருந்து இறங்கி வந்த அப்ஸரஸ் போலவும் என்னைப் பூமியிலே நெளியும் புழுப்போலவும் எண்ணி என்னை வெகு அலட்சியமாகப் பார்த்தாள். அதைக் கண்ணுற்ற நான் ஸ்தம்பித்துப் போய் வாய் திறந்து பேச வழி தோன்றுமல் திகைத்தேன். அப்பொழுது அவள் விழிகளிலே கர்வம் கொப்புளித்துக் கொண்டிருந்தது. கர்வம் தாண்டவமாடும் அவளுடைய அந்த விழிகளில் முன்பு அவள் காட்டி வந்த பழைய காதலும் அன்பும் லவலேசங் கூட இருப்பதாகத் தோன்றவில்லை. அதைக் கண்ணுற்ற என் மனம் மிகவும் புழுங்கியது.

வழக்கின் தீர்ப்பைக் கேட்டுக் கூடியிருந்த மக்கள் அனைவரும் வியப்பெய்தினர். எனக்குப் பத்து நாட்கள் சிறைத் தண்டனை கிடைத்தது. செய்தித் தாள்கள் சிறிதைப் பெரிது படுத்தி எழுதித் தள்ளின. ஆனால் நான் அவற்றை யெல்லாம் சிறிதும் பொருட் படுத்தவில்லை. சிறையிலிருந்து வெளிவந்ததும் இந்திய மாணவர்கள் எனக்காக ஊர்வலம் விட்டனர். பெரிய கூட்டங்கள் கூட்டி உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தனர். அது மட்டும் அல்ல; எனக்காக ஒரு பண முடிப்பே கூடச் சேர்த்து வழங்கினார்கள்.

அந்த உபசாரங்களையும் உபசாரப் பத்திரங்களையும் கண்ட எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. நான் மகிழ்ச்சியுற்று வானவீதியிலேயே மிதக்கலானேன். 'இந்தியனாகப் பிறந்த நாம் எத்தனை பாக்கியசாலி! எத்தனையோ வருஷங்களாக நாம் ஆங்கிலேயனாக இருந்திருக்கிறோமே, யாராவது நம்மைப் பொருட்படுத்தினார்களா? ஒரு நாள் இந்தியனாக ஆகிவிட்டதற்காக நமக்கு எவ்வளவு உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தார்கள்! நல்ல வேளையாக, நாம் இந்தியனாகவே பிறந்தோமே, அது நம் பாக்கியம்தான்!" என்று எண்ணிப் பூரித்துப் போனேன்.

ஆனால் எனக்கு மிகுந்த மனக்கிலேசத்தையும் மனவருத்தத்தையும் அளித்த விஷயம் ஸ்டூலா அன்று நியாயஸ்தலத்தில் நடந்து கொண்ட முறைதான். எவளுக்காக நான் என்னுடைய சகலத்தையும் துறந்து விட்டேனோ, அவள் அப்படி நன்றி கெட்டவளாக, இருதயமே அற்றவளாக மாறிவிடுவாள் என்று நான்—அவளுக்காக அனைத்தையும் அர்ப்பணம் செய்துவிட்ட நான்—குறைந்த பட்சம் கருதியிருக்க முடியாதல்லவா? ஆபத்துக் காலத்தில் சரியான சமயம் பார்த்து அவள் இப்படி என் காலை வாரிவிட்டுவிடுவாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆகவே, அவளுடைய அந்தச் செய்கை என் மனத்தை அரம் கொண்டு அறுத்தது. அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு எனக்கு என் இந்தியத் தன்மையின் மீது அபிமானமும் அன்பும் ஏற்படலாயின.

அன்று மாலை டெயிலி ஹெரால்டு பத்திரிகையின் நிருபர் என்னைப் பேட்டி காண வந்த பொழுது, நான் மிகுந்த கர்வத்துடன் தலை நிமிர்ந்து, "ஆம். நான் இந்தியன்தான். இந்தியனாகப் பிறந்ததற்காக நான் பெருமிதம் கொள்ளுவதுடன் எல்லையற்ற பெருமையும் கொள்கிறேன். என்னை வேறு தேசத்தவனாகச் சிருஷ்டிக்காததற்காகக் கடவுளை நான் வாழ்த்தி வணங்கவும் செய்கிறேன்" என்றேன்.

"ஆங்கிலேயருடைய நியாய ஸ்தலங்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று என்னைக் கேட்டார் அந்தப் பத்திரிகையின் நிருபர்.

"நான் என் ஜாதியை வெளியிடாமல் மறைத்திருந்தால் தீர்ப்பு வேறுக, அதாவது நேர்மாறுக இருந்திருக்கும் என்பதுதான் என் அபிப்பிராயம். எனக்கு இந்தத் தண்டனையினால் கிடைத்த இன்பம், விடுபட்டிருந்தால் கட்டாயம் கிடைத்திராது. குற்றம் முழுவதும் ஆங்கிலேயர் கோஷ்டியைச் சேர்ந்தது தான். இந்தியர்கள் மீது சிறிதும் குற்றமில்லை" என்று பதில் அளித்தேன் நான்.

"தாங்கள் இந்தச் சண்டையில் ஏன் பங்கெடுத்துக் கொண்டீர்கள்?"

"என்னால் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. இது இயல்பு தானே?"

"இயல்பா? அது எப்படி?"

"என் இரத்தம் கொதித்தது. ஏனெனில் என் இருதயத்தில் ஓடுவது இந்திய ரத்தம் அல்லவா?"

"அப்படியானால் நீங்கள் ஆங்கிலேயர்களின் கூட்டத்தைத் தாக்கினீர்களா?"

"இல்லை, நான் சண்டையை விலக்கத் தான் முயன்றேன். கூட்டம் தான் என்னைத் தாக்கியது. அதனால் நான் காயமுற்றேன். கூடியிருந்தவர்கள் அனைவரும் நியாயத்தை ஒரு மூலையில் மூட்டை கட்டி வைத்து விட்டு எனக்கு வேண்டுமென்றே தண்டனை அளிக்கப்பட்டது என்பதையும் ஜாதி அபிமானம் தலை தூக்கியதன் காரணமாகத் தங்கள் ஜாதியினரை ஆதரிக்கும் பொருட்டு நீதிபதிகள் நியாயத்தை மீறி எனக்குத் தண்டனை அளித்தார்கள் என்பதையும் கட்டாயம் ஒப்புக் கொள்ளுவார்கள். நான்மட்டும் ஆங்கிலேயனாக இருந்தால் எனக்குக் கட்டாயும் இந்தத் தண்டனை கிடைத்திராது. அதற்கு மாறுக எனக்கு வெகுமதி அளித்திருப்பார்கள், புகழ் மாலை சூட்டி

யிருப்பார்கள்; என்னைப் பிரசங்கங்கள் புரிய அழைத்திருப் பார்கள். ஆனால் நானோ இந்தியன். இந்தியர்களை ஆதரித் தேன். ஆகவே தண்டனை கிடைத்தது. எனக்கு நியாயஸ் தலம் தண்டனை அளிக்காமல் இருந்திருந்தால் நியாய ஸ்தலத்தின் பெயரும் பெருமையும் எவ்வளவோ உயர்ந் திருக்கும் என்பதுதான் என் அபிப்பிராயம்" என்றேன்.

'டெய்லி ஹெரால்டு' பத்திரிகையின் நிருபர் என்னைப் பேட்டி கண்டுசென்ற இந்த விவரம் பல மாதங்கள்வரை பத்திரிகைகளில் பத்தி பத்தியாக அடிபட்டது.

5. பணம் வந்தது!

சகோதரா! என் கடை கடன் தொல்லைகளுக்கு இலக்காகி மூழ்கிவிட்டது. ஆனால் அதற்காக நான் பட்டினி கிடந்து மடியும்படியான அவசியம் நல்ல காலமாக நேரவில்லை. என் நண்பர் குழாம் விஸ்தாரமானதாயிருந் தது. நான் அவர்களுக்கு கெதிரே பணத்தைப் பணமாக நினைத்ததில்லை. அவர்களுக்காக நான் பணத்தை ஏராள மாக வாரி வீசியிருக்கிறேன்; தாராளமாகச் செலவிட்டிருக் கிறேன். அந்தத் தாராளம் இந்தச் சங்கடமான நிலைமை யில் எனக்கு வெகுவாக உதவி புரிந்தது. எந்த நண்பனி டம் சென்று நான் என்ன வேண்டுமென்று கேட்டாலும் இல்லை என்று சொல்லாது உடனே கொடுத்து உதவி புரிந்து வந்தான். இம்மாதிரி நண்பர்களின் உதவியைக் கொண்டு எத்தனையோ மாதங்கள் சிரமமின்றி ஓடிவிட் டன. ஆனால் எவ்வளவு நாட்கள் தான் நண்பர்கள் உதவி புரிந்து கொண்டிருப்பார்கள்? சிறுகச் சிறுக என் நண்பர் கள் என்னைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ள ஆரம்பித்தார்கள். எங்கேயாவது என்னை வழி யில் காண நேர்ந்துவிட்டால், கண்டும் காணாதது போல் கத்தரித்துக் கொண்டு போகத் தொடங்கினார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கைதட்டிக் கூப்பிட்டால் காதில்

விழாதது போலப் போய்விடுவார்கள். இதன் பலனை நான் இரண்டு மூன்று நாட்கள் முழுப் பட்டினி கிடக்கும் படி நேர்ந்துவிட்டதென்றுல் பார்த்துக் கொள்ளேன்!

'யாரிடமாவது கை நீட்டி ஏதாவது வாங்கினுல் என்ன?' என்ற எண்ணம் கூட என் உள்ளத்தில் எழும். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்று சொல்வார் களே, அது உண்மையாகவேதான் தோன்றியது. ஆயினும் என் தன்மான உணர்ச்சி என்னைப் பிறர் முன் கை நீட்ட விடவில்லை. ஆகவே, யாரிடமும் கை நீட்டி எதுவும் கேட் பதில்லை என்று மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டேன். ஐசுவரியம் அழிந்துவிட்டது. ஆயினும் அதன் மிடுக்குக் குறையவில்லை. பெருங்காயம் வைத்த பாண்டத்தில் பெருங்காயம் தீர்ந்துவிட்டாலும் அதன் வாசனை இருக்கும் அல்லவா? கயிறு எரிந்துவிட்டாலும் அதன் முறுக்குப் பிரிவதில்லை அல்லவா? அது போலக் காசு குறைந்து விட் டாலும் கண்ணியத்தைக் குறைத்துக் கொள்ள நான் மனம் ஒப்பவில்லை. இது யாருக்கும் இயல்பு தானே? நான் இந்தியாவுக்குக் 'கடல்த் தந்தி' கொடுத்தேன். என் இந்திய நிலபுலன்களைக் கவனித்து வந்த குமாஸ்தாவுக்குப் பணம் அனுப்பி வைக்குமாறு அதில் குறிப்பிட்டிருந்தேன். அப்பொழுது அந்தப் பணத்தைத் தான் நான் நம்பி எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன்.

★

நடுப்பகல் நேரம். நான் என் அறைக்கு வெளியே நின்ற வண்ணம் 'இன்றையப் பொழுதை எப்படி ஓட்டு வது?' என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப் பொழுது தெருவில் தபால்காரன் வீடு வீடாகக் கடிதத் தைக் கொடுத்து கொண்டே வந்து கொண்டிருந்தான். அவன் தலையைக் கண்டதும் என் உள்ளம் படபட வென்று அடித்துக் கொண்டது. 'நமக்கும் ஏதாவது மணி ஆர்டர் வந்திருக்கலாமோ? மணி ஆர்டர் இல்லாவிட்டா

லும் இன்ஷ்யூரன்ஸ், ரிஜிஸ்தர், தபால் என்று ஏதாவது ஒன்று வந்திருக்கக்கூடாதா?' என்று எண்ணினேன். அந்த எண்ணமே என் உடலைப் புல்லரிக்கச் செய்தது. இளவேனிற் காலத்தின் இளந்தென்றல் வீசத் தொடங்கிய தும் பூங்காவில் புஷ்பங்கள் பூத்துக் குலுங்கத் தொடங்குகின்றன அல்லவா? அதே போல என் உள்ளப் பூங்காவிலே மகிழ்ச்சி மலர்கள் மலரத் தொடங்கின.

ஆனல் அடுத்த நிமிஷமே வேறு ஒரு எண்ணம் என் உள்ளத்தை ஆட்கொள்ளத் தொடங்கியது. அந்த எண்ணம் என் உள்ளத்திலே அவ நம்பிக்கையையும் ஏமாற்றத்தையும் விதைத்துச் சென்றது. கடுங்கோடையில் வெக்கைக் காற்று வீசத் தொடங்கிவிட்டால், மலர்கள் வாடி வதங்கிப் போய் விடுவதில்லையா? அதேபோல என் மகிழ்ச்சி மலர்கள் வாடி வதங்கி விழத் தொடங்கின. என் இருதயத்திலே இப்படி எண்ண மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்த போதிலும் என்னெதிரே நம்பிக்கை கைகட்டிக் கொண்டு நின்றது.

தபால்காரன் என்னருகே வந்து, என்னிடம் ஒரு தபாலைக் கொடுத்து விட்டுச் சென்றான். கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கும் மகிழ்ச்சிக்கும் ஓர் எல்லையில்லை. அந்தக் கடிதம் மூல்தானில் உள்ள என்னுடைய குமாஸ்தா எனக்கு எழுதியிருந்ததுதான். எட்டு நாட்களுக்கு முன்பாகத் தங்கள் கணக்கில் எண்ணூறு பவுன் ஈஸ்டர்ன் பாங்குக்கு அனுப்பியிருக்கிறோம் என்று அவன் அதில் குறிப்பிட்டிருந்தான். அந்தச் செய்தியைப் படித்த நான் 'டர்பி லாட்டரி'யில் முதல் பரிசு வாங்கி விட்டவன் போல மனம் மகிழ்ந்தேன். அகத்தில் ஏற்பட்ட அந்த மகிழ்ச்சியை முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி எடுத்துக் காட்டுவது இயல்பே அல்லவா? அப்பொழுது அவ்வழியே ஒரு டாக்ஸி போய்க்கொண்டிருந்தது. நான் சட்டென்று ஒரே தாவாகத் தாவி அதில்

ஏறி உட்கார்ந்து, "ஈஸ்டர்ன் பாங்குக்குப் போ!" என்று டிரைவருக்கு உத்தரவிட்டேன்.

அங்கே போனதும் நான் பாங்கியிலிருந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு, நேரே ஒரு ஹோட்டலை அடைந்தேன். எனக்கோ அகோரப் பசி வயிற்றைக் கிள்ளிக் கொண்டிருந்தது. பனி நிறைந்த பிரதேசத்திலே பசி மிகுந்த ஓநாய்கள் குதிரைகளின் மேல் பாயுமே, அது போல நான் உணவுத் தட்டின் மீது பாய்ந்தேன். உணவை முடித்துக் கொண்டு வெளியே வந்த பொழுது மீண்டும் அதே கர்வம் என் உள்ளத்தில் தலை தூக்கியது. முகத்தில் மறுபடியும் அதே கவலையின்மை தாண்டமாடத் தொடங்கியது. இப்படி மகிழ்ச்சியும் மிடுக்கும் தாண்டவமாட நான் ஹோட்டலிலிருந்து இறங்கிய பொழுது, எதிரே ஸ்டூலா வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஆனால் அவளுடைய நிலைமையில், மலைக்கும் மடுவுக்கும், வானத்துக்கும் புவிக்கும் உள்ள வேறுபாடு காணப்பட்டது. கண்களிலே அந்தப் பழைய ஒளியைக் காணவில்லை. இலை யுதிர் காலத்து மரங்களைப் போல் நிறம் வெளிறிப் போயிருந்தது. இந்த அழகி ஒரு காலத்தில் லிவர்பூலில் உள்ள எழிலரசிகளுக்கெல்லாம் எழிலரசியாக விளங்கியவள் என்று அப்பொழுது அவள் இருந்த நிலையைப் பார்த்து யாராலும் சொல்ல முடியாது. அந்தக் காட்சி என் உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது. என் கண்களில் நீரை வருவித்தது. நான் மேல்நாட்டு நாகரிகத்தை ஒரு புறமாக மூட்டைகட்டி வைத்துவிட்டு அவளை நெருங்கி, "ஏன்? உனக்கு என்ன ஏற்பட்டு விட்டது?" என்று கேட்டேன்.

ஸ்டூலா என்னை நிமிர்ந்து பார்த்தாள். ஆனால் அவளுடைய கண்களில் அந்தப் பழைய லாவண்யம், ஒளி, கவர்ச்சி ஒன்றும் இல்லை. எங்கள் இருவர் கண்களும் கலந்தன. ஆனால் அந்தப் பழைய உணர்ச்சி அவற்றிடம் லவலேசங் கூட இல்லை. ஒன்றில் கர்வம் தலை தூக்கி நின்றது.

இன்னென்றில் நாம் இவ்வளவு தாழ்ந்து விட்டோமே என்ற தாழ்வு மனப்பான்மையும் தார்மிக வீழ்ச்சியும் உறைந்திருந்தன. ஸ்டீலாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரத் தயங்கித் தடுமாறின. "கடவுளுக்காக எனக்கு உதவிசெய்" என்று தடுமாற்றத்துடன் எப்படியோ வாக்கியத்தைப் பூர்த்தி செய்துவிட்டு அவள் அழத் தொடங்கி விட்டாள்.

"ஏன் அழுகிறாய், ஸ்டீலா? விஷயம் என்னவென்று சொல்லு. என்னால் இயன்ற உதவியைச் செய்கிறேன்!" என்றேன். அவள் பதிலே பேசவில்லை.

அவளை அதிகமாகத் தொந்தரவு செய்து விஷயத்தை வருவிப்பது அவ்வளவு உசிதமாக எனக்குத் தோன்றவில்லை. ஏழைமையைக் காட்டிலும் ஏழைமையை வெளிக் காட்டிக் கொள்வது இருக்கிறதே, அதுதான் மிகவும் வருந்தத்தக்க விஷயம். மனிதன் ஏழைமையைக் கண்டு அவ்வளவு அஞ்சுவதில்லை. ஆனால் ஏழைமையைத் தைரியத்துடன் வெளிக் காட்டிக் கொள்ள நேரும் பொழுது தான் அவனுடைய இருதயமே இரண்டு துண்டாகி விடுகிறது.

அவள் நிலைமையை ஒருவாறு ஊகித்து உணர்ந்த நான் என் செக் புத்தகத்தை எடுத்து எட்டுப் பவுனுக்கு ஒரு செக் எழுதி அவள் கையில் கொடுத்தேன்.

ஒரு வேளை ஸ்டீலா என்னிடம் இதை எதிர்பார்க்கவே இல்லையோ, என்னவோ? குற்றம் செய்துவிட்ட பாலகன் பயபீதியுடன் தனக்கு உபகாரம் செய்தவர்களைப் பார்ப்பான் அல்லவா? அதுபோல அவள் என்னைப் பார்த்து விட்டு அங்கிருந்து மெதுவாக அகன்றாள்.

6. எட்டு எண்பதாயிற்று

ஸ்டீலா சென்றதும் நான் என் இருப்பிடத்துக்கு வந்து என் அறையிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிகரெட்டுக் குடிக்கலானேன். நான் குடித்து

கொண்டிருந்த சிகரெட்டுப் புகையின் வழியே ஸ்டூலாவின் உருவம் தோன்றி என் உள்ளத்திலே புகுந்தது. சிறிது நேரத்துக் கெல்லாம் அது, மற்ற சிந்தனைகளை யெல்லாம் என் உள்ளத்திலிருந்து அகற்றிவிட்டு என் உள்ளம் முழுவதையும் ஆட்கொண்டு விட்டது. அன்று நியாய ஸ்தலத்தில் என் தரப்பில் சாட்சியம் சொல்லாமல், அவள் என்னை அலட்சியம் செய்தது அவ்வளவு நாட்களும் என் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது. என் உயிருக்கு உயிராக நேசித்த இவள் இப்படிச் சமயத்தில் காலை வாரி விட்டு விட்டாளே என்று இவ்வளவு நாட்களும் எண்ணிப் பொருமிக் கொண்டிருந்தேன். அவளுடைய நினைவையே அடியோடு மனத்திலிருந்து அகற்றிவிடவேண்டும் என்று நான் மிகவும் முயற்சித்துக் கொண்டிருந்தேன். அன்று நியாயஸ்தலத்தில் ஏற்பட்ட அநுபவமும், இந்தியர்கள் என்னை ஒரேயடியாகப் புகழ்ந்து உயர்வானில் உட்கார வைத்து விட்ட நிகழ்ச்சியும் அவளை மறக்க ஓரளவு எனக்குப் பேருதவி புரிந்தன.

அவ்வளவு நாட்களும் அவளுடைய நினைவே இல்லாமல் இருந்த நான் அன்று ஹோட்டல் வாசலில் அவளைக் கண்டதும் மனம் இளகி எதற்குத்தான் செக் எழுதிக் கொடுத்தேனோ, தெரியவில்லை!

என் உள்ளத்திலே புகுந்த ஸ்டூலா பழைய இன்ப நினைவுகளை யெல்லாம் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டாள். அந்த இன்ப நினைவுகளிலே இருதயத்தைப் பறி கொடுத்த நான், 'என்ன இருந்தாலும் அவள் பெண். ஏதோ தெரியாமல் அப்படிச் செய்து விட்டாள். அதற்காக, எல்லாம் தெரிந்த நாம், அவள் மனத்தை இப்படி அநாவசியமாகப் புண்படுத்தத் துணியலாமா? நாம் செய்ததுதான் மிகவும் கல் நெஞ்சத்தனமான காரியம்!' என்று என்னை நானே குறைகூறிக் கொள்ளத் தொடங்கினேன்.

அதற்குள்ளாகத்துயரமே உருவான அவளுடையஉரு வம் என் மனக்கண் முன் தோன்றியது. 'பாவம்! அவளுக்கு என்ன துயரமோ? தன் துயரத்தைச் சொல்லக்கூட அல் லவா அவளுக்கு நா எழவில்லை? அவளுடைய துயரத்தை அறிந்து தீர்த்துவைக்க வேண்டியது நம் கடமை அல்லவா? அப்படிச் செய்யாமல் நாம் அசிரத்தையாக வெறும் செக் மட்டும் எழுதிக் கொடுத்து விட்டு வந்தது நியாய மாகுமா?' என்று எண்ணமிட்டேன்.

இம் மாதிரிச் சிந்தனையில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் சென்றிருக்கலாம். என் அறையின் கதவு திறந்தது. பாங்கிச் சிப்பந்திகளில் ஒருவன் ஸ்டூலாவையும் கூட அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். அவன் என் அருகில் வந்ததும் ஸ்டூலாவுக்கு நான் கொடுத்திருந்த செக்கை என் கையில் கொடுத்து, "இந்தச் செக் சரியா னதுதானு? பார்த்துச் சொல்லுங்கள்!" என்றான்.

என் இருதயம் 'பட பட'வென்று அடித்துக் கொண் டது. செக்கில் எட்டுக்குப் பதிலாக எண்பது என்று திருத்தி யிருந்தது. ஆங்கில எண்ணை எட்டுக்குப் பின் னால் ஒரு பூஜ்யத்தைப் போட்டால் எண்பது ஆகிவிடு கிறது. ஆகவே, எண்ணில் உள்ள எட்டை எண்பதாக்கு வது ஒரு பிரமாதம் அல்ல. அதே போல எழுத்தில் எழுதி யிருக்கும் பகுதியிலும் எட்டு என்னும் பொருள் தரும் எய்ட்டுக்குப் பின்னால் ஒய் என்னும் ஓரே எழுத்தைச் சேர்ப்பதற்கு எத்தனை நேரம் பிடிக்கப் போகிறது? ஆகவே, நான் எட்டு என்று எழுதியது எண்பதாக ஆக்கப் பட்டதில் அதிக வியப்பில்லை அல்லவா?

சகோதரா! நான் அப்பொழுது நினைத்திருந்தால் ஸ்டூ லாவுக்குக் கைவிலங்கு கால் விலங்கு பூட்டிச் சிறைக்கு அனுப்பி யிருந்திருக்கலாம். அவள் செய்த அந்தக் குற்றம் சாதாரணமானதல்லவே! அவள் அதற்குரிய தண்டனை அநுபவிப்பதிலிருந்து ஒருநாளும் தப்ப முடியாது. அவள்

என்னை அலட்சியமாக நடத்திய நிகழ்ச்சிகள் எல்லாம் என் கண்களெதிரே நிழல்ப் படம் போல வந்தன. உள்ளத்திலே பேயுணர்ச்சி விழித்தெழுந்து அவளைப் பழி வாங்குமாறு என்னைத் தூண்டலாயிற்று. அவளைப் பிடித்துப் போலீஸில் ஒப்படைத்துவிட்டால் என்ன என்று கூட ஒரு கணம் எண்ணினேன்.

ஆனால் அதை அடுத்தாற் போலவே, 'என்ன இருந்தாலும் இவள் பெண். பெண் என்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்கள். பெண்களின் உள்ளம் பலஹீனமானது; பூப் போன்றது. அவர்களுடைய எண்ணங்களும் கூடச் சிறுமையானவை. எந்தக் காரணத்தினால் இவள் எனக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கத் துணிந்தாளோ, தெரியவில்லை. இவள் மிகவும் துயரத்தில் சிக்கியவளாகத் தான் தோன்றுகிறாள். இவள் முகம் கண்ணீரினால் நனைந்திருக்கிறதைப் பார்த்தால் இவளுக்கு ஏதோ கேடு நேர்ந்திருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. இல்லாவிட்டால் இப்படித் துயரமே உருவாக இவள் காட்சி அளிக்கக் காரணம் என்ன? அதுமட்டும் அல்ல; இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்ய இவளுக்குத் துணிவுதான் எங்கிருந்து ஏற்பட்டிருக்க முடியும்? ஏதோ ஆபத்தில் சிக்கிப் புத்தி தடுமாறித்தான் இவள் இந்தச் செய்கையில் ஈடுபட்டிருக்கிறாள். செத்த பாம்பைத் திரும்பத் திரும்ப அடிப்பதில் ஆண்மை ஏது? ஆண்மையுள்ளவனுக்கு அது அழகுதான் தருமா?' என்ற எண்ணம் எழுந்தது. உடனே நான் மறுபடியும் ஒரு முறை அவள் உள்ளத்தைப் படித்துப் புரிந்து கொள்ளும் நோக்கத்துடன் கூர்ந்து கவனித்தேன். அவள் மருந்து கிட்டிக்கப்பட்ட துப்பாக்கிக் கெதிரே நிற்கும் குதிரையைப் போலப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் வாய் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய கண்கள் பலவித பாவங்களைப் பிரகாசமான கண்ணுடியைப் போல் பிரதிபலித்

தன. 'நான் உன்னை ஏமாற்றத் துணிந்தது என்னவோ உண்மைதான். ஆயினும் ஒரு காலத்தில் நான் உன்னுடையவளாக இல்லையா? அதற்காகவாவது என் மானத்தைக் காப்பாற்ற மாட்டாயா?' என்று காலில் விழுந்து என்னைக் கெஞ்சிக் கேட்பது போலிருந்தன.

அந்த விழிகளே என் உள்ளத்தில் மாறுபட்டு எழுந்து கொண்டிருந்த எண்ணங்களை யெல்லாம் தவிடுபொடியாக்கின. பழி வாங்கும் எண்ணம் மிகவும் கீழ்த்தரமானதாகப்பட்டது. ஆகவே, அதைக் கைவிட்டேன்.

நான் செக்கிலிருந்து கண்களை அகற்றிப் பாங்கிச் சிப்பந்தியைப் பார்த்து, "ஏன்? சரியாகத்தானே இருக்கிறது?" என்றேன்.

"ஆனால்..." என்று அவன் இழுத்தான்.

"நீங்கள் எடுத்துக் கொண்ட முன் ஜாக்கிரதை மெச்சத் தக்கதுதான். நான் முதலில் எட்டுப் பவுன் என்று எழுதினேன். அப்புறம் அதையே எண்பதாக்கி விட்டேன். சரி, இதோ திருத்தத்துக்கு இங்கே கையெழுத்திட்டுத் தந்து விடுகிறேன். அப்பொழுதே நானாவாக நான் கையெழுத்திட்டுத் தந்திருந்தால், இந்த அம்மாள் இவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாக நேர்ந்திராது. இதற்காக நான் மனம் வருந்துகிறேன்!" என்றேன்.

இதைச் சொன்னதும் அந்தச் செக்கில் எங்கெங்கெல்லாம் எழுத்துக்கள் அதிகரிக்கப் பட்டிருந்தனவோ, அங்கெல்லாம் கையெழுத்திட்டுச் செக்கைச் சிப்பந்தியின் கையில் திருப்பிக் கொடுத்தனுப்பினேன்.

7. இந்திய நண்பர்

மறு நாள் என்னைப் பார்க்க இந்தியக் கனவான் ஒருவர் வந்திருந்தார். அவருடன் அவருடைய மனைவியும் வந்திருந்தாள். அன்று நடந்த தியேட்டர்ச் சம்பவம் எனக்கு எத்தனையோ இந்திய நண்பர்களை உண்டாக்கி

யிருந்தது. அவர்களில் ஒருவராகத்தான் அவரும் எனக்கு அறிமுகமானார். ஆனால் அவருடைய அறிமுகத்துக்கும் மற்றவர்களுடைய அறிமுகத்துக்கும் வித்தியாசம் என்ன என்றால் அவருடைய அந்த அறிமுகம் நாளடைவில் சிறுகச் சிறுக எங்களிடையே வலுவுற்று நெருக்கமான தொடர்பாக உருப் பெற்றுவிட்டது. அந்த நண்பரின் பெயர் ரூப்சந்த். அவருடைய மனைவியின் பெயர் தேவகி. இருவரும் பெருந்தன்மை வாய்ந்தவர்கள்; பிறருடன் நெருங்கிப் பழகும் பெருங் குணமும் படைத்தவர்கள். அவர்களுடைய அறிமுகம் கிட்டியது என் மனத்துக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது.

தேவகி நல்ல அழகி. அவள் இந்தியப் பண்புக்கு உகந்தவாறு புடைவை உடுத்தியிருந்தாள். அவளுடைய அந்த உடை அவளுடைய உடல் அழகுக்கு ஒரு தனி அழகை அளித்தது, வெண்கல விளக்குக்கு மெருகு ஏற்றினாற்போல. அவளுடைய உடலில் அநாவசியமான அதிகமான ஆபரணங்கள் ஏதும் ஏறவில்லை. முகத்தில் பௌடர் அப்பியிருக்கவில்லை. ஆயினும் அவளைப் பார்த்த மாத்திரத்திலே மனத்தில் தானாகவே ஒரு பெரு மதிப்பு ஏற்பட்டது. அவள் பார்ப்பதற்கு இந்த மண்ணுலகத்தவளாகவே எனக்குத் தோன்றவில்லை. அவளுடைய கண்களிலே கபடமின்மை தாண்டவமாடியது; முகத்திலே சூது - வாது அற்ற எளிமை தாண்டவமாடியது. அவள் வாய் திறந்து பேசும் பொழுது, அவள் வாயிலிருந்து மென் மலர்கள் உதிர்வது போலவோ, முத்துக்கள் உதிர்வது போலவோதான் தோன்றியது.

நான் மேல் நாட்டுப் பெண்மணிகள் எத்தனையோ பேருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்கள் முகத்துக்குப் பவுடர் பூசி, உதட்டுக்குச் சிவப்புச் சாயம் அடித்துச் செயற்கைச் சாதனங்களைக் கொண்டு தங்களை அலங்கரித்துக்கொள்வது போலவே பேச்சிலும் செயற்கையைக்

கையாண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் எனக்கு உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதாகத்தான் பட்டது. ஆனால் தேவகியின் பேச்சில் அம்மாதிரி பாவமே தொனிக்கவில்லை. ஆளை மயக்கித் தங்கள் கையில் போட்டுக் கொள்வதற்காக மேல் நாட்டு நாகரிக நங்கைகள் செய்வதுபோல், அவள் வார்த்தைக்கு வார்த்தை தலையை அசைக்கவோ, கழுத்தைச் சுளுக்கவோ, புருவத்தை நெளிக்கவோ, கண்களை அடிக்கவோ செய்யவில்லை. ஏன்? இது போன்ற எந்த விதமான கவர்ச்சிச் சாதனத்தையுமே கையாளவில்லை. ஆயினும் அவளுடைய ஒவ்வொரு சொல்லிலும், சொல்லின் பாவத்திலும், ஒரு கவர்ச்சி, ஒரு மந்திர சக்தி இருந்தது. ஆனால் அந்தக் கவர்ச்சியிலோ மந்திர சக்தியிலோ மனத்தை மசப்பி உள்ளத்திலே ஒரு புயலை எழுப்பி விடும் உபத்திரவப் பான்மை சிறிதும் தலை காட்டவில்லை. அழகின் கவர்ச்சியைக் காட்டிலும் மேலானதொரு கவர்ச்சி அவளிடம் இருந்தது. அது அவளிடம் நம்மையறியாமலே அன்பையும் அபார மதிப்பையும் உண்டு பண்ணக் கூடிய வலிமை பெற்றிருந்தது. அந்தக் கவர்ச்சி எதாக இருக்கலாம் என்று எண்ணிப் பார்த்தேன். கடைசியில் அது, தன்மானம், கற்பு இவற்றினால் ஏற்படும் கவர்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

எனக்கு அன்றுதான் முதல் முறையாக, இந்திய அழகுக்கெதிரே மேல்நாட்டு அழகு மங்கலானது, நிறக்காதது, தாழ்வானது என்ற எண்ணம் உறுதிப்பட்டது. ஆனால் அதையெல்லாம் விட மேலானதாக அழகுக் கெல்லாம் அழகு செய்வதாகத் தோன்றிய பொருள் என்ன தெரியுமா? அவளிடம் குமிழியிட்டுக் கொப்பளித்துக் கொண்டிருந்த ஞானம்தான். என் கண்கள் அவள் காலடிகளில் கவிழ்ந்தனவே ஒழிய நேருக்கு நேர் நிமிர்ந்து அவள் முகத்தை நோக்கும் துணிவைப் பெறவில்லை. அச்சம்.

நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற் பெருங் குணங்கள் பெண்களிடம் இருக்க வேண்டும் என்பதுபற்றி இந்தியக் கதைகளிலே நான் படித்திருக்கிறேன். இந்தியக் கலாசாரத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இராமாயணக் கதையிலே, கற்புக் கரசி சீதையின் கால் நகங்களைத் தவிர நான் வேறு எதையும் கண்டதில்லை என்று லட்சுமணன் சொல்வதாக ஒரு கட்டம் வருகிறது என்பதையும் நான் அறிவேன். ஆனால் அப்பொழுது அதை யெல்லாம் நான் பெய்யாக, கனவிலும் நடக்கக்கூடாத கட்டுக் கதையாகத் தான் எண்ணிவந்தேன். ஆனால் அந்த நிகழ்ச்சி அன்று என் விஷயத்திலேயே உண்மையாகி விடவே, அது உண்மையாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று உணர்ந்தேன்.

அன்று அவர்கள் சில மணி நேரம் என்னுடன் இருந்தார்கள். எத்தனையோ விஷயங்களைப் பற்றி எங்களிடையே லோகாபிராமமாகப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. அப்பொழுதுதான் எனக்குத் தேவகி எவ்வளவு கெட்டிக்காரி, மேதாவி என்னும் விஷயம் விளங்கியது. நான் எந்த விஷயத்தை எடுத்தாலும், என்னை மடக்கிப் பேச முடியாமல் அடித்து விடுவாள். நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சுடச் சுடப் பதில் அளித்து என் வாயை அடக்கி விடுவாள். அவள் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பேன்; திக்கு முக்காடித் திகைத்துத் திணறிப் போவேன்.

'இந்தியப் பெண்கள் சுத்தப் பட்டிக்காடுகள், படிப்பு வாசனை சிறிதும் அற்றவர்கள், பண்பாடு தெரியாதவர்கள், பழகத் தெரியாதவர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொள்ளுகிறார்களே, இவர்களைப் பற்றித்தானா? படிப்பு வாசனை குறைவாயிருக்கும்பொழுதே இவர்கள் இவ்வளவு அறிவுள்ளவர்களாக இருக்கிறார்களென்றால், படித்து விட்டால் இன்னும் எவ்வளவு நுண்ணறிவு பெற்றவர்களாயிருப்பார்கள்? இவர்களுக்கு நல்ல முறையில் கல்வி

யறிவு புகட்டப்படவில்லை யென்றும், நாகரிகமுள்ளவர் களாக நடந்து கொள்ளச் சொல்லிக் கொடுக்கவில்லை என் றும் அது அவர்களுடைய குற்றமாகுமா?' என்று தீவிர மான சிந்தனையில் ஆழ்ந்தேன்.

அவர்கள் விடை பெற்றுக் கொண்டு புறப்படத் தொடங்கவே, எனக்கு வருத்தம் உண்டாயிற்று. என்னை யாரும் மந்திரம் மாயம் செய்து மயக்கிவிடவில்லை; மருந்து கொடுத்து வசியப் படுத்தி விடவில்லை. ஆயினும் என் இருதயம் ஏன்தான் அப்படி என் வசம் இழந்து விட்டதோ, தெரியவில்லை! நான் குனிந்து தரையைப் பார்த்த வண்ணமே, தயங்கியவாறு, "நீங்கள் அடிக்கடி என் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்பலாம் அல்லவா?" என்று குரலில் மிகவும் கனிவு ததும்பக் கேட்டேன்.

ரூப்சந்த் இலேசாகச் சிரித்தார். இதற்கு அவர் மறு மொழி ஒன்றும் கூறவில்லை. ஆனால் தேவகி மெதுவான குரலில், "கட்டாயம்! உங்களை இந்தியராக்குவதற்காக வாவது நாங்கள் வந்து போவோம்!" என்றாள்.

அப்பப்பா! அந்தச் சொற்களில்தான் என்ன கேலி! என்ன பரிகாசம்! என்ன குத்தல்! அது என் உள்ளத் தைச் சுட்டது; உடலைத் தகித்தது. என் மனக் கடலிலே ஒரு புயலையே எழுப்பிவிட்டது. 'இன்றுவரை இந்தியர் களை வெறுத்து வந்தோமே! இது எவ்வளவு பெரிய மூட் டாள்தனம்?' என்று என்னை நானே நொந்து கொண் டேன். 'இந்தியர்கள் இவ்வளவு பழகத் தெரிந்தவர்களா கவும், சதா சிரித்த முகம் படைத்தவர்களாகவும் பண்பட் டவர்களாகவும் இருப்பார்கள் என்பது முன்னமேயே தெரிந்திருந்தால் நான் ஏன் வெட்கப்பட்டிருக்கப் போகிறேன்? அல்லது இந்தியர்களை இவ்வாறு ஏளன மாகத்தான் நினைத்திருக்கப் போகிறேன்?' என்று பிறகு என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

அவர்களுடன் ஏற்பட்ட அந்த இரண்டொரு மணி நேரத்து அறிமுகம் என் மனத்திலே ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணிச் சென்றது. ஆகவே, இனி ஸ்டூலாவை அறவே மறந்து விடுவது என்றும் ரூப்சந்த் - தேவகி இவர்களுடன் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்று விடுவது என்றும் நான் மனத்தில் முடிவு கட்டிக்கொண்டேன்.

8. அரிய பொக்கிஷம்

அதற்குப் பின் ஏழெட்டு நாட்கள் சென்றன. எங்களுக்கிடையே ஏற்பட்ட அறிமுகம் வர வர நெருக்கமுற்றது. நாள் தவறினாலும் தவறலாம்; ரூப்சந்தும் தேவகியும் தினம் மாலை வேளைகளில் என் வீட்டுக்கு வருவது தவறாது. தினம் இரண்டொரு மணி நேரமாவது அவர்கள் என்னுடன் வார்த்தையாடிவிட்டுப் போவார்கள். அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, எனக்குப் பொழுது போவதே தெரியாமல் பறந்துவிடும். அவர்களை நான் எத்தனை நேரம்தான் நிறுத்தி வைக்க முடியும்? ஆகவே, கடிகாரத்தின் முட்கள் ஓடாமல் நின்று விடக் கூடாதா என்று எண்ணுவேன். ஆனால் என்ன அசட்டு எண்ணம்! காலத்தின் ஓட்டத்தை இதுவரை யார் தடுத்திருக்கிறார்கள்? காலச் சக்கரத்தின் சுழற்சியை நிறுத்துவது என்பதுதான் சாத்தியமா?

அவர்கள் இந்தியர்களின் குடும்ப வாழ்க்கையை வருணிக்கும் பொழுது என் கண்களிலே நீர் திரை கட்டி நிற்கும். அந்தத் திரையிலே நிழல்ப் படம்போல இந்தியக் குடும்ப வாழ்க்கையின் ஒவ்வொரு காட்சியும் தத்ரூபமாகத் தோற்றமளிக்கும். ஆயினும் அவர்கள் சொல்லுவதில் எனக்கு அப்படியே நம்பிக்கை விழுவதில்லை.

ஆகவே ஒருநாள் நான், அவர்களைச் சந்தித்த பொழுது, "நீங்கள் சொல்வ தெல்லாம் ஒரு அழகிய கட்டுக் கதைபோல் அல்லவா தோன்றுகிறது!" என்றேன்.

அதைக் கேட்டதும் தேவகி இலேசாகப் புன்முறுவல் பூத்தவாறு, "கட்டுக் கதை போல் தோன்றுகிறதா? ஆம், உங்களுக்குக் கட்டுக் கதை போல்தான் தோன்றும். ஏனெனில் நீங்கள் மேல் நாட்டிலே பிறந்திருக்கிறீர்கள். மேல் நாட்டு மண்ணிலேயே வளர்ந்தும் இருக்கிறீர்கள். இன்றும் மாயைதான் இங்கு ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறாள். மேல் நாட்டு மண்ணிலே பிறந்து, மேல் நாட்டு மண்ணிலே வளர்ந்து மாயையின் ஆட்சிக்கு உட்பட்டு வாழும் உங்களுக்குப் பாரதத்தின் பெருமையை எத்தனைதான் எடுத்து உரைத்தாலும் புரியுமா? பாரத நாட்டின் பண்டைய பண்பாட்டையும் அது ஆத்மீகத் துறையிலே கண்டிருக்கும் வளர்ச்சியையும் பற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரிந்திருக்க நியாயம் இல்லைதான். ஆகவேதான் இப்படிப் பேசிவிட்டீர்கள். அங்கே ஒரு தடவை சென்று பார்த்து வந்தால் உங்கள் புறக் கண்கள் மட்டும் அல்ல; அகக் கண்களும் தாமாகவே திறந்து கொள்ளும். அப்புறம் அங்கிருந்து திரும்பி வரவே உங்களுக்கு மனம் வராது. அங்கேயே ஐக்கியமாகிவிடத் தான் முயல்வீர்கள்" என்றாள்.

அதைக் கேட்டு, பாரதத்தினிடம் அப்படி என்ன பெருமை இருக்கப் போகிறது என்று எண்ணிய நான், "பாரதத்தைப் பற்றி இப்படிப் பிரமாதமாகப் பெருமை அடித்துக் கொள்கிறீர்களே! அந்த நாட்டின் மண்ணில் அப்படி என்ன விசேஷச் சக்தி நிறைந்திருக்கிறது? இங்கே இருக்கும் ஆண்-பெண்களைப் போலத்தானே அங்கே உள்ள ஆண்-பெண்களும் இருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன தனியாகக் கொம்பா முளைத்திருக்கிறது? நான் எத்தனையோ புகைப்படங்களில் அந்த நாட்டவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களைவிட இந்த நாட்டு ஆண் - பெண்கள்தாம் அழகாக ஆடை அணிந்து கொள்கிறார்கள். நாகரிகமாகப் பழகுகிறார்கள். இவர்க

ளிடம் இருக்கும் கவர்ச்சி அவர்களிடத்தில் இல்லை. நீங்கள் வீணில் புகழ்கிறீர்கள்" என்றேன்.

என் சொற்களைக் கேட்டதும் தேவகியின் முகம் ரத்தச் சிவப்பாகச் சிவந்தது. அவள் உள்ளத்திலே பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சிப் பெருக்கை எடுத்துக் காட்டுவதற்காகவே அவள் முகம் அப்படிச் சிவந்திருக் கிறதோ என்று தோன்றியது. சிறிது நேரம் பேசாமல் இருந்த அவள் அழுத்தந் திருத்தமான குரலில், "ஆம், ஆடை அலங்காரத்திலேயே அத்தனை பொழுதையும் போக்கிவிடும் மேல் நாட்டு மாதர்களைத்தானே நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்? அதனால்தான் இப்படிப் பேசிவிட் டீர்கள்! ஆடை அலங்காரத்திலும் சிகைச் சிங்காரத்திலும் பொழுதைப் போக்கும் நவநாகரிக நங்கையர்கள் நாளைக்கு நாற்பத்தெட்டு மணியாக இருக்கக் கூடாதா என்றுதான் இந்த நாட்டில் எண்ணிக் கொள்கிறார்கள். இந்த நாட் டிலே பாட்டிக்கும் குமரிக்கும் பூசிக் கொள்ளப் பவுடர் வேண்டும். சிங்காரித்துக் கொள்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட இந்த நாட்டு நாரீமணிகளுக்கு வேறு விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கப் பொழுது இருந் தால்தானே? ஆனால் பாரதப் பெண்மணிகள் என்று சொன்னாலே பிரேமை, அன்பு என்று பொருள் சொல்லி விடலாம். அதாவது பிரேமை என்னும் சொல்லுக்கு நேரான பொருள் தரும் இன்னொரு சொல் என்ன என்று கேட்டால், அது பாரதப் பெண்மணிதான் என்று சொன் னால்கூட மிகையாகாது. அவள் தன் கணவனைத் தெய்வ மாகப் பூஜிக்கிறாள். தெய்வம் வேறு, கணவன் வேறு என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் இடம் பெறுவதே இல்லை. அவள் அவனுக்காகத் தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்யச் சித்தமா யிருக் கிறாள். அவனுக்காக எந்த ஆபத்தையும் தானே வலியச் சென்று ஏற்றுக் கொள்ளவும் அவள் அஞ்சுவதில்லை.

"உலகத்தில் உள்ள விவாகமான பெண்கள் அத்தனை பேருக்கும் சுதந்தரம் அளித்து, நீங்கள் உங்களுக்குப் பிடித்த, உகந்த, தகுந்த புருஷனை மறுபடியும் உங்கள் இஷ்டப்படி தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் பாரதப் பெண்மணி ஒருத்தியேதான் தன் முந்தியக் கணவனையே மறுபடியும் முழுமனத்துடன் கணவனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வாள். அவனை யன்றி வேறு யாரையும் நெஞ்சால்கூட நினைக்கமாட்டாள். இது என் நிச்சயமான, திட்டமான அபிப்பிராயம். 'கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்' என்ற பண்பு பாரத நாடு ஒன்றுக்குத்தான் உண்டு. ஏனெனில் அங்கே நாங்கள் கணவன் மனைவியின் தொடர்பை இந்த மண்ணுலகத்துத் தொடர்பாக எண்ணுவதில்லை. சாவுக்குப் பிறகும் சாகாத ஆத்மீகத் தொடர்பாகவே கருதுகிறோம். இந்த ஒரே காரணத்தினால்தான் எங்கள் நாட்டிலே, ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான வருஷத்து வீழ்ச்சிக்கும் அடிமைத்தனைக்கும் இலக்காகிய பின்பும்கூட, சீதை, சாவித்திரி போன்ற கற்புக்கரசிகளின் எண்ணற்ற உதாரணங்கள் இன்றும் காணக் கிடைக்கின்றன. பிரேமையும் பரிசுத்தமும், தியாகமும் தவமும், கற்பும் கண்ணியமும், நன்னடத்தையும் நல்லெண்ணமும் நல்ல வளமுற்று விளங்குகின்றன. எங்கள் தலை இந்தப் பெருமிதத்தினால் வானுயர எழும்பி நிற்கிறது. எங்களிடமும் ஒன்று இருக்கிறது. அது கிடைத்தற்கரிய மதிப்பிட முடியாத மாணிக்கம். எங்களிடமிருக்கும் அந்தப் பொருளுக்கு ஈடான பொருள் இந்த உலகத்தில் உள்ள வேறு எந்த நாட்டிலுமே கிடையாது என்ற பெருமை உணர்ச்சி எங்களை வான வீதிக்கே இட்டுச் சென்று மிதக்க விட்டுவிடுகிறது. அத்தகைய அரிய பொக்கிஷம் இந்தியர்களாகிய எங்களிடம் இருக்கிறதாக்கும்!" என்றாள். அப்பொழுது அவள் முகத்தில் தோன்றிய பெருமை உணர்ச்சியைச்

சொல்லி முடியாது. இதுபோன்ற அவளுடைய பேச்சுக் களைக் கேட்டுக் கேட்டு என் உள்ளத்திலும் தாய் நாட்டுப் பற்றுத் தலை தூக்கியது. தேவகியிடம் கண்ட அதே பெருமை உணர்ச்சி என் இருதயத்தின் ஆழத்திலும் இடம் பெற்றது. 'உண்மையிலேயே இந்தியா இவ்வளவு உயர்ந்த நாடாக இருக்குமா?' என்று மனத்துள் எண்ணு வேன். உடனே என் மனத்தில் சஞ்சலம் எழும். 'நமக்கும் இறக்கை இருந்தால் இதே நிமிஷம் இந்தியாவுக்குப் பறந்து சென்று, 'தேவகி சொன்னதெல்லாம் உண்மை தானு, இல்லையா ?' என்று பார்த்து விட்டு வந்து விடலாம் அல்லவா ?' என்ற ஆசை என் உள்ளத்துக்கு இறக்கை கட்டிப் பறக்க விட்டுவிடும். ஆனால் என் உடலுக்குப் பறப்பதற்கு இறக்கை ஏது? அது சிறகு ஒடிந்த பட்சி போல இருந்த இடத்தில் இருந்த வண்ணமே பாரதத் தைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கும்.

9. என்றைக்கு வருமோ ?

சகோதரா ! இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வாரங்களுக்கு மேல் ஓடிவிட்டன. இந்தியாவின் பெரு மையைக் கேட்டதிலிருந்து என் மனம் எதிலுமே நாட்டம் கொள்ளுவதில்லை. நான் எப்பொழுதும் வாட்டமாக, வருத்தமே உருவாக இருக்கலானேன். முன்போல் லிவர் பூலின் கடைத் தெருக்களில் சென்று சுற்றவோ, கடற் கரைக்குச் சென்று உலாவி வரவோ, எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இருதயத்தின் ஆழத்திலே இந்தியாவைக் காணவேண்டும் என்ற ஆசை எழுந்து விட்டது. பொன் னைக் கண்ட பின் மனிதனுடைய மனத்திலிருந்து பித்தளை யின் மோகம் தணிவது இயல்புதானே ? அதேபோலப் பாரதத்தின் பெருமையைக் கேட்டபின் உள்ளத்திலே ஊறியிருந்த ஆங்கிலேய மோகம் அடங்கிவிட்டது. அது மட்டும் அல்ல; அதனிடம் எனக்கு அலாதி வெறுப்பே

ஏற்பட்டு விட்டது. ஆகவே, நான் நாள் முழுவதும் அறையே கதி என்று என் அறையிலேயே அடைந்து கிடக்கலானேன். ஆனால் மாலை வேளைகளில் தேவகியும் ரூப்சந்தும் வந்துவிட்டால் என் மன வாட்டம் எல்லாம் மாயமாய் மறைந்துவிடும். நான் மகிழ்ச்சியில் மிதந்து மனக் கஷ்டங்களை மறந்து விடுவேன். அவர்களைக் கண்ட மாத்திரத்தில் என் உள்ளத் திரையிலே பிறந்த நாட்டின் பெருமை எழில் மிகுந்த சித்திரமாக உருவாகி, மனக் கண்களை திரே காட்சி அளிக்கத் தொடங்கிவிடும். நான் அதைக் கண்டு களிப்புறத் தொடங்குவேன்.

இப்படி யிருக்கும் பொழுதுதான் ஒரு நாள் திடீரென்று ஸ்டீலாவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் எழுதியிருந்தது வருமாறு :

என் அன்புள்ள ஹாரிஸன்!

அன்று நீ என்னிடம் நடந்து கொண்ட விதம் என் மனத்தை ஆட்கொண்டு விட்டது. நீ அன்று எனக்குச் செய்த அந்த உபகாரத்துக்கு, உனக்கு எப்படி நன்றி செலுத்துவது என்றே எனக்கு விளங்கவில்லை. ஏனெனில் அந்த உபகாரத்துக்கு நன்றி செலுத்தும் சக்தி பேசும் பேச்சுக்கோ, எழுதும் சொற்களுக்கோ ஏது? இந்திய மக்கள் தெய்வ குணம் பொருந்தியவர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இது வரை எனக்கு இவ்விஷயத்தில் நம்பிக்கை ஏற்பட்டதே இல்லை. இவையெல்லாம் வெறும் வாய்ச் சொல்லாக இருக்கும், கட்டுக் கதையாக இருக்கும் என்றேதான் இதுவரை நான் எண்ணி வந்தேன். ஆனால் நீ என் அந்த எண்ணத்தை அறவே மாற்றிப் பாரத மக்களின் பெருமையை என் உள்ளத்தில் நிலைநாட்டி விட்டாய்.

உண்மையைக் கேட்டால், இன்றுவரை உன் அன்பும் காதலும் அவ்வளவாக என் உள்ளத்தில் இடம் பெறவில்லை. எத்தனையோ பேரைப்போல

உன்னையும் ஒருவனுகத்தான் எண்ணி வந்தேன். ஆனல் இனி உன்னைத் தவிர வேறு யாருக்கும் என் உள்ளத்தில் இடம் கிடையாது. இது வெறும் வாய்ப் பேச்சு அல்ல; முக்காலும் உண்மையான வார்த்தை. நாம் இருவரும் கணவன் மனைவியாகப் பாரத நாட்டுக்குப் புறப்படும் நன்னுள் என்றைக்கு வருமோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன். பாரத பூமிக்குச் சென்று அதன் நெடிய வயல்களையும், இரு மருங்கும் கரைபுரண்டு ஓடும் இனிய நதிகளையும், வானுயர நின்று வானவரோடு உரையாடும் மலைகளையும், இயற்கை அன்னை இன்பமுடன் அளித்திருக்கும் எழில் மிக்க பசுமை நிறைந்த காட்சிகளையும் கண்ணுரக் கண்டு ஆனந்திக்க வேண்டும் என்று எனக்குக் கொள்ளை ஆசையாக இருக்கிறது. அதற்கான ஏற்பாட்டை நாம் சீக்கிரம் செய்ய வேண்டாமா?

என் உடல் நிலை இப்பொழுது எவ்வளவோ குணமாகிவிட்டது. தாய் தந்தையர் இறந்த துயரமும் சிறிது சிறிதாகக் குறைந்தது வருகிறது. நாம் இருவரும் சேர்ந்து தியேட்டருக்குப் படம் பார்க்கப் போய் எத்தனையோ நாட்களாகின்றனவே, என்றைக்காவது ஒரு நாள் போய் வரலாமா?

இப்படிக்கு,
உன் அன்புள்ள
ஸ்டெலா.

கடிதத்தைப் படித்து முடித்ததும் இவ்வளவு நாட்கள் என்னைவிட்டு அகன்றிருந்த அதே பழைய நோய் மீண்டும் பற்றிக் கொண்டு விட்டது. குடிகாரன் குடி கெடுக்கும் கடையைக் கண்டதும், தான் செய்த பிரதிக்ஞைகளை மறந்து கடைக்குள்ளே நுழைந்து விடுகிறுன் அல்லவா? அதே போல, நான் ஸ்டெலாவைப் பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயங்களை யெல்லாம் அந்த கணமே என்

உள்ளத்திலிருந்து அகற்றிவிட்டேன். அடுத்த நிமிஷம் ஸ்டீலாவின் ஆசை தவழும் அந்த இன்ப முகம் என் கண்களிலே புகுந்து பழைய இன்ப நினைவுகளுக்கு என்னை மறுபடியும் இழுத்துச் சென்றது.

'ஸ்டீலா அன்று செக்கில் உள்ள எட்டை எண்பதாக மாற்றி இப்படி மோசம் செய்தாளே, எதற்காகச் செய்திருப்பாள்?' என்று நான் இவ்வளவு நாட்களும் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். ஆனால் இதுவரை அதன் ரகசியம் எனக்குச் சரியாகப் புலனாகியதில்லை. இன்று அவளிடமிருந்து வந்த கடிதத்தின் கடைசி வரிகள் என் அந்த யோசனைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து ரகசியத்தை வெளியிட்டு விட்டன. ஸ்டீலாவின் தாய் தந்தையர் அவளைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டு இறந்துவிட்டனர் என்பதும், இப்பொழுது அவள் இந்த உலகத்தில் அநாதையாக, ஆதரவற்றவளாக, தன்னந் தனியளாக ஆகிவிட்டாள் என்பதும், அவளைக் கவனிக்க யாருமே நாதியில்லை என்பதும், போதாக் குறைக்குப் பல மாதங்களாக அவள் நோயுற்றிருக்கிறாள் என்பதும் அவளுடைய அந்தக் கடிதத்தின் கடைசி வரிகளிலிருந்து தெள்ளத் தெளிய விளங்கிவிட்டன.

அன்று அவள் ஹோட்டல் வாசலில் என் உதவியை நாடி வந்தபொழுது, அவள் உடம்பு தூரும்பாக இளைத்து எப்படி உருமாறிப் போயிருந்தது! கண்கள் குழி விழுந்து பள்ளத்தில் போயிருந்தன! ஜீவனற்ற நடைப் பிணம்போல் அல்லவா அன்று அவள் காட்சி அளித்தாள்! அதை நினைத்துப் பார்க்கவே, என் உள்ளத்தை என்னவோ செய்தது. 'அந்தமாதிரிச் சந்தர்ப்பத்தில் அவள் செய்த குற்றம் குற்றமே ஆகாது. சிரம தசையில் சிக்குண்ட ஒருத்தி ஏமாற்றுமல் என்ன செய்வாள்?' என்று எண்ணி மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றேன். ஆயினும் அவள் என்னிடம் விவரமாகச்

சொல்லியிருந்தால், விஷயம் இவ்வளவு தூரம் முற்றி யிராதல்லவா? ஆனால் தன் சிரமத்தைச் சொல்லிக் கொள்ளச் சிலருக்கு மனம் வராதுதான் என்று தோன்றவே, அவளிடம் நான் கொண்டிருந்த கெட்ட அபிப்பிராயங்கள் எல்லாம் அறவே அழிந்துவிட்டன. 'சென்ற நாட்கள் திரும்பி வருவதில்லை. வாயிலிருந்து வெளியான வார்த்தைகள் திரும்பி வந்ததில்லை. கையிலிருந்து இளம் பிய அம்பு திரும்பி வந்து பார்த்ததில்லை' என்றெல்லாம் சொல்லுவார்கள் அல்லவா? அது என் விஷயத்தில் பொய்த்து விட்டது. எல்லோரும் சொல்வதற்கு நேர் மாறாக என் சென்ற காலம் திரும்பிவிட்டது; பழைய இன்பங்கள் திரும்பிவிட்டன. அப்புறம் கேட்பானேன்? பணம் பணமாகச் செலவழியவில்லை; தண்ணீராகச் செல வழியலாயிற்று. ஸ்டீலா அதே பழைய ஸ்டீலா ஆனாள்; நானும் அதே பழைய நானாக ஆனேன். அதே பழைய கண்கள்! அதே பழைய கடைக்கண் பார்வை! எல்லாமே எங்களிடம் திரும்பி வந்து விட்டன. அப்புறம் என்ன? நாங்கள் இந்த உலகத்து விஷயங்களை அடியோடு மறந்து ஆனந்தக் கடலில் இன்பமாக மிதக்கலானோம்.

ஒரு நாள் நான் ஸ்டீலாவைப் பார்த்து, "ஸ்டீலா! வர வரப் பணம் செலவழிந்து கொண்டே போகிறதே! என்ன செய்வது?" என்று கேட்டேன்.

ஸ்டீலா என் கோட்டுப் பித்தானைத் தன் கைகளால் சுழற்றியவாறே, "இன்னும் எத்தனை பணம் பாங்கியில் பாக்கியிருக்கிறது? கொஞ்சம் பாங்குப் புத்தகத்தை எடு, பார்ப்போம்!" என்றாள்.

நான் பாங்குப் பாஸ் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "இன்னும் நூற்றிருபத்தைந்து பவுன் தான் பாக்கி!" என்றேன்.

"நூற்றிருபத்தைந்து பவுன் பாக்கி யிருக்கிற தல்லவா? கவலைப்படாதே! என் சிற்றப்பா சாகும் தறு

வாயில் இருக்கிறார். சில நாட்களாக அவருக்கு உடம்பு ரொம்ப அதிகமாயிருக்கிறதாம். அவர் இன்னும் சில நாட்களில் இறந்துவிடலாம். அவருக்குச் சொத்து லட்சத்துக்கு மேல் இருக்கிறது. அவருடைய சொத்து முழுவதும் எனக்குத்தான் கிடைக்கவேண்டும்! அவருக்கு என்னைத் தவிர வேறு யாரும் வாரிசு கிடையாது!" என்றாள்.

அதைக் கேட்டதும் அவநம்பிக்கைக்கு இடையே நம்பிக்கை ஒளி வீசியது. நான் நாற்காலியை முன்னுக்கு இழுத்துப் போட்டுக் கொண்டேன். பிறகு ஆவல் தவழும் கண்களுடன் அவளையே பார்த்தவாறு, "உனக்கு உன் பிரதிக்ஞை நினைவிருக்கிறதல்லவா?" என்று கேட்டேன்.

"எந்தப் பிரதிக்ஞை?" என்று அன்பு தவழ என்னைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

"நானும் நீயும் கணவன் மனைவியாக..."

"ஓ! நன்றாக நினைவிருக்கிறது. நான் சொன்னது சொன்னதுதான். நீ வேண்டுமானால் உன் மனத்தில் தாராளமாக முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்ளலாம்!" என்று பதில் அளித்தாள் ஸ்டெலா.

"பணம் வந்ததும் மனம் மாறி விடமாட்டாயே?"

"நான் ஒன்றும் அவ்வளவு மோசமானவள் இல்லை, தெரியுமா?"

"அதற்குச் சொல்லவில்லை. பணம் பொல்லாத பொருள். நல்ல நல்ல மனிதர்களின் மனத்தையெல்லாம் கூட மாற்றிவிடக் கூடிய மாய சக்தி அதற்கு உண்டு. அதனால்தான்....."

"ஆனால் உன் அன்பு பணத்தைக் காட்டிலும் பன்மடங்கு மேலானது. உன் அன்புக் கெதிரே உலகத்தின் கிடைத்தற் கரிய பொருள்கள் எல்லாம்கூடத் துச்சமானவை, மகா மட்டமானவை" என்றாள் ஸ்டெலா.

நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, ஒரு பையன் 'லிவர்பூல் டைம்ஸ்' பத்திரிகையின் அப்

பொழுதுதான் வெளியான புதிய இதழை எங்கள் மேஜையின்மேல் கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றான். நான் அதைக் கையில் எடுத்த வண்ணமே, "அந்தக் கிழவன் எப்பொழுது சாவான்?" என்று கேட்டேன்.

"அவருக்கு உடம்பு ரொம்ப ரொம்ப அதிகமாயிருக்கிறது. இறைக்கோ நாளைக்கோ என்றுதான் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறார். இந்தக் கணமே செத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் எந்தக் கணமும் அவருடைய சாவு ஓலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்றாள் ஸ்டெலா.

"அப்படியா?" என்று கேட்டவாறே நான் பத்திரிகையின் முதற் பக்கத்தில் என் பார்வையைச் செலுத்தினேன். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை. அந்த மகிழ்ச்சியில் 'ஹ்வீ' என்று உரக்கக் கூச்சலிட்டுக் கொண்டு நான் தரையிலிருந்து ஒரேயடியாக உயர எழும்பி ஒரு குதி குதித்தேன். எனக்கு அப்பொழுது என் இருதயமே தொண்டைக்கு வந்துவிட்டதுபோன்ற உணர்ச்சி உண்டாயிற்று.

என்னைப் பொறுத்தவரை அது சாதாரணமான, அற்ப சொற்பமான செய்தி அல்லவே! எனக்கு என்னுடைய அதிருஷ்டக் கதவு திடுதிப்பென்று திறந்துகொண்டுவிட்டதாகவே தோன்றியது.

பத்திரிகையில் கொட்டை கொட்டையான எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்த அந்தத் திடுக்கிடும் செய்தி என்ன, தெரியுமா? இதுதான் :—

மிஸ்டர் கிராஸ்வுட் மரணம் அடைந்தார்

கண்மூடும் பொழுது அவர் கடைசியாகச் சொன்ன சொற்கள்

என் சொத்து முழுவதும் என் ஸ்டெலாவுக்கே

பத்திரிகை அச்சுக்குப் போய்க் கொண்டிருந்த பொழுது, 'லிவர்பூலிலேயே மிகப் பிரசித்தி வாய்ந்த கடையான பீபிள்ஸ் ஷாப்பின் சொந்தக்காரரான மிஸ்டர் கிராஸ்வுட் மரணம் அடைந்தார்' என்னும் வருத்தம் தரும் செய்தி நமக்குக் கிடைத்தது. அவர் சிறிது காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆனால் இவ்வளவு சீக்கிரம் இறந்துவிடுவார் என்று யாருமே எண்ணவில்லை. அவர் தம் சொத்து முழுவதையும் தம் தமையன் மகள் ஸ்டெலா வின் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறார். ஸ்டெலா தாய் தந்தையற்ற அநாதை. தற்சமயம் அவள் மிகுந்த சிரம தசையில் இருக்கிறாள். கண்மூடும் கடைசி நேரத்தில் கூட மிஸ்டர் கிராஸ்வுட்டின் வாய் ஸ்டெலாவின் பெயரை முணுமுணுத்தது.

இதைப் படித்த பிறகு நான் பத்திரிகையை ஸ்டெலா வின் கையில் கொடுத்து விட்டேன். அச்சமயம், நான் அந்தச் சொத்து முழுவதும் எனக்கே கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சியில் மூழ்கினேன். எனக்குக் கிடைத் தால் என்ன, என் ஸ்டெலாவுக்குக் கிடைத்தால் என்ன என்ற எண்ணம் என் நெஞ்சில் அலை பாய்ந்து கொண் டிருந்தது. அதைப் படித்ததும் ஸ்டெலாவின் கண்களும் மகிழ்ச்சியால் மலர்ந்தன; முகத்தில் முறுவல் நெளிந்தது. அடுத்த கணம் அவள் எழுந்து நின்றாள். சுபாவமாகவே அவளுடைய ஆகிருதி உயரமானது. தன் உயரமான ஆகிருதியை இன்னும் உயரமாக்கி நிமிர்ந்து நின்று கொண்டு அவள், "நான் நினைத்தது சரியாகிவிட்டது. இனி நாம் ஏழைகள் அல்ல!" என்றாள்.

இதைச் சொல்லிய வண்ணம், அவள் அன்பு பொங் கும் விழிகளுடன் ஒருமுறை என்னைப் பார்த்தாள். பிறகு தன் தொப்பியைத் தலையில் வைத்துத் கொண்டு வெளியே புறப்பட்டாள். ஆர்வமும் ஆனந்தமும் அவள் கால் களுக்கு இறக்கை கட்டிவிட்டன. அவள் வெகு வேகமாக

வெளியே போய்க்கொண்டிருப்பதைக் கண்டவாறே நான் என்னுடைய சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

10. கரும்பும் கசந்தது!

சாய்வு நாற்காலியில் சாய்ந்ததும், வருங்கால வாழ்க்கையின் இன்ப நினைவுகளை மனத் திரையில் எழில் மிக்க சித்திரங்களாகத் தீட்டும் ஆசையில் என் இரு இமைகளும் தாமாகவே மூடிக் கொண்டன. எனக்கும் ஸ்டெலாவுக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நிகழ்வது போலவும், அதைக் கண்ணுற்ற ஜனங்கள் திகைத்துப் பிரமித்துப் போய் வைத்த கண் வாங்காமல் எங்களையே பார்ப்பது போலவும், பிரபல பத்திரிகைகள் எங்கள் திருமணத்தைப் பற்றிப் பற்பலவிதமாகப் பத்தி பத்தியாகச் செய்திகள் பிரசுரிப்பது போலவும், ஸ்டெலாவை அடைவதற்காக இலவு காத்த கிளியைப்போலக் காத்துக் கிடந்த எத்தனையோ லட்சாதிபதிகள் மனமொடிந்து நம்பிக்கை யிழந்து, சிறகு ஒடிந்த பட்சியாகத் துடிப்பது போலவும், 'ஆங்கிலேயர்களான நம்மை ஒரு இந்தியன் வெற்றி கொண்டு விட்டானே! என்ன அதிசயம்! அவனிடம் அப்படியென்ன மாய சக்தி இருந்து விட்டது!' என்று என்னைப் பற்றிப் பேசிக் கொள்வது போலவும் பற்பல இன்பக் காட்சிகளைக் கற்பனைக் கண்கொண்டு ரசித்துக் கொண்டிருந்த என் உள்ளக் கடலிலே எத்தனையோ விதமான சிந்தை அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க வைத்து விட்டன. இந்த இன்ப நினைவிலே என் உடல் பூரித்தது; உரோமங்கள் சிலிர்த்தன. என்னைக் கட்டிப் பிடிக்க இனி ஆள் யாருமே கிடையாது என்பது போன்ற உணர்ச்சி என் நிறைந்த இருதயத்தை ஆட்கொண்டது.

ஸ்டெலாவின் இன்ப நினைவிலே மூழ்கி யிருந்த எனக்கு அன்று பகல் [illegible] தெரிந்தால்தானே?

DR. T. P. M. LIBRARY.

மனிதனுக்கு எல்லை மீறிய மகிழ்ச்சியோ துயரமோ ஏற்பட்டு விட்டால் பசி தெரிவதில்லை; உணவு செல்வதில்லை. அன்று நானும் உணவை மறந்து ஸ்டூலாவின் நினைவாகவே இருந்து விட்டேன். பொழுதும் போவது தெரியாமலேயே வெகு வேகமாக ஓடிவிட்டது.

சாயந்திரம் ரூப் சந்தும் தேவகியும் என்னைக் காண வந்தார்கள். அப்பொழுது தான் எனக்குப் பொழுது சாய்ந்துவிட்டது என்ற நினைவு வந்தது. நான் அவர்களிடம் ஸ்டூலாவைப் பற்றிய விஷயங்களை ஆதியோடு அந்தமாகச் சொல்லி, அன்று பத்திரிகையில் வெளியான அந்த நற்செய்தியையும் சொன்னேன். ஆனால் அவர்கள் ஸ்டூலாவின் சொற்களைச் சிறிதும் நம்பவில்லை.

"நீ ரொம்ப ரொம்ப சாது; அப்பாவி; விஷயம் தெரியாதவன். மேல் நாட்டில் இருந்துவிட்டால் மட்டும் என்ன ஆயிற்று? உன் பிறவிக் குணம் போகுமா? அது சிறிதும் மாறவில்லையே! ஸ்டூலா பணம் இல்லாதவளாக இருந்த வரை உன்னுடையவளாக இருந்தாள். கையில் காசு இல்லாத காலத்தில் உன்னை அண்டியிருந்ததில் அவளுக்கு லாபமாயிருந்தது; நன்மையாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ அவள் பணக்காரி. அவளுடைய சுய ஜாதிக்காரர்களான எத்தனையோ பெரிய பெரிய பணக்காரர்களே இனி அவளைக் கல்யாணம் செய்து கொள்ள 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு வரத் தொடங்கி விடுவார்கள். ஆகவே, இனி அவள் உன்னை ஏன் லட்சியம் செய்யப் போகிறாள்? நாங்கள் சொல்லுகிறோமே என்று நினைத்துக் கொள்ளாதே! அவள் கட்டாயம் நாங்கள் சொல்வது போல் மனம் மாறி விடுகிறாளா, இல்லையா என்று வேண்டுமானால் நீயே பொறுத்திருந்து பார். நாங்கள் சொன்னது உண்மையாகி அவள் மனம் மாறி விட்டால் ரூப் சந்தும் தேவகியும் அப்பொழுதே சொன்னார்களே, நாம் நம்ப

வில்லையே! அது இப்பொழுது எவ்வளவு சரியாகி விட்டது என்று நீயே சொல்லுவாய்!" என்றார்கள்.

என் காதுகளில் அவர்களுடைய அந்தச் சொற்கள் நாராசமாக ஒலித்தன. மனிதன் ஒருவரைத் தனக்கு வேண்டியவர் என்று நினைத்துப் பிடிமானம் கொண்டு நேசிக்கத் தொடங்கி விட்டால், முழு மனத்துடன் நம்பத் தொடங்கி விட்டால், அந்த நபருக்கெதிராக யார் என்ன சொன்னாலும் காதில் வாங்கிக் கொள்ள மாட்டான்; தனக்கு வேண்டியவர்கள் என்று தீர்மானித்து விட்ட அவர்கள் ஏதாவது கோள் சொன்னாலும் குணமாகக் கொள்ளுவான். ஆனால் அவர்களுக்கெதிராக யாராவது தனக்கு நல்லதைச் சொன்னாலும் அதைப் பொல்லாத தாகத்தான் எடுத்துக் கொள்வான். இது மனிதனுடைய சுபாவம். ஆகவே, ஸ்டீலாவை முழு மனத்துடன் நம்பி நேசித்த எனக்குத் தேவகி-ரூப் சந்தின் வார்த்தைகள் தவருகப் பட்டதில் ஆச்சரியம் என்ன? எனக்கு அவர்கள் மீது எல்லையற்ற கோபம் உண்டாகியது. ஆயினும் அதை அடக்கிக் கொண்டு வெடிப்பாக, "நீங்கள் நினைப்பது சிறிதும் சரியல்ல; வெறும் பிரமை!" என்றேன்.

இப்பொழுது இவனிடம் என்ன சொன்னாலும் காதில் ஏறாது. வியர்த்தமாகத்தான் முடியும் என்பதை ரூப் சந்த் உணர்ந்து கொண்டார். பித்தனுக்கும் காதல் பித்தனுக்கும் கூறும் உபதேசம் கொஞ்சமும் பலன் அளிக்காது. நேர் எதிரிடையான பலனை அளிக்கத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது ரூப் சந்தைப் போன்ற அறிவாளிகள் அறியாத விஷயம் அல்லவே! ஆகவே, அவர் தம்முடைய பேச்சின் போக்கை மாற்றினார். ஆயினும் அவர்களுடைய பேச்சு அன்று எனக்கு ரசிக்கவில்லை. ஒரு காலத்தில் அவர்கள் வாயிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு சொல்லும் என் காதுக்கு அமிர்த வர்ஷமாகத் தோன்றியது உண்டு; கண்ணுவுக்குக்

கணு இனிக்கும் கரும்பாக இருந்தது உண்டு. என் உள்ளத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க விட்டது உண்டு. ஆனல் அதே பேச்சு, கரும்பாக இனித்த அதே பேச்சு, அன்று எனக்கு வேம்பாகக் கசந்தது. ஆகவே, செய்தித் தாளைக் கையில் எடுத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்யலானேன். வேண்டாதவர்களை வெளியேற்றுவதற்கு மேல் நாட்டவர் கையாளும் முறை இது. என் உத்தேசத்தை உணர்ந்த ரூப் சந்தும் தேவகியும் எழுந்து விட்டார்கள். அதைக் கண்ட நான், "என்ன, இன்று இவ்வளவு சீக்கிரம்.....?" என்று இழுத்தேன்.

நான் ஒப்புக்கு அவ்வாறு சொன்னேனே ஒழிய, என் உள்ளம் உள்ளூற அவர்கள் திரும்பவும் உட்கார்ந்து பேசத்தொடங்கிவிடாமல் இருக்கவேண்டுமே என்றுதான் அடித்துக் கொண்டது.

"நாங்கள் சீக்கிரமாகப் போவதைக் குறித்து நீங்கள் உள்ளூறச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்!" என்றாள் தேவகி. என் உள்ளத்தில் உள்ளதை அவள் எப்படித்தான் அவ்வளவு கணக்காகக் கண்டு சொன்னாளோ, எனக்குத் தெரியாது.

ஆனல், அதைக் கேட்டதும் எனக்குத் திருடனுக்குத் தேள் கொட்டினாற் போலிருந்தது. இருந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சிரித்து மழுப்பி விட்டேன். இருவரும் விடைபெற்றுக் கொண்டு போன பின்புதான் எனக்கு என் உணர்வு வந்தது. 'அப்பாடா!' என்று அமைதியான ஒரு நீண்ட மூச்சு விட்டேன்.

ஸ்டெலா வந்து விடுவாள் என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் அலைபாய்ந்து கொண்டிருந்தது. ஆகவே, நான் நள்ளிரவு வரை அவள் வரவை எதிர்பார்த்த வண்ணம் வாசற்படியில் நின்று கொண்டிருந்தேன். ஆனல் அவள் வரவில்லை. 'இன்று நேரம் ஆகிவிட்டது. நாளை வருவாள்!' என்று எண்ணி என் அறையில் போய்ப் படுத்தேன்.

சரியான தூக்கம் வந்தால்தானே? கண்ணைத் திறந்தால் அவள் கற்பனை உருவம். கண்ணை மூடினால் அவளுடைய கனவு. கனவிலும் நினைவிலும் அவள் நினைவு. இப்படியே இரவு கழிந்தது. பொழுது விடிந்தது. 'அவன் வருவான்' என்ற நம்பிக்கை என்னை மறுபடியும் வாசற்படியில் கொண்டுபோய் நிறுத்திவிட்டது. ஏதாவது மோட்டார் வந்தால் அவள்தான் வருகிறாளோ என்று எண்ணிக் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்ப்பேன். ஏதாவது பெண் குரல் கேட்டால் அவள்தான் வந்து விட்டாளோ என்று எண்ணிக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்பேன். ஆனால் அவள் வரவில்லை. இப்படியே மறு நாள் பகல் பொழுதும் ஊர்ந்து சென்று விட்டது. என் கால்கள் கடுத்தனவே ஒழிய, அவள் வரும் வழியாகத் தோன்றவில்லை. நம்பிக்கை யிழந்து அறைக்குச் சென்று நாற்காலியில் தொப்பென்று விழுந்தேன். ஆனால் நம்பிக்கை இவ்வளவு சீக்கிரம் நசிக்கக் கூடியதல்லவே! ஆகவே, என் விழிகள் வாசற்புறத்தைவிட்டு உள்ளே வர மறுத்து விட்டன. கடைசியில் நள்ளிரவும் கடந்து விடவே, ஹோட்டல் வேலைக்காரன் வாசற் கதவையும் தடாரென்று சாத்தித் தாளிட்டு விட்டான். அதைக் கண்ணுற்ற எனக்கு என்னுடைய நம்பிக்கைக் கதவும் அத்துடன் சேர்ந்தாற்போல் அடைபட்டு விட்டதாகவே தோன்றியது.

'இன்றைக்கும் இவள் வரக் காணோமே, என்னதான் காரணமா யிருக்கலாம்?' என்று யோசித்தேன். யோசிக்க யோசிக்க எனக்குக் காரணம் விளங்கினால்தானே? ஆகவே, எனக்கு இடையிடையே அவள்மீது அளவற்ற கோபம் உண்டாயிற்று. 'கையில் நாலு காசு வந்ததும் நம்மை மறந்து விட்டாளா, என்ன? அப்படி யிருந்தால் இனி நாம் இவளுடன் முகங் கொடுத்துக் கூடப் பேசக் கூடாது. ஏன்? இவள் முகத்திலேயே கூட விழிக்கக்

கூடாது. இவளுக்குச் செல்வச் செறுக்குத் தலைக்கு ஏறி விட்டது போலும்! இருக்கட்டும், சொல்லுகிறேன்!' என்று மனத்துள் கறுவிக் கொண்டேன்.

'ஆமாம், ஒரு காலத்தில் நாமும் பணக்காரனுகத் தான் இருந்தோம். காசுக்கு வீங்கிச் சாகும் ஏழையா யில்லை என்பது இவளுக்கு நினைவு இருக்க வேண்டாமா? நான் என் பணம், சொத்து, சுதந்தரம், சுகம் முழுவதை யும் இவளுக்குத்தானே அர்ப்பணம் செய்திருக்கிறேன்! நானும் எல்லோரையும் போலப் பணத்தைப் பத்திரப் படுத்தி யிருந்தால் இவளைப்போல் எத்தனையோ பேரை விலைக்கே வாங்கி யிருப்பேன் அல்லவா? இதை யெல்லாம் இவள் சிறிதாவது சிந்தித்துப் பார்த்தால்தானே? பணம் வந்தாலே இப்படித்தானே?' என்ற எண்ணம் என் உள்ளத்தை வாட்டியது. 'ரூப்சந்தும் தேவகியும் கூடச் சொன்னர்களே! அவர்கள் நம்மைவிட அநுபவசாலி களாயிற்றே! தெரியாமலா சொல்லி யிருப்பார்கள்?' என்ற எண்ணம் மூன் எண்ணத்துக்கு வலுவூட்டியது.

ஆனல் அடுத்தகணமே, 'சேச்சே! அப்படி யெல்லாம் இராது. அவள் உண்மையாகவே உயிருக்கு உயிராக என்னைக் காதலிக்கிறாள். ஒருகாலும் என்னை மறக்க மாட்டாள். புதுச் சொத்து வந்திருக்கிறதல்லவா? அதற் காக வக்கீல்களைக் கண்டு ஏதாவது ஆலோசித்துக் கொண் டிருப்பாள். இல்லாவிட்டால் கடை கண்ணி எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கவனிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தி யிருப்பாள். இதனல் எல்லாம் என்னைப் பார்க்க வர அவளுக்குப் பொழுது கிடைத் திராது. கிடைத்திருந்தால் இவ்வளவு நேரம் என்னைப் பார்க்க ஓடிவந்திருக்க மாட்டாளா?' என்ற எண்ணம் எனக்கு மறுபடியும் இழந்த நம்பிக்கையை அளித்தது.

இந்தமாதிரி நம்பிக்கைப் போராட்டத்தில் ஒரு வாரம் உருண்டோடி விட்டது. ஆனல்.....ஆனல் அவள் வர

வில்லை. ஒரு வாரத்துக்குமேல் ஆகிவிடவே, 'இனி நம் நம்பிக்கைப் பயிர் துளிர்க்காது. அது வாடினது வாடினது தான் என்ற நம்பிக்கை உறுதிப்பட்டு விட்டது. தனது அன்புக்கன்பான சுற்றத்தார் யாராவது இறந்து விட்டால் மனிதன் தன் மனத்தைத் தேற்றிக் கொள் வானே, அதுபோல் நான் என் உள்ளத்தைத் தேற்றி அவளை மறக்கப் பலவாறு முயன்றேன். ஆயினும் அவள் நினைவு முகம் மறக்கவில்லை; ஆசை முகம் அகலவில்லை; நேச முகம் நகரவில்லை.

எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் இறந்த சுற்றத் தாரின் நினைவு இலேசில் மறப்பதில்லை யல்லவா? அதே போல், அவள் என் மனத் திரையில் தன் நிழலுருவத் தைக் காட்டிக் காட்டி என் மனத்தை வருத்தி வாட்டித் துன்புறுத்திக் கொண்டிருந்தாள்.

இப்படி நான் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கும் பொழுதுதான் ஒரு நாள் திடீரென்று ஒரு மனிதன் வந்து என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றான். அதில் என்ன எழுதி யிருந்தது, தெரியுமா?

"உடனே புறப்பட்டு வரவும். வாசலில் உனக்காக நான் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருக் கிறேன். ஸ்டெலா" என்று எழுதியிருந்தது.

11. மலர் மெத்தையில் முட்கள்!

சகோதரா! அந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்கு ஆனந்தம் நிலை கொள்ளவில்லை. அப்பொழுது நான் இருந் தது என்னவோ பூமியில்தான். ஆனால் என் மனம், மூன்று எல்லாம் வான வீதியிலே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எனக்கு ஏற்பட்ட அந்த மகிழ்ச்சியை எழுத்தில் வடிக்க முடியாது. நான் ஒரே ஓட்டமாக ஸ்டெலாவின் வீட்டை நோக்கி ஓடினேன். அவளைக் காணப் போகும் ஆசையில் என் கால்கள் பறந்தன; என் கைகள் பறந்தன; என்

உடல் பறந்தது. ஏன்? என் உள்ளமும் பறந்தது. அடுத்த சில நிமிஷங்களில் நான் அவள் வீட்டு வாசலில் நின்றேன்.

ஸ்டூலா நல்ல அழகி. நான் அவளை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். ஆனால் அன்று அவள் அழகிய விலை உயர்ந்த ஆடைகள் அணிந்து ஒய்யாரமாக நின்று கொண்டிருந்ததைக் கண்ட பொழுது, எனக்கு அவள் அப்ஸரஸைக் காட்டிலும் ஒரு படி மேலாகவே தோற்றமளித்தாள். அழகின் பெருமையை அதிகப்படுத்தி, மிகைபடுத்திச் சொல்வதற்காகத்தான், அழகு சொட்டுகிறது என்று சொல்கிறார்களாக்கும் என்று இதுவரை நான் எண்ணி வந்தேன். ஆனால் அன்று அது மிகைப் படுத்திக்கூறும் சொல்லாகப் படவில்லை; உண்மையானதாகவே தோன்றிற்று. ஏனெனில் அவள் அப்படி அழகே உருவாகத் தோற்றமளித்தாள்.

கடிதத்தில் எழுதியிருந்தபடி அவள் உண்மையாகவே என்னை எதிர் பார்த்தவாறு வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் அவள் முகத்திலே முல்லை முறுவல் படர்ந்தது. ஆனால் என் உள்ளத்திலோ கோபம் குமுறிக் கொண்டிருந்தது. போனதும் போகாததுமாக அவளைக் கண்டபடி கோபித்துக் கொள்ளவேண்டும் என்று மனத்திலே கோட்டை கட்டிக் கொண்டு சென்றேன். ஆனால் அவளுடைய அந்தப் புன்முறுவலின் பிரவாகம் என் கோபத்தையும் தாபத்தையும் இருந்த இடம் தெரியாமல் அடித்துக் கொண்டு போய் விட்டது. நீர்ப் பிரவாகத்தில் சிக்கிய காகிதங்களும் புற்களும் மிதந்து ஓடி மறைந்து விடுவதுதானே வழக்கம்? ஆகவே, என் கோபமும் தாபமும் அவளுடைய புன்முறுவலுக் கெதிரே மறைந்து விட்ட விஷயத்தில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லையல்லவா?

எனக்கு வாய் திறக்க வழி தோன்றவில்லை. என் உதடுகள் ஊசி கொண்டு தைக்கப் பட்டவை போல் ஆகி

விட்டன. ஆனால் ஸ்டீலா என்னைப் போல் வாய் அடைத்துப் போய்ப் பேசாமல் நிற்கவில்லை. என்னைத் தன் கடைக் கண்ணால் காதல் கசியப் பார்த்து, "உன்மேல் எனக்கு அசாத்தியக் கோபம், தெரியுமா?" என்றாள்.

அதைக்கேட்ட பின் என் நாவுக்கும் பேசத் துணிவு உண்டாயிற்று. "நான் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கிறேனே என்பதைப் பார்த்ததும் உனக்குப் பேசத் துணிவு உண்டாகி விட்டதாக்கும்!" என்றேன் சற்று ஏளனமாகவும் கோபமாகவும்.

"அப்பப்பா! உன் கல் நெஞ்சம் வேறு யாருக்கு வரும்? நீயும் ஒரு மனிதன் மாதிரி! இத்தனை நாட்களில் என்னைப் பற்றி ஒரு நிமிஷமாவது நினைத்திருப்பாயா?" என்று என்னைக் கேட்டாள் ஸ்டீலா.

"இதைப்பற்றி என்னைக் கேட்பதில் ஒரு பிரயோசனமும் இல்லை. உன் நெஞ்சையே தொட்டுக் கேட்டுப் பார்த்துக் கொள்!" என்றேன் நான் வெகு அலட்சியமாக.

"அப்படியானால் நீ ஏன் இதுவரை இங்கு வரவில்லை? ஏதடா, ஏழை ஒருத்தி நமக்கு வேண்டியவள் என்று இருக்கிறாளே! அவளுக்கு என்ன கஷ்டமோ? இவ்வளவு நாட்களும் அவள் வரக்காணோமே! நாம் தான் ஒரு நடை போய்ப் பார்த்து வருவோமே என்று என்றைக்காவது நீ எண்ணியதுண்டா?"

"ஏழையா? யார் ஏழை? நான் அல்லவா ஏழை! உனக்குத்தான் அதிருஷ்டக்கதவு மடேரென்று திறந்துகொண்டு விட்டதே! இனிமேல் உனக்கு என்ன கவலை?" என்றேன்.

"இப்படி நொந்த புண்ணில் கோல் கொண்டு குத்திப் பரிகாசம் செய்வது உன்னைப் போன்ற ஆண்களுக்குச் சிறிதும் அழகு ஆகாது!" என்றாள் அவள்.

நான் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, "ஆமாம், நீ சொல்வதெல்லாம் உண்மை. ஆனால் நான் சொல்வதுதான்..." என்று ஆரம்பித்தேன்.

"என் மனத்தில் நிகழ்ந்தது உனக்கு எங்கே தெரியப் போகிறது? விஷத்தைத் தின்று செத்து விட்டால் என்ன என்று கூடச் சிற்சில சமயம் எனக்குத் தோன்றிவிட்டது. நீயே சற்றுக் கோபத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டுச் சிந்தித்துப் பார்! இது எத்தனை பெரிய வீடு! எவ்வளவு அழகான வீடு! எவ்வளவு வசதிகள் நிறைந்த வீடு! இந்த வீட்டில் சௌகரியங்களுக்கு என்ன குறைவு? இப்படிப் பட்ட வீட்டில், உன்னைப் பிரிந்து தனியாக இருப்பதென் றால் எனக்கு எவ்வளவு வேதனையாக இருந்தது, தெரி யுமா? இதெல்லாம் உனக்குச் சொன்னால் புரியாது. அநு பவித்தால் தான் தெரியும். நீ இல்லாத வீடு எனக்கு வீடாகவே தோன்றவில்லை; பயங்கரமான காடாகத்தான் தோன்றியது!" என்றாள் ஸ்டெலா.

அவளுடைய அந்தப் பேச்சில் தொனித்த பாவம் என் உள்ளத்தில் கொஞ்ச நஞ்சம் இருந்த கோப தாபத்தை யும் கரைத்துப் போக்கிவிட்டது. நான் அவளை நெருங்கி அவளுடைய மென்கரத்தை என் கையில் ஏந்திக்கொண்டு, "அப்படி யிருக்கும் பொழுது நீ ஏன் எனக்குச் சொல்லி அனுப்பவில்லை? ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி யிருந் தால் உன்னைப் பார்க்க நான் ஒரே ஓட்டமாக ஓடி வந்திருக்க மாட்டேனா?" என்றேன்.

ஸ்டெலா தன் மோவாய்க் கட்டையில் விரலை வைத்து, "பார்த்தாயா, பார்த்தாயா! எனக்குத் துரும்பு எடுத்துப் போடப் பொழுது இருந்தால் நான் பேசாமல், உனக்குச் சொல்லி அனுப்பாமல் இருந்திருப்பேனா?" என்றாள்.

"எனக்கு இது முன்பே தெரிந்திருந்தால்..." என்று இழுத்தேன். அதற்குமேல் எனக்குப் பேச ஓடவில்லை.

"சரி, போனது போகட்டும். உன்னைப் பார்த்ததும் என் கோபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்து விட்டது!" என்றாள் ஸ்டெலா இலேசாக என்னைப் பார்த்துச் சிரித்தவாறே.

நான் சிறிது நேரம் பேசாமல் இருந்தேன். பிறகு ஸ்டெலாவின் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டு மெதுவான குரலில், "ஸ்டெலா, இனிக் கல்யாண விஷயத்தில் நாம் காலந் தாழ்த்தக் கூடாது; துரிதப்படுத்த வேண்டும். இப்படிப் பார்த்துப் பேசிக் கொண்டிருப்பதனால் மட்டும் மனத் தாகம் அடங்கிவிடுவதில்லை. இது உனக்குத் தெரியும் அல்லவா?" என்றேன்.

இதைக் கேட்டதும் ஸ்டெலாவின் முகம் குப்பென்று சிவந்தது. கன்னங்களில நாணம் குமிழியிட்டது. கையில் அணிந்திருந்த உறையைக் கழற்றியவாறே, "என் எண்ணமும் அதுவே தான்!" என்றாள் அவள்.

இதே சமயம் வெளியே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்தாற் போலவே, "எல்லாவற்றையும் இந்தச் சிறிய அறையில் இங்கே கொண்டு வந்து வைத்துவிடு" என்ற குரலும் வந்தது.

அந்தக் குரல் காதில் விழுந்ததும், ஸ்டெலாவின் முகம் போன போக்கைச் சொல்லி முடியாது. அவளுடைய முகம் பேய் அறைந்தது போல் வெளுத்து விட்டது. அவளுடைய கை கால்கள் நடுங்கத் தொடங்கின. எங்கே கீழே விழுந்து அவள் மூர்ச்சையாகி விடுவாளோ என்று கூடத் தோன்றியது. அதைக் கண்ட நானும் துணுக்குற்றேன். எனக்கும் உள்ளூற உதறல் எடுத்தது. என் உடல் பலம் அனைத்தும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது போன்ற பிரமை உண்டாகியது. 'இது என்ன தலைவலி?' என்று மனக் குழப்பத்துடன் சிந்திக்கலானேன்.

அதுவரையில் உட்கார்ந்திருந்த ஸ்டெலா சட்டென்று எழுந்து நின்றாள். திடீரென்று அவள் கண்கள் பளிச்சிட்டு ஒளி வீசின. வழி தவறிவிட்ட வழிப் போக்கனுக்குத் திரும்பவும் வழி கிடைத்துவிட்டால் மகிழ்ச்சியுறுவானே, அதுபோல, அத்தனை நேரமும் திகைத்துத் திக்பிரமை பிடித்தவள்போல் இருந்த ஸ்டெலா மகிழ்ச்சி

அடைந்தாள். உடனே அவள் தன் கையினுல் ஒரு அறையை எனக்குச் சுட்டிக் காட்டி, "இந்த அறைக்குள் ஒளிந்து கொள். தருணம் பார்த்துப் பின்புறத்துக் கதவைத் திறந்துகொண்டு ஜாக்கிரதையாக வெளியேறி விடு. இப்போது இதைப்பற்றி யெல்லாம் என்னிடம் ஒன்றும் அதிகமாகக் கேட்காதே. நான் இன்னெரு தடவை சாவகாசமாக எல்லா விவரங்களையும் உன்னிடம் சொல்லுகிறேன்!" என்று சொல்லி ஒரு சாவிக் கொத்தை என் கையில் திணித்தாள். அடுத்த கணம் நான் அந்த அறைக்குள் நுழைகிறேனு, இல்லையா என்பதை எதிர் பார்க்காமலே என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் அதற்குள் தள்ளினுள். பிறகு வெளிப் புறமாகக் கதவைத் தாளிட்டுக் கொண்டு கையோடு கையாக ஒரு பூட்டை எடுத்துப் பூட்டியும் விட்டாள்.

நான் பயந்த குழந்தையைப் போல் பேந்தப் பேந்த விழித்தேன். என் வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளிவர வேண்டுமே! அது தான் இல்லை. என் நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டுவிட்டது. நன்முக அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் மனிதனைத் தூக்கி நடுக்கடலில் விட்டெறிந்தால் அவன் விழித்துக் கொண்டதும், பேரிரைச்சல் புரிந்து கொண்டு தன்னைத் திக்கு முக்காட வைப்பதற்காக முன்னேறி வரும் அலைகளைக் கண்டு அச்சத்தினுல் கதிகலங்கிப் போவான் அல்லவா? அதுபோல் நான் கதிகலங்கிப் போனேன். கண நேரத்துக்குள் இப்படி யெல்லாம் நடக்கக்கூடும் என்று நான் சிறிதாவது எதிர்பார்த்திருந்தால் தானே? எனக்குக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. இதுவரை நான் காதலை மலர் மெத்தையாக எண்ணி வந்தேன். இதில் முட்களும் உண்டு என்பதை எண்ணியிருந்தால் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க மாட்டேன். அப்படியே முன்னேறி யிருந்தாலும் கூடியவரை ஜாக்கிரதையாக இருக்க முயன்றிருப்பேன்.

நடந்தது என்னவோ நடந்துவிட்டது. அதைப்பற்றி இனி மேல் யோசித்து என்ன பலன்? மலர்களைப் பார்த்தா யிற்று. முட்களைப் பார்க்க வேண்டிய முறை வந்து விட்டது. வேண்டாம் என்றால் யார் விட்டார்கள்? அதையும் பார்த்து அநுபவித்துத் தானே தீரவேண்டும்?

சிறிது நேரம் சென்றது. நேரம் ஆக ஆக, பொழுது போகப் போக, இந்தச் சிறையில் வருஷக் கணக்காக அடைப்பட்டிருப்பது போன்ற பிரமை என்னைப் பிடித்துக் கொண்டு என்னைத் திகிலுறச் செய்தது. கதவை உடைத்துக் கொண்டு வெளியேறி விட்டால் என்ன என்றுகூட எண்ணினேன். அப்பொழுது வெளியே யாரோ ஆனந்தமாக ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டு போவது காதில் விழுந்தது. அவன் நிலைமை எனக்குப் பொறுமையை உண்டு பண்ணிற்று. 'ஆகா! அவன்தான் எவ்வளவு அதிருஷ்டசாலி! எங்கே நினைத்தாலும் போகிறான். என்ன வேண்டுமானாலும் செய்கிறான். அவன் யாரோ, தெரியவில்லை. ஆயினும் அவனுக்கு எவ்விதமான பயமும் இல்லை; பீதியும் இல்லை. பாக்கியசாலி என்றால் அவன் அல்லவா பாக்கியசாலி!' என்று எண்ணி அவனை நினைத்து மனம் பொருமினேன்.

காட்டிலே சுயேச்சையாகப் பறந்து திரிந்து ஆனந்த கீதம் பாடி வரும் பறவைக்குச் சுதந்திரத்தின் மகிமை எங்கே தெரியப் போகிறது? அதைப் பிடித்துக் கூட்டில் அடைத்துச் சிறை வைத்தபின் அல்லவா அது சுதந்திரத்தின் மகிமையை உணரும்? நீரில் வாழும் மீன் நீரில் இருக்கும் வரையில் 'நாம் சுதந்திரமாக வாழ்கிறோம்' என்பதை அறியுமா? அதைப் பிடித்துக் கரையில் போட்டால் அல்லவா அதற்குச் சுதந்திரத்தின் பெருமை தெரியவரும்? 'வாழ்ந்தால் நீரில் சுதந்திரமாக வாழவேண்டும். இல்லாவிட்டால் பிராணனை விட்டுவிட வேண்டும்' என்று துடியாய்த் துடிக்கும். அதேபோலத் தான் எவ்விதக் கட்டுப்

பாடும் இன்றி, 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று என் இஷ்டப்படி சுயேச்சையாக வாழ்ந்துவந்த எனக்கு அந்த அறை கடுஞ்சிறையாகப் பட்டது.

எனக்குச் சுதந்திரத்தின் மதிப்பு சுதந்திரத்தை இழந்து அறையில் அடைபட்ட பின்தான் தெரியவந்தது. ஆனால் நான் என் சுதந்திரத்தை இழந்தது இரண்டு ஒரு மணி நேரத்துக்குத்தான் என்றாலும் என் உள்ளம் அந்தச் சுதந்திரத்துக்காக என்ன தவியாய்த் தவித்தது, தெரியுமா? சுதந்திரத்தின் பெருமையை உணர்வதற்கு அதைவிட அரிய சந்தர்ப்பம் கிட்ட முடியாது. நான் ஒரு நாற்காலியில் அமர்ந்து, 'நமக்கு எப்பொழுது அந்த ஆனந்த சுதந்திரம் கிட்டும்' என்றுஏக்கத்துடன் எதிர்பார்க்கலானேன்.

இதே சமயம், "வக்கீல் எனக்குத் தந்தி அடித்திருந்தார். அதனால் தான் நான் திரும்பி வந்துவிட்டேன்....." என்று யாரோ வெளியில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

குரலைக் காது கொடுத்துக் கேட்ட எனக்கு அது ஒரு கிழவியின் குரலாகத் தோன்றியது.

"ஏதாவது முக்கியமான சமாசாரமாயிருக்கலாம். இல்லாவிட்டால் அவர் எதற்காக இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டிருக்கப் போகிறார்?" என்றாள் ஸ்டெலா.

"அப்படித்தான் இருக்க வேண்டும். ஏன், ஸ்டெலா! நான் இப்படி 'திடு திப்'பென்று திரும்பி வந்து விட்டது பற்றி, ஒன்றும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே!" என்று கேட்டாள் கிழவி.

"தவறாக எடுத்துக் கொள்வதா? தாய் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தால் பெண் எங்கேயாவது தவறாக எடுத்துக் கொள்வது உண்டா? நீ சொல்லுவது அதிசயமாக அல்லவா இருக்கிறது!" என்றாள் ஸ்டெலா.

"இல்லை, ஸ்டெலா! இல்லை. நான் சும்மாக் கேட்டு வைத்தேன். நீ வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாதே! நான் ஒரு கிழவிதானே?" என்றாள் கிழவி.

"இம்மாதிரி நீ பேசுவது எனக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. ஆமாம். சொல்லிவிட்டேன்!" என்றாள் ஸ்டெலா.

"இனிமேல் பேசவில்லை. இந்தத் தடவை மட்டும் மன்னித்துவிடு" என்று சொன்ன கிழவி, "ஸ்டெலா! சற்று எதிர் அறையின் சாவியைக் கொண்டுவாயேன்!" என்றாள்.

கிழவி சொன்னதைக் கேட்டதும் எனக்கு வியர்த்து விறு விறுத்துவிட்டது.

"எதற்கு, அம்மா!"

"என் கவுன் அந்த அறைக்குள் இருக்கிறது. எடுத்துக் கொள்ள வேண்டும்!"

"கவுன்தானே? இதோ நானே எடுத்து வருகிறேன். உனக்குப் பிரயாணக் களைப்பு அதிகமாயிருக்கும். வந்த சிரமம் நீங்க, இதோ, இந்த நாற்காலியில் உட்கார்ந்து சற்று இளைப்பாறு. நான் போய்க் கொண்டு வந்து தருகிறேன்!" என்றாள் ஸ்டெலா.

"சிரமமும் இல்லை, கிரமமும் இல்லை. நான் என்ன நடந்து வந்தேனு, கைகால் கடுத்துப் போவதற்கு? வேண்டாம், இங்கே சாவியைக் கொண்டு வா! நானே எடுத்துக் கொள்கிறேன்!" என்றாள் கிழவி.

"இல்லை, அம்மா! என்ன இருந்தாலும் உனக்கு வயதாகிவிட்டது. என்னைப் போன்ற குமரிகளுக்கே இந்தப் படி ஏறி வந்தால் மூச்சு முட்டிப் போகிறது. அப்படியிருக்கும் பொழுது உன்னைப் போன்ற கிழவிகளைப்பற்றிக் கேட்பானேன்? நீ சிரமப்படுவதைக் காண என்னால் ஆகாது. நீ பேசாமல் உட்காரு. நானே கொண்டு வருகிறேன்!" என்றாள் ஸ்டெலா மறுபடியும் பிடிவாதமாக.

ஆனால் கிழவி கேட்கவில்லை. சாவியை வாங்கிக் கொண்டுதான் மறு காரியம் பார்த்தாள். சாவியை வாங்கிக் கொண்டதும் என் அறையை நோக்கி வந்தாள். அவள் என் அறையை நெருங்கி வர வர, என் சாவே என்னை நெருங்கி வருவது போலிருந்தது. எனக்கு மூச்சே நின்று

விட்டது. பின்புறத்துக் கதவைத் திறந்து கொண்டு ஓடி விடுவோமா என்று எண்ணினேன். ஆனால் என் கால்கள் எழும்பினால் தானே? எனக்கு எழுந்திருக்கவே திராணி இல்லை. கால்கள் எப்படி எழும்பும்? என் உடல் பலம் முழுவதும் எங்குதான் சமயம் பார்த்து ஓடிப் போயிற்றோ, தெரியவில்லை! கிழவி கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். நான் ஒரு மூலையில் மறைந்து நின்றேன். ஆயினும் அவளுடைய கிழட்டுக் கண்கள் என்னைக் கவனித்து விட்டன. வலிய வரும் விதியைத் தடுக்க யாரால் ஆகும்? அவள் உரக்க வீரிட்டுச் சத்தமிட்டு, "திருடன் திருடன்!" என்று கத்தினாள்.

அவ்வளவுதான்; என் இரத்தம் சுண்டிவிட்டது. நிலைமை இவ்வளவு பயங்கரமாக உருவம் தரித்துவிடும் என்று நான் அப்பொழுது கனவிலும் கருதவில்லை. நான் தப்புவதற்கு உபாயம் தோன்றுமுன் தவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஸ்டீலாவுக்குத் தப்புவதற்கு நல்ல உபாயம் ஒன்று கிடைத்துவிட்டது. உடனே அவள் வெளியே ஓரே ஓட்டமாக ஓடி, "திருடன், திருடன்!" என்று உரக்கக் கத்தி ஊரைக் கூப்பிட்டாள்.

அதைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அஜாக்கிரதையாகச் சட்டை போட்டுக்கொள்ளும் ஒருவன் சட்டையை மாட்டிக் கொண்டதும் சர்ப்பம் அதனுள்ளிருந்து வெளிவருவதைக்கண்டால் எப்படித் துணுக்குறுவான்? அதேபோல் நான் துணுக்குற்றுத் துள்ளிக் குதித்தேன். ஸ்டீலாவின் வறட்சி நிறைந்த சுபாவம், ஏமாற்று வித்தை, மோசடி, சூது, வாது எல்லாவற்றையும் நான் கண்டிருக்கிறேன். அவையெல்லாம் எனக்கு ஒன்றும் புதிதில்லை. ஆனால் தன்னை நல்லவளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் என் மானத்தையும் மரியாதையையும் இப்படிப் பலி வைப்பாள் என்று நான் நினைக்கவே இல்லை. என் கால்கள் கனத்தன; உடல்

வெல வெலத்தது; தலை சுற்றியது. நான் சிலையாக நின்று விட்டேன். அப்பொழுது எனக்குக் கையிலிருந்த சாவிக் கொத்தை விட்டெறியக் கூடத் தோன்றவில்லை.

இதற்குள் போலீஸ்காரன் வந்து என்னைக் கைது செய்துவிட்டான். நான் சிறிது நேரத்துக்கு முன்புதான் இரண்டொரு மணி நேரத்துச் சிறைவாசத்துக்குப் பயந்து செத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ...? அநேக ஆண்டுகள் நான் சிறைக் கம்பிகளை எண்ணியாக வேண்டுமே! என்ன செய்வது? ஆனால் நான் அதைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. மனிதன் இவ்வளவு தூரம் மக்கட் தன்மையை விட்டு ஒழித்து நன்றி கெட்ட வனாக ஆகக் கூடும் என்னும் எண்ணம் என் மன வருத்தத் தையும் சிறை வாசத்தினால் கிடைக்கப் போகும் அவமா னத்தையும் எத்தனையோ பங்கு குறைத்துவிட்டது.

பிறகு அந்தக் கிழவி ஸ்டெலாவின் சிற்றன்னை என் பதையும், 'ஸ்டெலா அவள் இஷ்டப்படி நடக்க வேண்டும். அப்பொழுதுதான் அவளுக்குத் தம் சொத்து கிடைக்கும்' என்று அவளுடைய சிற்றப்பாவின் உயிலில் கண்டிருக் கிறது என்பதையும் தெரிந்து கொண்டேன்.

ஸ்டெலா அந்தக் கிழவியின் மனத்துக்கு மகிழ்ச்சியை அளிக்கும் விஷயத்தில் காட்டிய சிரத்தையையும், தன் மகிழ்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு என்னு டைய மானம் – மரியாதை எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு மண்ணோடு மண்ணாக்கத் துணிட்டமிட்டு விட் டதையும் நினைக்க நினைக்க என் உள்ளம் புழுங்கியது. 'என்ன உலகமடா!' என்று உலகத்தை நொந்து கொள் வதைத் தவிர எனக்கு வேறு வழி தென்படவில்லை.

12. படகு கவிழ்ந்தது!

சகோதரா! திருட்டுப் பட்டம் கட்டிய பிறகு நடக்க வேண்டியது நடந்தது. அதாவது என் மீது வழக்குத்

தொடரப்பட்டது. நான் திருடன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்ட பிறகு செய்தித் தாள்களுக்கு வேண்டிய விஷயங்கள் கிடைத்து விட்டன. புதுச் செய்தி எங்கே எப்பொழுது கிடைக்கப் போகிறது என்று கழுகாகக் காத்துக் கொண்டிருப்பவர்கள் அல்லவா இந்தப் பத்திரிகைக்காரர்கள்! என்னைப் பற்றிய தகவல் கிடைத்ததும் முதல் காரியமாக கொட்டை கொட்டையான எழுத்துக்களில் விதம் விதமான ஜன ரஞ்சகமான தலைப்புகள் கொடுத்து ஒன்றை ஒன்பதாக்கி இந்தச் செய்தியைப் பரப்பும் விஷயத்தில் பத்திரிகைகள் பிரமாதமாகக் கைங்கரியம் செய்தன. ஒரு பத்திரிகையாளன் என்னை நாகரிகத் திருடன் என்று நாகரிகமாகக் குறிப்பிட்டால் இன்னொருவன், இவன் கையில் கால் காசுகூட இல்லாத கபோதி என்று பறை சாற்றுவான். வேறு சில பத்திரிகைகள் இன்னும் ஒரு படி முன்னேறி விட்டன. 'இவனுடைய தொழிலே இதுதான்!' என்று கண்டு பிடிக்க முடியாத பெரிய இரகசியத்தைத் தாங்கள் கண்டு விட்டது போல முன் கூட்டியே தகவல்கள் தெரிவித்தன. இதுமட்டுமா? சில பத்திரிகைப் பிரதிநிதிகள் ஸ்டூலாவையே பேட்டி கண்டு, பேட்டி விவரத்தைப் பிரசுரித்திருந்தனர். பத்திரிகைக்காரர்களுக்குக் கதை கட்டவா தெரியாது? என்னைப் பற்றி எனக்கே தெரியாத எத்தனையோ கதைகளைக் கன கச்சிதமாகக் கட்டி விட்டனர்.

ஸ்டூலா தன் மானத்தைக் காத்துக் கொண்டாள். ஆனால் என் மானத்தை வாங்கி எனக்குக் கெட்ட பெயர் சூட்டும் விஷயத்தில் எவ்விதமான சிறு குறையும்கூட வைக்கவில்லை. அவள் என் மானத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அவள் பேட்டியின் பொழுது, "எனக்கு இந்த இந்தியனைத் தெரியவே தெரியாது. இதற்கு முன்னால் இவனை நான் எங்குமே பார்த்ததில்லை.

இவன் திருடுவதற்காகவே என் அறைக்குள் வந்திருக்க வேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இல்லா விட்டால் இவனுக்கு என் அறைக்குள் வேறு என்ன வேலை இருக்கமுடியும்?" என்று சொல்லியிருக்கவேண்டும். இவற்றைப் பத்திரிகைகளில் படித்துப் பார்த்தபொழுது எனக்குக் கண்களே இருட்டியது; காதுகளே அடைத்தது. உலகமே அதல பாதாளத்தில் அழுந்தி விட்டது போலத் தோன்றியது.

இவற்றை யெல்லாம் பார்த்த பொழுது 'நாம் விடு படுவதற்கு வழி இருக்கிறது!' என்று நான் கொண் டிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் குறைந்து கட்டாயம் நமக்குத் தண்டனை கிடைத்தே தீரும் என்ற உறுதியான எண்ணம் உண்டாகி விட்டது. நான் உதவி வேண்டி எத்தனையோ ஆங்கிலேய நண்பர்களுக்குக் கடிதம் எழுதி னேன். 'பெரியார்க்கு அழகு பேசாமல் இருத்தல்' என்ற கொள்கையைக் கைப்பற்றியோ என்னவோ, யாருமே இரண்டு வரி பதில் எழுதும் சிரமத்தைக்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. மேல்நாட்டு நட்பின் தன்மையே இத் தகையதுதான் போலும்!

ஆனல் ரூப்சந்த் இந்த இக்கட்டான நிலைமையிலும் கூட எனக்கு உதவிபுரிய முன் வந்தார். என்னை எப் படியோ ஜாமீனில் சிறையிலிருந்து விடுவித்து வீட்டுக்கு அழைத்து வந்தார். அதற்குப் பிறகு நான் அநேக நாட்கள் வரை அவரை அரை நிமிஷங் கூடக் கவலையற்று வீட்டில் உட்கார்ந்து பார்க்கவில்லை. இரவு பகல் எந்நேரமும் என் வழக்குக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முழுமூச்சுடன் முனைந்திருந்தார். அவர் அந்த வழக்கில் அவ்வளவு தீவிர மாக ஈடுபட்டிருப்பதைக் காணும் பொழுது, 'வழக்கு என் மீது நடக்கிறதா? அல்லது இவர் மீது நடக்கிறதா?' என்ற சந்தேகமே என் உள்ளத்தில் எழலாயிற்று. தன் மீது வழக்கு நடந்தால்கூட ஒரு மனிதன் இவ்வளவு

அக்கறை செலுத்தமாட்டான் என்றே தோன்றியது. அவரே வழக்குக்கான தஸ்தாவேஜுகளை வைத்துக் கொண்டிருந்தார். அவரே வாக்குமூலம் தயார் செய்து கொண்டிருந்தார். அவரேதான் சாட்சியங்களும் தயார் செய்து கொண்டிருந்தார். வக்கீல்களிடமும் அவரேதான் ஆலோசனைக்குப் போய் வந்தார். அவருடைய இந்த ஈடுபாடு என் உள்ளத்தில் சோம்பேறித்தனத்தின் விதையை விதைத்துச் சென்றது. நான் வழக்கைப் பற்றிய விவரங்களைச் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளாமல் வெகு அலட்சியமாக இருக்கலானேன்.

வழக்கைப் பற்றிய கவலை எனக்கு இல்லாமற் போகவே, நான் நாள் முழுதும் தேவகியின் அருகிலேயே உட்கார்ந்திருக்கலானேன். அப்பொழுதுதான் எனக்கு அவளுடைய தன்மான உணர்ச்சியின் பெருமை தெரிய வந்தது. மேரி கொரிலி, ரெய்னால்ட்ஸ், விக்டர் ஹ்யூகோ, அலெக்ஸாண்டர் டூமாஸ் முதலிய ஆசிரியர்களின் நவீனங்களை அவள் படித்து நான் பார்க்கவில்லை. அவள் அவற்றைச் சிறிதும் விரும்புவதில்லை. அந்த நவீனங்கள் எல்லாம் அவளுக்கு நவீனங்களாகவே தோன்றுவதில்லை. அவள் ராமாயணமும் கீதையும்தான் படித்து வந்தாள். இந் நூல்களில் ரெய்னால்ட்ஸின் நவீனங்களில் வருவது போன்ற சுழற்சிகள் கிடையாது. டூமாஸின் நவீனங்களில் உள்ள சிக்கல்கள் காணக் கிடைப்பதில்லை.

ஆனால் மானிட வாழ்க்கையின் பரிசுத்தமான நோக்கங்களும் உயர்ந்த ஆதர்ச வாழ்க்கைக்கு வேண்டிய கோட்பாடுகளும் வரிக்கு வரி குறையா மணியாகக் குவிந்திருக்கின்றன. இதையெல்லாம் தேவகி விளக்கிக் கூறவே, நான் வியந்து அயர்ந்து போய் விட்டேன். மேல் நாட்டு இலக்கியங்கள் அத்தனையும் எடுத்து வைத்தாற் கூட இந்த ஒரு ராமாயணத்துக்கு ஈடாக முடியாது என்ற முடிவுக்கு வந்தேன். மிக மிகத் துச்சமான பரமாணு

விலும் சிறிதான ஒரு பொருளைப் பகவான் சூரியனுக்கு ஈடாகச் சொல்ல முடியுமா? அதே போலத்தான் மேல் நாட்டு இலக்கியங்கள் அத்தனையும் அந்த ஒரு ராமாயணத்துக் கெதிரே நிற்க முடியாது என்று தோன்றிற்று. மிக மிகக் கியாதி வாய்ந்த ஆங்கில நூலாசிரியர்களின் மிக மிகச் சிறந்தவை என்று சொல்லப்படும் நூல்கள் எல்லாம் கூட அந்த ஒரு ராமாயணத்துக்கு ஈடு இணையாக இருக்க முடியாது என்று நான் எங்கு வேண்டுமானாலும் துணிந்து கூறுவேன்.

பாரத தேசத்தில் இது போன்ற உயர்ந்த நூல்கள் இருக்கக் கூடும் என்ற எண்ணமே இதுகாறும் என் உள்ளத்தில் எழுந்ததில்லை. தேவகிக்குச் சீதாதேவியின் வாழ்க்கைச் சரித்திரம் மிக மிகப் பிடித்திருந்தது. சீதாதேவியின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அவள் கண்களில் நீர் கோத்து நிற்கும். கற்புக்கரசி சீதாதேவி பட்ட துன்பங்களை நினைத்தால் யாருக்குமே கண்களில் நீர் வருவது இயல்புதானே? ஆனால் தேவகியிடம் இன்னொரு விஷயமும் இருந்தது. அவள் வெறுமனே நூல்களைப் படிப்பது மட்டும் இல்லை. படிப்பதில் நல்லவற்றைத் தன் வாழ்க்கையிலும் மேற்கொண்டு அதன்படி நடக்க முயன்றாள். சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று உபதேசம் செய்யும் பெரியார்கள் எங்கும் உண்டு. ஆனால் அதைக் கடைப்பிடிக்கும் பெரியார்களைக் காண்பதுதான் துர்லபம்.

தேவகி மிகவும் அடக்கமானவள். இனிய சுபாவம் படைத்தவள். தூய்மையான இருதயம் உள்ளவள். நற்குணங்கள் பல பொருந்தியவள். அழகுக்கே உருவானவள். இவையெல்லாம் சேர்ந்து அவளுக்கு அலாதிக் கனியை அளித்திருந்தன. அவள் முகத்தில் தேஜஸ் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவளைக் காணக் காண எனக்கு இந்தியாவின் மீது அபார அபிமானமும் அளவிட

முடியாத பற்றும் உண்டாயின. 'பாரதநாடு பழம் பெரு நாடு' என்ற பெருமை உணர்ச்சி என் உள்ளத்தில் தானுகவே தலைதூக்கி நிற்கலாயிற்று.

நான் முன் செய்த தீச் செயல்களை நினைவுறுத்தி அவள் ஒரு வார்த்தை யென்றல் ஒரு வார்த்தை கூட என்னிடம் ஏதும் குறை கூறியதில்லை. நான் செய்துள்ள தவறுகளைக் கணக்கிட்டுக் கூறியதில்லை. இம்மாதிரி முன் செய்த தவறுகளை எடுத்துக் காட்டி மனத்தைப் புண் படுத்த முயல்வது நாகரிகத்துக்குப் புறம்பான, மனிதத் தன்மைக்கு மாசு கற்பிப்பதான விஷயம் என்று அவள் எண்ணி வந்தாள். நான் அவளுடன் நெருங்கிப் பழகப் பழக, அவளுடைய தூய்மையின் பெருமையை உணர்ந் தேன். அவள் பரிசுத்தமானவள், தூய்மையே உருவான வள் என்ற எண்ணம் என் உள்ளத்தில் வலுப் பெற்றது. அவளுடைய காலடிகளில் விழுந்து பணிந்து, 'அம்மா, தாயே!' என்று கதறிப் பூர்வ ஜன்ம பாவங்களுக் கெல் லாம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று என் இருதயத் தின் ஆழத்தில் ஏதோ ஒன்று கூறியது. அவளை நான் பெண் அல்ல; பெண் உருவத்தில் வந்த தெய்வம் என்றே எண்ணினேன். அவளுடைய தூய்மையான தாய் அன்பு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது.

நண்பா! வழக்கு முடிந்து அதன் தீர்ப்பு வெளியா யிற்று. ரூப்சந்தின் இடைவிடாத முயற்சியும் சலியாத உழைப்பும் வீண் போகவில்லை; நற்பலனையே அளித்தன. தீர்ப்பு எனக்குச் சாதகமாக முடிந்து நான் விடுபட்டேன். அதுமட்டும் அல்ல; ஸ்டெலாவின் மீது எதிர் வழக்கு வேறு தொடரப்பட்டது. அவள் கண்ணியமான ஒரு மனித னுக்கு மானநஷ்டம் உண்டுபண்ணி விட்டாள் என்பதற் காக அவளுக்கு இருபத்தைந்து பவுன் அபராதமும் விதிக் கப்பட்டது. அப்பப்பா! இப்பொழுது நினைத்தாலும் எனக்கு வியப்பா யிருக்கிறது, என் தன்மானத்தின் பெரு

மானம் இருபத்தைந்து பவுன்தான் என்பதை நினைக்கும் பொழுது! என்ன நியாயம்! என்ன தீர்ப்பு! ஆகா! மானத்தைப் பணம் கொண்டு மீட்டுவிடலாம் போலும்!

ஆனால் அதே நான் இந்தியனாக மட்டும் இல்லாமல் ஆங்கிலேயனாக இருந்திருந்தால் எதிர் வழக்கின் தீர்ப்பு இப்படியா இருந்திருக்கும்? ஸ்டூலாவுக்கு மானம் என்று ஒன்று இருந்தால், அது கப்பலேறும்படியான சிறைத் தண்டனையல்லவா கிடைத்திருக்கும்? அவளுடைய சொத்தின் பெரும் பகுதி அபராதமாக விதிக்கப்பட்டிராதா?

என் பொருட்டுச் சிரமத்தைச் சிரமமாகப் பாராட்டாமல் பாடுபட்ட ரூப்சந்த்துக்கு நான் என் வந்தனங்களைத் தெரிவித்தேன். அவர் செய்த நன்றிக்கெதிரே என் வந்தனம் எம்மாத்திரம்? வாயால் வந்தனம் என்று சொல்லிவிட்டால் ஒருவர் செய்த உபகாரத்துக்குப் பிரதி செய்துவிட்டதாகுமா? இல்லாததற்கெல்லாம் வாய் வந்தனம் செலுத்தும் இந்த மேல் நாட்டுச் சரக்குத் தான். அந்தரங்க சுத்தியுடன் அல்லவா செய் நன்றி கொல்லாமல் இருக்க வேண்டும்?

எனக்கும் ரூப்சந்துக்கும் எந்தவிதமான உறவும் கிடையாது. பந்தமும் கிடையாது. நான் யாரோ, அவர் யாரோ? ஆனால் நான் இந்தியன் என்ற ஒரே காரணத்துக்காக, உறவுக்காக அவர் என் பொருட்டு இந்தப் பேருபகாரத்தைச் செய்தார். இந்தியன் என்ற இந்த உறவு இருக்கிறதே, இது ரத்த சம்பந்தம், நட்பு என்ற எல்லா உறவுகளையும்விட எவ்வளவோ உறுதியானது, மேலானது. இது தாய் நாட்டின் தொடர்பு. பிறந்த நாட்டின் பண்பு. இந்தத் தொடர்பைப் பற்றி இதைவிட வேறு என்ன சொல்ல முடியும்!

என் உள்ளத்தில் கணவன் மனைவி இருவரிடமுமே நன்றி உணர்ச்சி குடி கொண்டது. அந்தத் தம்பதி

களிடம் எனக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது. இருவரும் மனித உருவத்தில் அவதரித்த தெய்வங்களாகவே என் கண்களுக்குத் தோற்றமளித்தனர். நான் இருவரையும் வழிபடும் தெய்வங்களாக மதித்து என் உள்ளக் கோவிலில் இருவருடைய உருவங்களையும் பிரதிஷ்டை செய்து பூஜிக்கவே தொடங்கி விட்டேன். மனிதர்கள் இவ்வளவு தன்னலமற்றவர்களாகவும் நேர்மையானவர்களாகவும், இனிய சுபாவம் படைத்தவர்களாகவும் இருக்கக்கூடும் என்ற எண்ணமே என் உள்ளத்தில் இதுகாறும் எழுந்ததில்லை. அவர்கள் கடை வீதி வழியே போய்க் கொண்டிருப்பதைக் காணும் பொழுது காக்கைக் கூட்டத்திலே இரண்டு ராஜ ஹம்சங்கள் அன்னநடை போட்டுக் கொண்டு நடந்து செல்வதுபோல எனக்குத் தோன்றும்.

வர வர எங்கள் தொடர்பு மிகவும் நெருக்கம் உற்றது. முன்பெல்லாம் அவர்கள் என் வீட்டைத் தேடி வந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ, நான் அவர்களுடைய வீட்டைத் தேடிப் போகலானேன். ஒரு நாள் அவர்கள் வீட்டுக்குப் போய் அவர்களைச் சந்திக்கவில்லையென்றாலும் என் மனம் என்னவோ போலாகிவிடும்; வெறிச்சோடி விடும். மிக முக்கியமான கடமைகளில் ஒன்றைச் செய்யத் தவறி விட்டதாக எண்ணி நான் மிகவும் மனம் புழுங்குவேன். என் நிலைமை மட்டும்தான் இப்படி ஆகிவிட்டது என்பதில்லை. அவர்களுடைய நிலைமையும் என்னுடைய நிலைமையைப் போலவேதான் ஆகிவிட்டது. அவர்கள் என்னைத் தங்கள் வீட்டு மனிதர்களில் ஒருவனாக மதித்தனர். எந்தச் சிறிய விஷயத்துக்கும் என்னிடம் ஆலோசனை கேட்டனர். நாட்கள் செல்லச் செல்ல எங்களுடைய ஆந்தரீகத் தொடர்பு வலுவுற்று நாங்கள் பிரிக்க முடியாதவர்களாகவே வாழலானோம்.

ஒரு நாள் நானும் தேவகியும் உலாவச் சென்றோம். ரூப்சந்த் ஏதோ வேலை இருக்கவே எங்களுடன் உலாவ

வரவில்லை. வான வீதியிலே மேகக் கூட்டங்கள் மிதந்து கொண்டிருந்தன. தேவகி அடிக்கடி வான வீதினையை அண்ணாந்து பார்க்கலானாள். மழை வந்து விட்டால் என்ன செய்வது என்று ஒருவேளை அவள் பயந்தாளோ, என்னவோ! ஆனால் நான் அதை யெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஒரு படகை வாடகைக்குப் பேசிக் கொண்டு ஏறி உட்கார்ந்தேன். தேவகியும் தயங்கியவாறே ஏறி உட்கார்ந்தாள். படகு சமுத்திரத்தைச் சுற்றி வரப் புறப்பட்டது. தேவகி மனத்துள் கரட்டு ஒணாண விழுங்கிக் கொண்டிருந்தாள். ஆனால் வாய் திறந்து தன் மனத்தில் உள்ளதை என்னிடம் சொல்லவில்லை. நான் கோபித்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று அவள் பயந்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

கடலில் உல்லாசப் பிரயாணம் செய்யும் ஆவலில் நானும் அவளைக் கிண்டிக் கேட்கவில்லை. எங்கள் படகு கடல் அலைகள் மீது ஆடி அசைந்த வண்ணம் முன்னேறிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்துக் கெல்லாம் நாங்கள் வானத்தைப் பார்ப்பதை மறந்து கடல் அலைகள் செய்யும் கிரீடைகளைக் கண்டு ரசிப்பதில் மூழ்கிவிட்டோம். ஆழ் கடலின் அலைகள் ஒன்றை யொன்று பிடிக்கத் தாவி ஓடி வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஒரு அலை இன்னொரு அலையைப் பிடிக்க நெருங்கியதும் இரண்டு அலைகளும் கெக்கலி கொட்டிச் சிரித்துக் கலைந்து போகும் காட்சியும் கண்களுக்குக் குளுமையை அளித்தது. உயரமாக எழும்பும் அலைகள் உடையாமல் நெளிந்து நெளிந்து வரும் பொழுது அவை எதையோ வாரிச் சுருட்டிக் கொண்டு வருவது போன்ற பிரமை உண்டாயிற்று. கடல் அலைகளைப் பற்றிய கற்பனைக் காட்சிகளில் எவ்வளவுநேரம் போயிற்றோ, எனக்குத் தெரியாது. இயற்கை இன்பத்தைப் பருகத் தொடங்கி விட்டால் மனிதனுக்குப் பொழுது போவது தெரிவது ஏது? எங்களை

மறந்து விட்ட நாங்கள் கரையிலிருந்து வெகு தூரம் கடலுக்குள்ளே சென்று விட்டோம்.

திடீரென்று தடித் தூற்றல்கள் இரண்டு ஒன்று மேலே விழுந்தன. அடுத்த கணம் 'பட பட' வென்று மழையே வந்து விட்டது. தன்னை மறந்து நல்ல நித்திரையில் ஆழ்ந்திருப்பவர்கள் மீது 'பட பட' வென்று மழை கொட்ட ஆரம்பித்து விட்டால், எப்படித் துணுக்குறுவார்கள்? அதே போல நாங்கள் திகிலடைந்தோம். எங்கள் கண்கள் எங்களை யறியாமலே கரையை நோக்கின. வந்திருக்கும் தூரத்தை அநுமானித்தபொழுது எங்கள் இருதயமே இடிந்து உட்கார்ந்து விட்டது. 'இனி என்ன செய்வது? எப்படிக் கரை சேருவோம்?' என்று கவலையுடன் சிந்திக்கலானோம்.

காற்று வேறு கன கடுமையாக வீசத் தொடங்கியது. காற்று, திசைமாறி அடிக்கவே படகோட்டியின் பாடு திண்டாட்டமாகி விட்டது. அவன் படகைக் கரை சேர்க்கச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணுகிக் கொண்டிருந்தன. அவன் என்ன செய்தும் படகைக் கரைப் பக்கம் ஒரடிகூட ஓட்ட முடியவில்லை. படகைக் கவிழ்க்கப் பயங்கரக் கர்ஜனை புரிந்து கொண்டு காற்றின் உதவியோடு முன்னேறி வரும் கடலின் பேரலைகளுக்கு எதிரே அவன் என்னதான் செய்வான்? ஆயினும் உயிரின் மீதுள்ள ஆசை அவனைச் சும்மா ஓய்ந்திருக்க விடவில்லை. ஆனல் அவன் முயற்சி பலிதம் அடையாமல் போவதைக் கண்ட நான் கதிகலங்கிப் போய் விட்டேன். என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. படகோட்டியும் வகையறியாது கையைப் பிசைந்தான்.

ஆனல் தேவகியின் முகத்தில் பதற்றமோ, கலக்கமோ, நடுக்கமோ ஏதும் இல்லை. அவள் அந்த ஆபத்தான நேரத்திலும், தன் வீட்டில் இருந்தால் எவ்வளவு ஆனந்தமாகவும் சந்தோஷமாகவும் இருப்பாளோ, அப்படியே

மகிழ்ச்சி ததும்பும் வதனத்துடன் உட்கார்ந்திருந்தாள். இந்த இக்கட்டான நிலைமையில் இவள் எப்படித்தான் இப்படிக் கவலையின்றி உட்கார்ந்திருக்கிறாளோ என்று கவலையுடனும் வியப்புடனும் அவளைப் பார்த்தேன். "இனி பதற்றமுற்றுப் பயந்து சாவதனால் என்ன பயன்? நடப்பது நடக்கட்டும். 'உரலில் தலையைக் கொடுத்த பின் உலக்கைக்குப் பயந்தால் முடியுமா?' என்று இந்தியாவில் ஒரு பழமொழி உண்டு. ஆகவே, நடப்பது நடக்கட்டும் என்று கடவுள்மேல் பாரத்தைப் போட்டு வீட்டுக் கையைக் கட்டிக் கொண்டு கடவுளைத் தியானித்தவாறு இருந்தால் கடவுள் கரை சேர்த்து விடுவார்!" என்றாள் மிகவும் சாந்தமான குரலில்.

என் உள்ளத்தில் அம்பைப் பாய்ச்சியது போலிருந்தது. 'இவளோ ஒரு பெண். ஆனால் இந்தப் பயங்கரப் புயலிலும் பயம் இன்றி அமைதியாக, சாந்தமே உருவாக உட்கார்ந்திருக்கிறாள். ஆனால் நாமோ ஆண். ஆயினும் நமக்கு இப்படி மனம் பதறுகிறதே, என்ன காரணம்? இவளுடைய இருதயத்துக்கும் அடித் தளத்தில் என்ன சக்தி வேலை செய்து கொண்டிருக்கிறது? அவள் பயத்தை ஒழித்து இருப்பானேன்? நான் பயந்து சாவானேன்?' என்று யோசித்தேன்.

ஆம், அவளுக்குக் கடவுளின் மீது நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை எனக்கு இல்லை. இதுதான் காரணமாயிருக்கவேண்டும் என்று எண்ணினேன்.

சகோதரா! மேல் நாடு இவ்விஷயத்தில் கடவுளிடம் பராமுகமாயிருக்கிறது. மேல் நாட்டவன் தன் புஜ பலத்தை நம்பி வாழ்கிறான்; தன் புத்தி பலத்தை நம்பி வாழ்கிறான். ஆனால் ஆண்டவனை நம்புவதில்லை. ஆண்டவனை நம்புவது முட்டாள்தனம் என்றுகூட நினைக்கிறான். ஆண்டவன் மீது தங்களை ஒப்படைத்து விட்டுக் கீழ் நாட்டவர் கவலையின்றிச் சாந்தமாக வாழ்கிறார்கள். மேல்

காட்டவன் தன்னைத்தானே நம்பிப் பயந்து சாகிறான். கடவுளை நம்பும் கீழ் நாட்டவன் கவலைப் படுவதில்லை. இதுதான் இதன் ரகசியமா யிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

இதே சமயம் படகு ஒரே ஆட்டமாக ஆடிற்று. என் மனமும் அச்சமயம் அந்தப் படகைப் போலவே ஆடத் தொடங்கியது. தேவகி தன்னை ஆண்டவனின் கையில் ஒப்படைத்து விட்டு அமைதியாக உட்கார்ந்திருந்தாள். ஆனால் என்னிடத்தில் அந்தச் சக்தி இல்லை. நான் நீரையும் அதில் எழும்பும் பயங்கரப் பேரலைகளையும் பார்த்துக் குலை நடுக்கமுற்றுக் கொண்டிருந்தேன். அலைகளின் உருவத்தில் மரணம் நெருங்கி விட்டதாகவே எண்ணிப் பயத்துடன் கண்களை அகல விரித்து அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இதற்குள் திடீரென்று ஒரு பேரலை எழுந்து எங்கள் படகைக் கவிழ்த்து விட்டது.

13. உயிர்ப் போர்

சகோதரா! படகோட்டி எப்படியோ தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு கரையேறி விட்டான். ஆனால் நாங்களோ மரணத்தின் வாயில் மாட்டிக் கொண்டிருந்தோம். ஆயினும் நான் துணிவு இழக்கவில்லை. நான் கடலில் குமுறி எழும் பேரலைகளுடன் பயங்கரமாகப் போர் புரியலானேன். எனக்கு அப்பொழுது என்னைப் பற்றிக்கூட அவ்வளவாகக் கவலை உண்டாகவில்லை. எப்படியாவது தேவகி உயிர் பிழைத்து விட்டால் போதும் என்றுதான் இருந்தது. அவளும் அவளுடைய கணவனும் எனக்குச் செய்திருந்த உபகாரங்கள் எல்லாம் என் கண் முன்னே வந்து நின்றன. நான் கைகால்களை உதைத்துக் கொண்டு உயிர் வாழ முயன்றேன். என் கண்கள் கடலின் நீர்ப் பரப்பிலே தேவகியைத் தேடுவதில் முனைந்தன. ஆனால் தேவகியை எங்குமே காணவில்லை.

நான் நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். கண்களுக்கெட்டிய தூரம் வரை பார்வையைச் செலுத்திப் பார்த்தேன். ஆனால் அவள் எங்கேயாவது அகப்பட்டால் தானே? நான் தேவகியைத் தேடித் தேடிப் பார்த்து விட்டுக் கடைசியாக நம்பிக்கை இழந்து விட்டேன். நான் நம்பிக்கை இழந்து சோர்ந்து போன அந்தச் சமயத்தில்தான் திடீரென்று ஒரு பொருள் என்னை நோக்கி வருவது போலத் தோன்றியது. நான் விழி பிதுங்க வியப்புடன் பார்த்தேன். எனக்கு அப்பொழுது ஏற்பட்ட ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. கரை காண இயலாத கடலைப் போலவே என் களிப்பும் விரிந்து விட்டது. ஏனெனில் என்னை நோக்கி மிதந்து வந்த பொருள் தேவகிதான். நானும் ஒரே தாவாகத் தாவி அவளருகே சென்றேன். அவளை ஒரு கையினால் பிடித்துக் கொண்டு இன்னொரு கையினால் நீரைக் கிழித்துக் கொண்டு கரையை நோக்கி நீந்தலானேன்.

ஆனால் கரையை அடைந்து விடுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமா? கொஞ்ச தூரம் வருவதற்குள்ளாகவே எனக்கு மூச்சு முட்டத் தொடங்கி விட்டது. ஆழ்ந்த நீலத் திரைக் கடலைக் கண்டு என் இருதயம் இடிந்து போய் உட்கார்ந்து விட்டது. ஆனால் தேவகியின் நினைவு என் உள்ளத்துக்குத் துணிவை அளித்தது. 'முயற்சி திருவினையாக்கும். முன்னேறு!' என்று தட்டிக் கொடுத்தது. வாழ்வும் சாவும் என்னெதிரே நின்று 'வா, வா!' என்று போட்டி போட்டுக் கொண்டு என்னைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தன. நான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கைகளையும் கால்களையும் உதைத்து நீந்திக் கொண்டிருந்தேன். என் முயற்சிகள் ஒரு பொழுதும் வெற்றி அடையா என்றே எனக்குத் தோன்றிற்று. ஆயினும் மனிதனுக்கு உயிர் வெல்லம் அல்லவா? ஆகவே, நான் முயற்சியைக் கைவிடவில்லை.

'நம்மால் ஆன முயற்சியைக் கடைசி வரை செய்து பார்த்து விடுவோம். நடப்பது நடக்கட்டும்' என்று கரைப் பக்கம் முன்னேற முயற்சித்துக் கொண்டிருந்தேன். இச் சமயந்தான் திடீரென்று கரை கண்களுக்கு வெகு அருகில் தென்படுவதைக் கண்டேன். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த உடலில் மறுபடியும் புத்துணர்ச்சி எழுந்தது. உள்ளத்தினிடமிருந்து விடை பெற்றுக் கொண்டிருந்த துணிவும் தைரியமும் உள்ளத்தை அடைக்கலம் அடைந்தன. நான் உடல், உயிர் இவ்விரண்டின் முழுத் திறனையும் முழு மூச்சுடன் ஒன்று கூட்டிக் கரை காணும் முயற்சியில் ஈடுபட்டேன். கடைசியில் எப்படியோ தேவகியைத் தூக்கிக் கொண்டு கரையும் சேர்ந்து விட்டேன்.

சகோதரா! நாங்கள் மரணத்தின் வாயிலிருந்து தப்பி விட்டோம். ஆனால் அப்பொழுது அசுர வேகத்தில் வீசிக் கொண்டிருந்த புயலின் வாயிலிருந்து தப்ப முடியவில்லை. கஷ்டங்கள் தனித்து வருவதில்லை; ஒன்று சேர்ந்தே வருகின்றன என்பது எவ்வளவு உண்மை! நான் தங்கும் இடம் தேடி அலையலானேன். தேவகியை இரு கைகளிலும் தூக்கிய வண்ணம் நான் நாற்புறமும் சுற்றிச் சுற்றி ஓடினேன். பாரம் தாங்காமல் கைகள் கடுத்துவிட்டன. கால்கள் கெஞ்சின. என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. இருந்தாலும் என் சக்திகளையெல்லாம் ஒன்று கூட்டி நடந்து கொண்டுதான் இருந்தேன். இது வீர தீர பராக்கிரமத்தைப் பரிசீலிக்கும் போர் அல்லவே! வாழ்க்கைப் போர் அல்லவா? வீர தீர பராக்கிரமத்தைப் பரிசோதிக்கும் போரில் சிரமமாக இருந்தால் 'வேண்டாம், இந்த வெற்றி!' என்று விட்டு விட்டாலும் பாதகமில்லை. ஆனால் 'வாழ்வதா, சாவதா?' என்று நடந்து கொண்டிருக்கும் உயிர்ப் போரில் சும்மா கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியுமா?

கடைசி வரை போரிட்டுப் பார்த்துத்தானே ஆகவேண்டும்? ஆகவே, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, தங்கும் இடம் எங்கேயாவது கிடைத்து விடக் கூடாதா என்ற நம்பிக்கையில் நடந்து கொண்டிருந்தேன். என் நம்பிக்கை நல்ல வேளையாக வீண் போகவில்லை. கடைசியில் எனக்கு ஒரு பழைய காலத்துக் குடிசை கிடைத்து விட்டது. நான் அதற்குள் நுழைந்தேன். அந்தக் குடிசையின் சுவர்கள் பல இடங்களில் இடிந்திருந்தன. தரையின் தளவரிசை பல இடங்களில் பெயர்ந்திருந்தது. ஆயினும் அந்தப் பயங்கரப் பெரு மழையிலும் காற்றிலும் அந்தக் குடிசை எனக்கு அரண்மனைக்கு ஒப்பாகவே தோன்றியது. ஒரு புறத்தில் புற்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. நான் அவற்றைத் தரையில் தூவிக் கரடுமுரடான தரையைச் சம தரையாக்கிச் சிறிது மிருதுவான மெத்தை போல் ஆக்கினேன். பிறகு தேவகிக்குப் பிரதம சிகிச்சை அளித்துவிட்டு, அவளுடைய மூர்ச்சையுற்ற உடலை அந்தப் படுக்கையில் கிடத்தினேன்.

அப்பொழுதும் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. நான் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் வெளியே கிளம்பினேன். எப்படியோ தட்டுத் தடுமாறிக் கொண்டு பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தை அடைந்தேன். அங்கிருந்து கொஞ்சம் பாலும் சில ரொட்டிகளும் வாங்கிக் கொண்டேன். கரி மூட்டைக்கும் கம்பளிக்கும் பணம் கொடுத்து வந்தேன். கூலியாட்கள் அந்தப் பொருள்களைக் கொண்டு வந்து குடிசையில் சேர்த்தார்கள். அப்புறம் அந்தக் குடிசை ஒரு குடியானவனின் வீடுபோல் ஆகிவிட்டது. நான் சிக்கிரமாகத் தேத் தண்ணீர் தயாரித்து விட்டுத் தேவகியைத் தூக்கி உட்கார வைத்தேன். தேத் தண்ணீர் அருந்திய பின்தான் அவள் நல்ல சுய உணர்வு பெற்றாள்.

ஆனால் இதென்ன? இவள் முகம் இப்படி ஏகமாக வெளுத்துப் போவானேன்? அட, கண்களிலிருந்து வேறு

நீர் மழையாகப் பெய்கிறதே, ஏன்? எனக்கு முதலில ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் அவள் எப்படியாவது புறப்பட்டு ரூப்சந்திடம் போய்ச் சேர்ந்து விட்டால் போதும் என்று விருப்பம் கொண்டிருந்தாள் என்பது தெரிந்தது. ஆனால் 'கொட்டு, கொட்டு' என்று கொட்டுகிற அந்தப் பலத்த மழை எங்களுக்குப் போக வழி விட்டால்தானே? முழுசாக மூன்று நாட்கள் மூடிய வானம் கண் திறக்கவில்லை. ஆகவே வெளியே தலை நீட்ட முடியவில்லை. தன் இருப்பு நீர் அவ்வளவையும் தீர்த்து விட்டே ஒருவாறு மூன்று நாட்கள் கழித்து மழை சற்று ஓய்ந்தது. 'எப்பொழுதடா மழை நிற்கப் போகிறது?' என்று பார்த்துக் கொண்டிருந்த நான் உடனே பக்கத்துக் கிராமத்துக்கு ஓடிச் சென்று ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டு வந்தேன். பிறகு அந்தக் குடிசையிலிருந்து தேவகியை அழைத்துக் கொண்டு லிவர்பூலை நோக்கிப் புறப்பட்டேன்.

வழியில், "அவர் என் மேல் ரொம்பக் கோபமாயிருப்பார்!" என்று ஆரம்பித்தாள் தேவகி. அதைக் கூறிய பொழுது அவளுடைய குரலில் சிறிது அச்சம் தொனிப்பது தெரிந்தது.

"கோபமாயிருப்பாரா? ஏன்? இதில் உங்கள் குற்றம் என்ன? இந்தப் பயங்கரக் காற்றும் மழையும் மனிதனை வெளியே தலைகாட்ட விட்டால்தானே?" என்றேன் நான்.

"தலை காட்ட விட்டிருந்தால் நான் இங்கே ஒரு நிமிஷம் என்றால் ஒரு நிமிஷம் தங்கியிருப்பேனா?" என்று கேட்டாள் தேவகி.

"அப்படி இருக்கும் பொழுது இதற்காகக் கவலைப் பட்டு என்ன பிரயோசனம்? கவலையை விட்டொழியுங்கள்!" என்று நான் அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

தேவகி சிறிது நேரம் ஏதோ யோசனையில் அழ்ந்திருப்பவள் போலப் பேசாமலிருந்தாள். பிறகு, "அவர் மிகவும் கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்!" என்றாள்.

"இனி எதற்குக் கவலைப்படப் போகிறார்? நீங்கள் தான் சீக்கிரமே அவரிடம் போய்ச் சேர்ந்து விடப் போகிறீர்களே!" என்றேன்.

"அது சரி, அவரிடம் அன்று சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வந்து விட்டேன் அல்லவா? நாலு பேர் நகைப்புக்கு இடமாகிவிடக் கூடாதே என்று தான் கவலையாக இருக்கிறது!" என்றாள் தேவகி.

இதற்கு நான் ஒன்றும் பதில் பேசவில்லை. 'ரூப்சந்துக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டு விடுமோ?' என்று நான் என் மனத்துள் சிந்திக்கலானேன்.

தேவகி என்னுடன் மூன்று நாட்கள் இருந்திருக்கிறாள். அதுவும் தனியாக நகரத்துச் சூழ்நிலையைத் தாண்டி வெகு தொலைவில் ஒரு குடிசையில் இருந்திருக்கிறாள். இம்மாதிரி நிலையில் சந்தேகம் ஏற்பட்டால், அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. சந்தேகம் ஏற்படாவிட்டால் தான் ஆச்சரியம்.

இதை எண்ணியதும், 'ரூப் சந்தின் உள்ளத்தில் கடுகளவு சந்தேகம் ஏற்பட்டால் கூட அது தேவகியின் வாழ்க்கைக்கு அல்லவா பாக்காக முடியும்? அவள் வாழ்க்கை சூலைந்து விடுமே!' என்ற பயம் என்னை ஆட் கொண்டது. 'அவளால் அவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தாங்க முடியாதே!' என்று எண்ணிய நான் மாளாக் கவலையில் உழலத் தொடங்கி விட்டேன்.

சிறிது நேரம் கழித்துத் தேவகியைப் பார்த்து, "இத்தனை நாளும் நீ எங்கே யிருந்தாய் என்று அவர் கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள்?" என்றுகேட்டேன்.

"உண்மையில் நடந்தது எதுவோ, அதைத் தான் சொல்லுவேன். வேறு எதைச் சொல்லுவேன்?" என்றாள் நிஷ்களங்கமான உள்ளத்துடன் அவள்.

அதைக் கேட்டதும் நான் தியை மிதித்துவிட்டவன் போலத் துணுக்குற்றேன். அவள் வாயிலிருந்து நான்

அந்த மாதிரிப் பதிலைச் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. நான் ஏதோ சொல்ல வாய் எடுத்தேன். அதற்குள் என்னையும் மீறிய ஒரு தெய்வீக சக்தி என் நாவைப் பிடித்து இழுத்துத் தடுத்து நிறுத்திவிட்டது. தேவகிக்குத் தன் தூய்மையின் மீது அசைக்க முடியாத அபார நம்பிக்கை இருந்தது. ஆனால் எனக்கு என் தூய்மையின்மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. ஆகவேதான் என் நாவுக்குப் பேசத் துணிவு எழவில்லை போலும்! நான் மிகவும் மெதுவான குரலில், "உண்மையைச் சொன்னால் அது விபரீதமாக முடியாமல் இருக்க வேண்டுமே!" என்றேன்.

"நீங்கள் சொல்வதன் கருத்து எனக்கு விளங்கவில்லை!" என்றாள் தேவகி.

"சற்று யோசித்துப் பாருங்கள், தெரியும்!" என்றேன். காதுக்கருகில் யாரோ துப்பாக்கியைக் குறி வைத்துச் சுட்டு விட்டது போலப் பயந்து போன தேவகி இருந்த இடத்திலேயே தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு துள்ளி விழுந்தாள். அவளுடைய முகம் நெருப்பாகக் காய்ந்த இரும்பைப் போலச் சிவந்து விட்டது. அவள் பதற்றத்துடன், "நீங்கள் சொல்வது இன்னும் எனக்குச் சரியாக விளங்கவில்லையே! என்மீது அவர் சந்தேகப்படுவார் என்று ஒரு வேளை நீங்கள் எண்ணுகிறீர்களோ?" என்று கேட்டாள்.

"ஆமாம், நிலைமை இவ்வளவு இக்கட்டாக ஆகிவிட்டதல்லவா? ஆகவே, அவர் சந்தேகப்படுவதற்கும் காரணம் இருக்கிறதே! அதனால்தான்..." என்றேன்.

தேவகி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு, "ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. அவருக்கு என்னை நன்றாகத் தெரியும். என்மீது அவருக்கு அளவற்ற நம்பிக்கை உண்டு. ஆகவே. அவருக்கு என்மீது அவநம்பிக்கை ஏற்படுவதற்கே சிறிதும் காரணம் இல்லை!" என்றாள்.

அதைக் கேட்ட பிறகு என் உள்ளத்தில் எழுந்த கலவரம் அடங்கியது. தேவகியின் அந்தக் சொற்களில் நம்பிக்கை விழுவே, என் மனமும் நிம்மதியுற்றது. கவலை குறைந்த நான், "அப்படியானால் சரி, நடந்ததை நடந்த படி சொல்லி விடுங்கள்!" என்றேன்.

சகோதரா! வேடிக்கையைப் பார்! அவள் சொல்லைக் கேட்ட எனக்கு நம்பிக்கை பிறந்தது. ஆனால் என் சொல்லைக் கேட்டதும் அவளுக்கு அவ நம்பிக்கை பிறந்து விட்டது. ஆகவே, அவள் யோசித்தவாறு தட்டுத் தடுமாறும் குரலில், "ஒரு வேளை அவருக்கு என் சொல்லில் நம்பிக்கை ஏற்படா விட்டால்....?" என்றாள்.

அதைக் கூறுவதற்குள்ளாக அவள் கண்களில் நீர் கட்டியது. அவள் கைகளைப் பிசைந்து கொண்டே, "நான் செய்த காரியம் ரொம்ப ரொம்பத் தவறானது. இதன் பலன் நல்லதாக முடியாது என்று என் காதுகளில் யாரோ சொல்வது போன்ற பிரமை உண்டாகிறது. என்ன ஆகுமோ?" என்றாள் ஏக்கத்துடன்.

நான் சிறிது நேரம் என் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தேன். பிறகு, "எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. சொல்லலாம் என்றால் சொல்லுகிறேன்!" என்றேன்.

"எனக்குத் தெரியும், நீங்கள் சொல்லப் போகும் யுக்தி! இருந்தாலும் சொல்லுங்கள்!" என்றாள் தேவகி.

"நான் சொல்லப் போவது உங்களுக்குத் தெரியுமா? என்ன வென்று நீங்களே சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றேன் நான்.

"அதாவது, அவரிடம் நான் ஏதாவது ஒரு பொய் சொல்ல வேண்டும் என்று சொல்லப் போகிறீர்கள்! அப்படித்தானே?" என்று கேட்டாள் தேவகி.

"ஆமாம், இது சம்பந்தமாக நீங்கள் ஒரு சின்னப் பொய் சொல்லத்தான் வேண்டியிருக்கும்" என்றேன்.

"அந்தப் பொய் சொல்லுவதை விட எதையாவது தின்று இந்தப் பாழும் உயிரை மாய்த்துக் கொண்டு விடலாம் என்று தோன்றுகிறது. பொய் சொல்லிவிட்டு அவரெதிரே தலை நிமிர்ந்து நிற்கவா? அது என்னால் ஆகாத காரியம்....." என்று சொன்னவள் அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் புத்தி பேதலித்தவள் போல் பார்க்கலானாள். அவளுடைய அந்தப் பார்வையிலிருந்து, அவள் மனத்தில், இல்லாத எண்ணங்கள் எல்லாம் ஓடிக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. சிறிது நேரம் கழித்து அவள் கரகரத்த குரலில், "ஆமாம், நீங்கள் அவரிடம் என்ன சொல்லலாம் என்று அபிப்பிராயப் படுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நான் என் தோழி காதரயின் நான்ஸியைப் பார்ப்பதற்காக அவள் வீட்டு வரைக்கும் போயிருந்தேன். தெய்வ வசமாக மழையும் புயலும் பிடித்துக் கொண்டு விடவே, வெளியே தலை நீட்ட முடியவில்லை. ஆகவே, மூன்று நாட்களும் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது. இன்று மழை கொஞ்சம் நின்றதும் புறப்பட்டு வந்தேன்!' என்று சொல்லுங்களேன்!" என்று எனக்குத் தோன்றியபடி சொல்லிக் கொடுத்தேன்.

தேவகியின் முக பாவத்திலிருந்து அவள் பொய் பேசத் தயாராக இல்லை என்பது நன்றாகத் தெரிந்தது. அவளோ பாரத நாட்டின் சிரத்தையே உருவான பெண். கணவனைக் கடவுளாக, ஏன்? கடவுளைக் காட்டிலும் ஒரு படி மேலாகப் பூஜிக்கும் பண்பு தோய்ந்தவள். இதுவரை அவள் கணவனிடம், கணவனிடம் மட்டும் அல்ல, யாரிடமுமே பொய் என்ற வார்த்தையையே பேசி அறியாதவள். பொய் சொல்லுவது மகா பாவம் என்று எண்ணுபவள். தீரத் தெளிந்து ஒரு பொய் சொல்லுவது என்றால் அவள் மனம் ஒப்புமா? அவள் வாழ்க்கையில் இதுவரை பொய் சொல்லவேண்டிய அவசியமோ, இக்கட்டான நிலைமையோ

ஏற்பட்டதில்லை. ஆகவே, அவளுடைய மனக் குதிரை பழக்கப்படாத குதிரையைப் போல் இடக்குப் பண்ணத் தொடங்கிவிட்டது. சிறிது நேரம் அவளுடைய உள்ளத்திலே 'பொய் சொல்வதா, வேண்டாமா?' என்னும் விஷயத்தில் தேவாசுரப் போர் மூண்டது. அந்தப் போரில் கடைசியில் அரக்கர்களுக்குத் தான் வெற்றி கிடைத்தது. தேவகி என் யுக்தியை ஒப்புக் கொண்டுவிட்டாள். தன் வீட்டை அடைந்ததும் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டாள். நானும் என் ஹோட்டலுக்குச் சென்றேன்.

'இப்படி எதிர்பாராத விதமான தவறு நிகழ்ந்து விட்டதே, முடிவு கெடுதலாக முடியாமல் இருக்க வேண்டுமே! கெடுதலான முடிவு ஏற்பட்டு விட்டால் என்ன ஆகும்?' என்று என் மனம் இல்லாத வேதனை யெல்லாம் பட்டுக் கொண்டிருந்தது.

'இதென்ன, கிரஹசாரம்? கடவுளே! இந்த இசை கேடான நிலையிலிருந்து நீதான் காப்பாற்ற வேண்டும்!' என்று பாரதப் பண்புடன் வேண்டிக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழி எதுவும் தோன்றவில்லை.

14. மூர்ச்சையானாள்!

சகோதரா! ரூப்சந்த் மிகவும் கலவர மடைந்து கலங்கிப் போயிருந்தார். அன்புக் கன்பான மனைவியை மூன்று நாட்களாகக் காணவில்லை என்றால் பதற்றம் ஏற்படுவது இயல்புதானே? அவர் ஒரு வேலையும் ஓடாமல் பித்தனைப் போலப் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். மூன்று நாட்களுக்குப் பின் தேவகியைப் பார்த்த அவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை கூறமுடியாது. 'போனது போனதுதான். இனித் திரும்பக் கிடைக்கப் போவதில்லை' என்று எண்ணி மூழ்கிப் போய்விட்டதாகத் தீர்மானித்த பணம் எதிர் பாராத விதமாகத் திரும்பவும் கிடைத்துவிட்டால்

ஒருவன் எவ்வளவு சந்தோஷப்படுவான்? தேவகியைக் கண்ட பின் அவ்வளவு சந்தோஷப் பட்டார் ரூப்சந்த்.

அவருக்குத் தேவகியின் மேலோ அல்லது தேவகி சொன்ன வார்த்தைகளின் மீதோ லவலேசங்கூடச் சந்தேகம் உண்டாகவில்லை. தேவகி தம்மிடம் பொய் சொல்லுவாள் என்ற நினைப்பே அவர் உள்ளத்தில் எழ வில்லை. அவள் சொன்னவற்றை அப்படியே வேதவாக் கைப் போல் நம்பிவிட்டார். அவள் பேச்சுக்கிடையே குறுக்கிட்டு, 'ஏன்! என்ன?' என்று அவர் ஒரு சின்னக் கேள்விகூடக் கேட்கவில்லை. ஒருவர் வார்த்தையை நூற் றுக்கு நூறு உண்மையென்று நம்பிவிட்டபின் குறுக்குக் கேள்விகளுக்கு இடம் ஏது? ஆகவே, அவருக்கு அவளுடைய வார்த்தைகளில் பூரண திருப்தி ஏற்பட்டு விட்டது. ஆனால்...?

தேவகியின் திருப்திக்கும் அமைதிக்கும் அடியோடு பங்கம் ஏற்பட்டு விட்டது. அவள் எப்பொழுதும் கவலையே உருவாக இருக்கலானாள். அவள் உள்ளத்தைப் பயமும் பீதியும் ஆட்கொண்டன. 'நாம் ஏன் அவரிடம் போய் இப்படி வீணில் பொய் பேசினோம்?' என்று எண்ணி மனம் நைந்தாள். 'நான் என் தோழி காதர யின் நாத்தியின் வீட்டில் இருந்தேன்' என்று அவள் சொன்ன அந்தச் சொற்கள் ஒவ்வொரு நிமிஷமும் அவ ளுடைய மூளையைத் தீச் செயலின் நினைவைப் போலக் குடைந்து கொண்டிருந்தன. 'சொன்ன சொல்லைத் திரும்பப் பெற முடியாதா? திரும்பப் பெற முடிந்து விட்டால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!' என்று அவள் அடிக்கடி எண்ணுவாள். ஆனால் கண்ணிலிருந்து உதிர்ந்த கண்ணீரும், கூட்டிலிருந்து விடுபட்ட குருவியும் எங்கே யாவது திரும்பி வந்தது உண்டா? வேடன் வில்லிலிருந்து வெளியேறிய அம்பு மறுபடியும் அவன் கைக்கு வந்தது உண்டா? அதே போலத்தானே வாயிலிருந்து வெளி

யேறிய சொற்களும்? அவை எங்கேயாவது திரும்பி வருவது உண்டா? அவளது உள்ளக் கடலைச் சிந்தனை அலைகள் மலை மலையாக எழும்பிக் கொந்தளிக்கச் செய்துவிட்டன.

ஆகவே தேவகி, "அவர் காலடிகளில் விழுந்து வணங்கி நம் தவறை ஒப்புக்கொண்டு விட்டால் என்ன என்று தோன்றுகிறது. அவர் அன்பே உருவானவர். உள்ளத்தில் கருணைப் பெருக்கு நிறைந்தவர். கட்டாயம் என்னை மன்னித்துவிடுவார். என்ன, நான் உண்மையைச் சொல்லி அவரிடம் மன்னிப்புக் கோரட்டுமா?" என்று என்னை அடிக்கடி ஆலோசனை கேட்டாள். ஆனால் நான் தான் ஒவ்வொரு தடவையும் ஏதாவது மாற்றுப் போக்குச் சொல்லி அவளுடைய அந்த நல்லெண்ணத்தை அடியோடு அடக்கி வந்தேன்.

"இனிமேல் நீங்கள் ஏதாவது பேச்சை மாற்றினால் அது பயங்கரப் பிழையாக உருத் தரித்துவிடும். அவருக்கு இப்பொழுது உங்கள் மீது எள்ளளவும் சந்தேகம் இல்லை. இதைச் சொல்லிவிட்டால் கட்டாயம் உங்கள் மீது சந்தேகம் பிறந்துவிடும். அந்தச் சந்தேகம் உங்கள் வாழ்க்கையையும் வாழ்க்கை இன்பத்தையும் விழுங்கி ஏப்பமிட்டுவிடும். காட்டாறு கரைனை புரிந்து கொண்டு பசுமை மிக்க வயல்களை விழுங்கித் தண்ணீர்க் காடாகச் செய்து விடுவதில்லையா? அதுபோல ஏதாவது ஒன்றுக் கொன்று நேர்ந்துவிட்டால் அப்புறம் நீங்கள் என்ன செய்வீர்கள்? அப்புறம் உங்கள் கதி என்ன ஆகும்? பேய் பிசாசை வேண்டுமானாலும் ஓட்டிவிடலாம். ஆனால் பெண்கள் மீது சந்தேகம் உதித்துவிட்டால் அப்புறம் அதை யாராலும் அகற்ற முடியாது; அசைக்க முடியாது. ஆகவே, நீங்கள் பேசாமல் இருப்பதுதான் உத்தமம்" என்று சொல்லி அவள் மனத்தை மாற்றி விடுவேன்.

இப்பொழுது நினைத்துப் பார்த்தால், 'இந்தத் துர்ப்போதனையை எதற்காக நாம் அவளுக்குச் செய்தோம்?'

என்று தோன்றுகிறது. ஆனல் நாம் செய்த அந்தப் பிழை அப்படியே அடங்கிவிட்டால்தான் எவ்வளவோ நன்ருயிருக்குமே! அதுதான் இல்லே. அநேகமாக நாங்கள் இம்மாதிரி ஏதாவது பேசிக்கொண்டிருக்கும் பொழுது ரூப்சந்த் உள்ளே வந்துவிடுவார். நானும் தேவகியும் என்ன இருந்தாலும் அநுபவமற்றவர்கள்தானே? அவர் உள்ளே நுழைந்ததும் மேலே பேச்சை எப்படி மாற்றித் தொடருவது என்று தெரியாமல் பேந்தப் பேந்த விழிப்போம். பொய் சொன்னலும் பொருந்தச் சொல்லத் தெரியவேண்டும் என்பது எவ்வளவு அநுபவ பூர்வமான உண்மை! எங்களுக்கோ பொய் பேசத் தெரிந்திருந்தது. ஆனல் அதை, அதாவது சொன்ன பொய்யை மறைக்கத் தெரியவில்லே. 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் தான்' என்று சாதிக்கும் சக்தியும் எங்களிடம் குறைவாக இருந்தது. ஆகவே, ரூப்சந்தின் தலேயைக் கண்டதும் நாங்கள் வாய் மூடி மௌனியாகி விடுவோம். ஏதோ செய்யத் தகாத பெரிய தீச் செயலேச் செய்துவிட்டது போலவும், எதையோ திருடிவிட்டது போலவும் எண்ணித் திகைத்துப் போய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழிப்போம். ரூப்சந்தைக் கண்டதும் எங்கள் கண்கள் கவிழ்ந்து விடும்; முகம் சிவந்து விடும்; நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டு ஊமையாகி விடும். அந்நிலேயிலும் நாங்கள் எங்கள் உள்ளத்து வியாகூலத்தை மறைக்க முயலுவோம். தொழில் நுணுக்கம் தெரியாத திருடன் முதன் முதலாகத் திருடத் தொடங்கும் பொழுது, தன் திருட்டை மறைக்கும் முயற்சியில் தன் திருட்டைத் தானே வெளியிட்டு விடுவான். அவனேப் பிறர் பார்த்துப் பிடிக்க வேண்டும் என்பதில்லே. அதே போல், திருடத் தெரிந்தும் தப்பத் தெரியாத திருடனேப் போல் நாங்கள் இருவரும் இருந்தோம். எங்கள் தவிப்பை அறிந்த ரூப்சந்துக்கு எங்கள் மீது சிறுகச்சிறுகச் சந்தேகம்

தட்டத் தொடங்கியது. அவருடைய சந்தேகம் அதிகமாக ஆக எங்கோ அச்சம் ஆட்கொண்டது.

இந்தச் சந்தேகம் சில நாட்கள் வரை சந்தேகமாகவே இருந்தது. பிறகு அது நம்பிக்கையாகப் பரிணமித்து விட்டது. ஒருநாள் எங்கேயோ கடைத் தெருவில் காதரயின் நான்ஸியும் ரூப்சந்தும் ஒருவரை யொருவர் தற்செயலாகச் சந்தித்து விட்டனர். கிட்டத் தட்ட அரைமணி நேரம் அவர்களிருவருக்கும் இடையே சம்பாஷணையும் நடந்திருக்கிறது. அதன் பலனாக வீடு வந்ததும் ரூப்சந்த் நாகத்தைப் போலச் சீறத் தொடங்கி விட்டார். கோபம் கொதித் தெழவே, அவர் மூக்குப் புடைத்து விட்டது. கண்கள் தீப் பொறியைக் கக்கத் தொடங்கி விட்டன. தேவகியைச் சுட்டெரித்து விடுபவர் போலப் பார்த்துக் கன கடுமையான குரலில், "தேவகி! நீ இப்படி நடந்து கொள்வாய் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நான் உன்னை உந்த நோக்கம் படைத்தவளாக, தெய்வத்துக்குச் சமானமானவளாக மதித்து வந்தேன். நான் உன் மீதும் உன் கற்பின் மீதும் ஆணை வைத்துப் பேசி வந்தேன். 'உலகத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். இதுமட்டும் நடக்காது' என்று எண்ணி இன்றுவரை இறுமாந்திருந்தேன். ஆனால் பெண்ணை நம்புவது முதல் தரமான முட்டாள்தனம் என்பது இன்றுதான் எனக்குத் தெரிய வந்தது" என்றார்.

நஞ்சுள்ள நாகத்தின் நஞ்சு நிமிஷத்துக்குள் உடல் முழுவதும் ஓடி ஒவ்வொரு மயிர்க் காலிலும் பரவி விடும் அல்லவா? அதே போல, ரூப்சந்தின் அந்தச் சொற்கள் தேவகியின் தேகத்தில் ஓடும் ஒவ்வொரு ரத்தத் நிவிலியிலும் பரவி விட்டன.

அவர் சொன்ன அந்தச் சொற்கள் சொற்களாகவா இருந்தன? அம்புகளாக அல்லவா இருந்தன! தேவகியினால் வாய் திறந்து ஒன்றும் பேச முடியவில்லை. சாய்வு

நாற்காலியில் உட்கார்ந்திருந்தவள் மெதுவாக எழுந்தாள். ஆனால் அடுத்த கணமே தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள். தேவகி அப்படி மூர்ச்சை யாகிக் கீழே விழுந்ததானது அவள் தன் குற்றத்தைத் தானே வலியச் சென்று ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகத் தோன்றியது.

15. கோரக் கொலை

சகோதரா! தேவகிக்கு மூர்ச்சை தெளிந்து தன் நினைவு வந்து சுற்று முற்றும் பார்த்தபொழுது ரூப்சந்த் அங்கே இல்லை. அவள் மேஜையண்டை ஓடினாள். அங்கே அவள் பெயருக்கு ஒரு கடிதம் காத்திருந்தது.

தேவகி!

நீ என் மனத்தை முறித்து விட்டாய். நான் பாரத நாட்டுப் பெண்மணியின் மீது பரிபூரணமான பக்தியும் சிரத்தையும் கொண்டிருந்தேன். நான் அவளை வழி படும் தெய்வமாகவே பூஜித்து வந்தேன் என்று சொன்னால் கூட மிகையாகாது. ஆனால் நீ என்னுடைய அந்த நம்பிக்கையை வேருடன் வெட்டி எறிந்து விட்டாய். நீ இப்படியெல்லாம் நடந்துகொள்ளத் துணிவாய் என்று நான் கனவிலும் நினைக்க வில்லை. நீ மூன்று நாட்கள் வீட்டை விட்டு வெளியே சென்று எங்கேயோ இருந்து விட்டு, 'நான் காதரயின் நான்ஸியின் வீட்டில் இருந்தேன்' என்று என்னிடம் துணிந்து பொய் கூறினாய். ஆனால் உன் கண்களே உன்னைக் காட்டிக்கொடுத்து விட்டன. உன் குட்டை உடைத்து உன் ரகசியத்தை அம்பலப்படுத்தி விட்டன. அதைக் கொண்டு நான் உன்மீது சந்தேகம் கொண்டேன். ஆனால் அதை நான் வெளிக்காட்டிக் கொள்ள விரும்ப வில்லை. அதற்குக் காரணம்|எனக்கு அவ்வளவு துணிவு ஏற்படாததுதான். எங்கேயாவது என் முடிவு தவருகிவிட்டால், உனக்கும்

உன் தன்மானத்துக்கும், உன் நடத்தைக்கும் இழுக்குக் கற்பிப்பதாக முடிந்து விடுமோ என்று அஞ்சினேன். அதனுல்தான் என் சந்தேகத்தைச் சந்தேகமாகவே மனத்தின் ஆழத்தில் புதைத்து வைத்திருந்தேன். ஆனல் காதரயின் நான்ஸி உன்னைப் பார்த்து மாதக் கணக்காகி விட்டது என்று சொன்ன பொழுதுதான் என் சந்தேகம் ஊர்ஜிதமாகி நம்பிக்கையாகப் பரிணமித்தது. மாசு தோய்ந்த உன் நடத்தையை நினைக்கும் பொழுது கடலில் குதித்து உயிரையே மாய்த்துக் கொண்டுவிடலாமா என்று கூடத் தோன்றுகிறது. எனக்கு வாழ்க்கையில் இனி ஒரு இன்பமோ, ரசமோ, உற்சாகமோ இருப்பதாகத் தெரியவில்லை. வாழ்க்கை சப்பிட்டு விட்டது. சப்பிட்டு விட்டால் கூடத் தேவலையே! வேம்பினும் கடுமையாகக் கசந்துவிட்டது. வாழ்க்கை கசந்த பின் உயிர் வாழ்ந்து என்ன பிரயோசனம்?

ரூப்சந்த்.

கடிதத்தைப் படித்த தேவகி ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள். பிறகு அப்படியே சாய்வு நாற்காலியில் தன் நிலை மறந்து சாய்ந்து விட்டாள். அச்சமயம் அவளுடைய உள்ளத்தில் பல்லாயிரக் கணக்கான சிந்தனைகள் எழுந்தன. மழைக் காலத்து மாலை வேளைகளில் கணக்கற்ற சின்னச் சின்னப் பூச்சிகள் பறக்கத் தொடங்கி விடுகின்றன அல்லவா? அதுபோல் மூட்டம் போட்டிருந்த அவளுடைய உள்ளத்திலும் பல சிந்தனைப் பூச்சிகள் பறக்கத் தொடங்கின. மழைக் காலத்து அந்தப் பூச்சிகள் தாம் மனிதனுக்கு எவ்வளவு சிரமம் தருகின்றன! ஆள் பிராணனை அடியோடு வாங்கி விடுகின்றன! அவை புரியும் அட்டகாசம் தாங்காமல் மனிதனின் மனம் எப்படியெல்லாம் சலித்து விடுகிறது! அவற்றினுல் மனிதனுக்கு எவ்விதமான நீங்கும் இழைக்க முடியாதுதான். ஆயினும்,

அவை உட்கார்ந்து எழுந்திருக்க முடியாதபடி ஆணி அல்ல துறச் செய்து விடுகின்றன அல்லவா? அதே போன்ற நிலைதான் தேவகிக்கும் ஏற்பட்டிருந்தது. அவளுடைய மனத்தில் பிறந்த சிந்தனைப் பூச்சிகள் அவளைக் கதிகலங்க அடித்துக் கொண்டிருந்தன. ஆனால் நான அவளைப் போல் கதிகலங்கி நம்பிக்கை இழந்து கைகட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க வில்லை.

செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தினேன். நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் தந்தி அடித்தேன். துயரமே உருவாகிவிட்ட தேவகி, 'இன்றைக்கு ஏதாவது செய்தி எங்கிருந்தாவது வந்து விடக் கூடாதா?' என்ற திடமான நம்பிக்கையில்தான் தினமும் எழுந்திருப்பாள். ஆனால் பொழுது புலர்ந்து பொழுது சாயுமே ஒழிய, எங்கிருந்தும் எவ்விதமான தகவலும் வராது. தேவகி நெடு மூச்சுவிட்டுத் தரையில் படுத்து விடுவாள். இப்படியே அநேக மாதங்கள் ஓடிவிட்டன. தேவகி உணவை மறந்தாள்; உடையை மறந்தாள்; அவளுடைய மனம் ஒரே சிந்தனையில் ஊன்றி விட்டது. அந்தச் சிந்தனையை விட்டால் அவளுக்கு வேறு சிந்தனையே கிடையாது. அதைக் கண்ணுற்ற எனக்கு என் இருதயத்தில் யாரோ கூரிய கத்தியைப் பாய்ச்சுவது போலிருந்தது.

'இது நம்மால் வந்த வினைதானே?' என்று எண்ணி அடிக்கடி மனம் நொந்து கொள்வேன். அவள் உடல் வற்றி ஒடாகப் போய்விட்டது. எலும்புந் தோலுந்தான் எஞ்சியிருந்தன. முகத்திலே பழைய மினுமினுப்பு இல்லை. கண்களிலே பழைய பிரகாசம் இல்லை. ஆனாலும் அந்தப் பழைய தேஜஸ் மட்டும் அப்படியே அப்பழுக்கின்றி எள்ளளவும் குறையாமல் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால் எனக்கு அவளை ஏறிட்டுப் பார்க்கத் துணிவு உண்டாகவில்லை. கற்புக் கரசிகளின் கண்களில் கனல் குடி கொண்டிருக்கும். அவர்களைத் தீய

நோக்குடன் நோக்குபவர்களை அது சுட்டெரித்துச் சாம்பராக்கி விடும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மான் குட்டி வில்லில் அம்பை ஏற்றி அடிக்கத் தயாராக நிற்கும் வேடனைக் கண்டு மருள்வது போல, நான் கனல் கக்கும் கற்புக்கரசியின் கண்களை நோக்கவே அஞ்சினேன். கண்களுக்குக் கண்கள் நேர் நின்று தேவகியைப் பார்க்கும் துணிவு எனக்கு உண்டாக வில்லை. நான் தேவகியைக் கண்டு கவனித்து வருவதற்காக அவள் வீட்டுக்கு அடிக்கடி போய் வருவது உண்டு. ஆனால் அச்சத்துடன்தான் அவள் வீட்டு வாசற்படியில் காலடி எடுத்து வைப்பேன். என் கண்களும் அவள் கண்களும் ஒன்றுக் கொன்று நேருக்குநேர் கலந்து விடக் கூடாதே என்று அஞ்சுவேன். அவளுடைய அந்தப் புலன் அடக்கம் என் உள்ளத்திலே அளவற்ற சிரத்தை உணர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது. நான் முன்பெல்லாம் அவளைத் தெய்வாம்சம் பொருந்தியவளாகக் கருதி வந்தேன். இப்பொழுதோ வெனில் தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வமாகவே அவளைக் கருதத் தொடங்கி விட்டேன்.

ஐரோப்பாவில் கணவனைப் பிரிந்து வாழும் ஆயிரக் கணக்கான பெண்களை நான் பார்த்திருக்கிறேன். கணவனைப் பிரிந்து வாழும் இருள் சூழ்ந்த இரவுகளில், அவர்களுடைய பழக்க வழக்கங்களிலோ நடத்தையிலோ எவ்விதமான மாறுதலையும் நான் கண்டதில்லை. அவர்கள் தங்கள் தங்கள் கணவன்மார்களுடன் கூடி வாழும் பொழுது எப்படிச் சிரித்துப் பேசுவார்களோ, விளையாடிப் பொழுது போக்குவார்களோ, அப்படியே தான் சிரித்துப் பேசுகிறார்கள்; விளையாடிப் பொழுது போக்குகிறார்கள். அவர்களுடைய ஆகார விவகாரங்களிலோ, நடை உடை பாவனைகளிலோ, ஆடை அலங்காரங்களிலோ, எவ்விதமான சிறு மாறுதலையோ குறைவையோ காண முடியாது. கணவன் மார்களுடன் இருப்பதும் இல்லாததும் அவர்க

ருக்கு ஒன்றுகவேதான் இருக்கிறது. ஆனால் தேவகியின் விஷயம் அப்படியில்லை. அவளுக்குத் தன் கணவன் ஓடிப் போனது, கணவன் மட்டும் ஓடிப் போனதாகத் தோன்ற வில்லை. தன்னுடையது என்றிருக்கும் அனைத்துமே, ஏன்? உலகமே கூட ஓடிப்போய் விட்டதாகத்தான் தோன்றி யது! அவளுடைய கணவன் அவளை விட்டுப் போன பிறகு அவளுடைய உதடுகளில் புன் முறுவல் வெளியவில்லை; முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடவில்லை.

அவளுடைய அறையில் எத்தனை எத்தனையோ நேர்த் தியான பொருள்கள் இருந்தன. கணவன் வீட்டை விட் டுப் போனபின் தேவகி எல்லாவற்றையும் எடுத்து வெளியே போடச் சொல்லி விட்டாள். தான் உண்டு, தன் அறை உண்டு என்று மிக மிகப் பரம ஏழையைப் போல் தன் அறைக்குள்ளேயே அடைந்து வாழலானாள். ராம ரைப் பிரிந்த சீதை எந்த நிலையை அடைந்தாளோ, அதே நிலையைத் தேவகி அடைந்து விட்டாள். பரிசுத்தமே உரு வான அந்த ராம கதையை எனக்குக் கூறி அதன் பெரு மையை விளங்க வைத்தவள் தேவகிதான். சீதைக்கு நேர்ந்த அதே நிகழ்ச்சி தன் வாழ்க்கையிலும் நிகழக் கூடும்; அதுவும் என் கண்களுக்கெதிரே நிகழக் கூடும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

என் உள்ளத்தில் ஒரே ஒரு ஆசைதான் இருந்தது. அதாவது என் பிழையை எப்படியாவது திருத்திக் கொள் ள வேண்டும், ரூப்சந்தைத் தேடிப் பிடித்துத் தேவகியிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. என்றைக்கு நாம் ரூப்சந்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தேவகியிடம் சேர்ப்போமோ, அன்றைக்கு நமக்கு ஆனந் தம் தலைகால் புரியாது. அந்த நிலையில் நாம் பித்தம் தலைக் கேறிப் பைத்தியமாகவே ஆகி விட்டாலும் கூட ஆச்சரி யப்படுவதற்கில்லை என்று எண்ணினேன். ஏனெனில் எல்லை கடந்த இன்பம் ஏற்பட்டாலும், அல்லது மீளாத்

துயரத்தில் மனிதன் மாட்டிக் கொண்டாலும் மனம் பேதலித்துப் பித்தனாக ஆகிவிடக்கூடும் அல்லவா?

இந்த உலகத்தில் எண்ணற்ற எத்தனையோ இன்பங்கள் இருக்கின்றன. ஆனால் பிரிவுத் துயரில் வாடும் இரண்டு தூய ஆத்மாக்களை ஒன்று சேர்த்து வைப்பதில் உள்ள ஆனந்தம் வேறு எதிலுமே கிட்டுவதில்லை.

இந்த எண்ணம் எழுந்ததுதான் தாமதம்; என் உள்ளம் அந்த இன்பக் காட்சியைக் கற்பனைக் கண் கொண்டு காண்பதில் ஈடுபட்டு விட்டது. ஆகா! பிரிவுத் துயரினால் வாடிக்கொண்டிருக்கும் இரண்டு ஆத்மாக்கள் ஒன்று சேரும் காட்சி எவ்வளவு இன்பம் பயக்கக் கூடியதாக இருக்கும்? இரு தூய உள்ளங்களின் ஆத்மீகத் தொடர்பு எவ்வளவு பேரானந்தத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும்? நியாயமாகச் சேரவேண்டியவர்கள் சேர்ந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்?

இப்படிக் கற்பனையில் ஈடுபட்ட என் உள்ளம் புல்லரித்தது. அந்தக் காட்சியைக் கனவிலிருந்து நினைவாக்கி விடவேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் வேரூன்றியது. நாட்கள் செல்லச் செல்ல, அந்த ஆசை காதலர்களின் காதலையும் ஆதுரத்தையும் போல் அதிகரித்துக் கொண்டே போயிற்று. இந்த நிலையில் கடைசியில் என்னை இரவுத் தூக்கம் கூட விட்டு விட்டு ஓடிவிட்டது. ஒரே நினைவு, ஒரே சிந்தனை இருந்தால் இலேசில் தூக்கம் வருவது ஏது? "உன் கடமையை நிறைவேற்றுவதில் நீ தாமதம் செய்கிறாய்!" என்ற சொற்கள் என் காதுகளில் இரவு பகல் எந்நேரமும் ஒலிக்கத் தொடங்கின. அது ஏதோ பொய்யான சத்தமாகவோ, கற்பனைக் குரலாகவோ எனக்குப் படவில்லை. அது கடவுள் இடும் கட்டளையாக, ஆண்டவன் இடும் ஆணையாகத்தான் தோன்றியது. நான் சில தினங்கள் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். கடைசியில் திடமான சங்கற்பம்

செய்து கொண்டு ரூப்சந்தைத் தேடப் புறப்பட்டேன். இயற்கையை வழிபடும் மேல்நாட்டு வாசிகள் வேண்டு மானால் என்னுடைய இந்தச் செய்கையைக் கண்டு கைதட்டி நகைப்பார்கள்; ஏளனம் செய்வார்கள்; பரிகாசம்செய்வார்கள். ஆனால் அதை என் உள்ளம் ஆண்டவன் இட்ட ஆணையாகத் தான் மதித்தது என்பதை என்னால் இங்கே சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

ரூப் சந்தைத் தேடிக் கொண்டு நான் பிரான்சுக்குப் போனேன்; ஜெர்மனிக்குப் போனேன்; சுவிட்ஜர்லாந் துக்குப் போனேன். நான் அவரை அவ்விடங்களில் உள்ள தியேட்டர்களில் தேடினேன்; பிரசங்கம் செய்வதற் கென்று நிறுவப்பட்டிருக்கும் சபைகளில் தேடினேன்; மலை அடிவாரங்களில் தேடினேன். சொல்லப் போனால் நான் அவரைத் தேடாத இடமே கிடையாது. ஆனால் ரூப் சந்த் எங்கும் அகப்படவில்லை. சுவிட்ஜர்லாந்தில் அவர் கிடைத்துவிடுவார் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரண மாக இருந்தது. ஆனால் அவர் அங்கும் கிடைக்கவில்லை. அடிக்கடி பரீட்சையில் தோல்வியுறும் மாணவன் நம்பிக் கை இழந்துவிடுவான் அல்லவா? அது போல் நானும் நம் பிக்கை இழந்து விட்டேன். இவ்வளவு தேடியும் கிடைக் காத ரூப்சந்த் எங்கே கிடைக்கப் போகிறார் என்ற அவநம் பிக்கை என் உள்ளத்தில் ஏற்பட்டது. நான் தேவகிக்குப் பல கடிதங்கள் எழுதினேன். அவற்றில் என் முயற்சி களையும், அவர் கிடைக்காமற் போவதனால் ஏற்படும் மனச் சோர்வையும் குறிப்பிட்டு விவரமாக நீண்ட கதைகளைப் போல் எழுதி அனுப்புவேன். தேவகி அந்தக் கடிதங் களில் ஒன்றுக்குமே பதில் எழுதவில்லை. ஆனால் நான் ரூப் சந்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண் டும் என்பதற்காக எனக்கு அடிக்கடி கேட்காமலேயே வேண்டிய பணம் மட்டும் அனுப்பி வந்தாள்.

அவ்விடங்களில் எல்லாம் தேடிச் சலித்த நான் அமெரிக்காவை அடைந்தேன். இங்கே ராமகிருஷ்ண மிஷன் சார்பில் ஏராளமான பெரிய கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே வேதாந்த கோஷ்டிகள் நடைபெறுகின்றன. ஞானம், தியானம் முதலிய தத்துவங்களைப் பற்றி உபன்யாசங்கள் நடைபெறுகின்றன. இரவு பகல் எந்நேரமும் இங்கே அறிவு என்னும் கங்கை நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. என் மனம் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தது. இனி வெற்றி வெகு தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் இடம் பெற்றது. 'ரூப்சந்த் இந்தக் கோயில்களில் ஏதாவது ஒன்றில்தான் இருப்பார். கட்டாயம் அகப்பட்டு விடுவார். உலகத்தைத் துறந்துவிட்ட மனிதனுக்கு உடனே தர்மத்தின் நினைவுதான் வரும்' என்ற எண்ணம் எழவே, நான் வேதாந்தக் கோயில்கள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று அவரைத் தேடினேன். கடைசியில் அவர் கலிபோர்னியாவில் இருக்கிறார் என்றும் அவ்விடத்து மக்கள் அவரைத் தெய்வமாக வழி படுகிறார்கள் என்றும் அறிந்தேன். நான் உடனே அங்கு பறந்து சென்றேன். அவ்விடத்து வேதாந்தக் கோயிலைக் கண்டு மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கியது. ஆனால் அங்கேயும் அவரைக் காணவில்லை. காவலாளியைக் கூப்பிட்டுக் கேட்டேன்.

"இங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு அருவி இருக்கிறது. 'சலசல'வென்று சப்தித்துக் கொண்டு ஓரே சீராக ஓடும் அந்த அருவிக்கரையிலே அவர் தனிமையாக ஒரு குடிசை கட்டிக் கொண்டு வாழ்கிறார். அந்தக் குடிசைக்கு அவர் 'ஆனந்த பவனம்' என்று பெயரிட்டிருக்கிறார். பாமரர்கள் அதை 'அருவிக்கரை ஆசிரமம்' என்று அழைக்கிறார்கள். அங்கேதான் அவர் தம் பெரும்பாலான பொழுதைப் போக்குகிறார். வருவோர் போவோருக்கு ஞான மார்க்கத்தை உபதேசிக்கிறார். மற்ற நேரங்களில்

தியானத்தில் மூழ்கி யிருக்கிறார்" என்று அவன் அவரைப் பற்றிய வரலாற்றை விவரமாகச் சொன்னான்.

நான் ஆனந்தபவனத்தை யடைந்தபோது இருட்டி விட்டது. உள்ளே நுழைந்ததும் அவருடைய அமைதியே உருவான, தேஜஸ் தோய்ந்த, அன்பு நிறைந்த முகத் தோற்றத்தைத்தான் நான் முதலாவதாகக் கண்டேன்.

அப்பொழுது அவர் துறவியின் வேஷத்தில் இருந்தார். நான் அவரை இதுவரை நேர்த்தியான ஆடம்பர உடை களில்தான் பார்த்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவர் பிரதாபம் வாய்ந்த அரசகுமாரனைப்போலக் காட்சி அளித் திருக்கிறார். ஆனால் இந்தக் காவித் துணியிலும் அவர் இவ் வளவு தேஜஸ் நிறைந்தவராகவும், கம்பீரத் தோற்றம் உடையவராகவும், மகானுகவும் தோற்றம் அளிப்பார் என்று நான் நினைக்கவே இல்லை.

அப்பொழுது அவர் ஒரு ஆசனத்தில் அமர்ந்து வேதாந்த விஷயத்தைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார். அவர் எதிரே கலிபோர்னியாவில் உள்ள பெரிய பெரிய வித்துவான்கள் எல்லோரும், தலைத் தொப்பியை எடுத்துக் கீழே வைத்துவிட்டு அடக்கமாகப் பக்தி சிரத்தையுடன் தலை வணங்கி உட்கார்ந்திருந்தனர். அவர் வேதாந்த விஷயமாகச் சொல்லும் தத்துவங்களைக் கேட்டு, அவருடைய ஆத்மீக அறிவின் மேன்மையை எண்ணி அதிசயித்துத் திறந்த வாய் மூடாமல் உட்கார்ந் திருந்தனர். ஆன்மீக அறிவிலே வளர்ச்சி அடைந்த மேற் நாட்டின் காலடிகளிலே மேல்நாடு தலைவணங்கி விட்டது என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

தற்செயலாக அவர் பார்வை என்மீது விழுந்தது. சிற் சில சமயம் மின்சார விளக்கின் ஒளி திடுதிப்பென்று அதிகமாகப் பிரகாசிப்பதில்லையா? அதுபோல் அவருடைய முகத்தின் காந்தி என்னைப் பார்த்ததும் இன்னும் அதிகரித்

தது. நான் முன்னே ஓடிச் சென்று அவருடைய காலடி களிலே விழுந்தேன். அப்பொழுது என் உள்ளத்தில் பக்தி பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. வெகு நேரம் வரை நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். நள்ளிர வுக்குமேல் ஆகிவிடவே, மறுநாள் மாலை வந்து சந்திப்ப தாகச் சொல்லி விட்டு நான் தங்கியிருந்த ஹோட்டலுக் குத் திரும்பி வந்தேன். ஆனால் இரவு முழுவதும் எனக் குத் தூக்கம் வரவில்லை. மனத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கி விட்டால், தூக்கம் வரு வது ஏது? காலையில் எழுந்ததும் முதல் காரியமாக நான் தேவகிக்கு ரூப்சந்த் அகப்பட்டு விட்ட சந்தோஷச் செய்தி யைத் தந்தியாகக் கொடுத்தேன்.

அதற்குப் பிறகு நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப் பட்டேன். மத்தியான்னம் திரும்பி வந்த நான் உணவு அருந் திவிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறினேன். மாலை நேரம் எப்பொழுதடா வரப்போகிறது என்று எதிர்பார்த்த நான் ஒவ்வொரு நிமிஷமாகப் பிடித்துத் தள்ளினேன். கடைசி யில் நான் எதிர் பார்த்து நின்ற மாலை நேரமும் வந்தது. நான் ரூப்சந்தின் ஆனந்த பவனத்தை நோக்கிப் புறப்பட் டேன். அச் சமயம் என் கால்கள் தரையில் பாவவே இல்லை. ரூப்சந்தைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவல் என் கால்களுக்கு இறக்கை கட்டிவிட்டன. மனத் திலே தோன்றிய பற்பல இனிய கனவுகள் என்னை வான வீதியில் ஏற்றி மிதக்க விட்டு விட்டன.

ஆனால் நான் அங்கே போனதும் என் மனம் இடிந்து உட்கார்ந்து விட்டது. அங்கே ஆசிரமத்தைச் சுற்றிப் போலீஸ் பாரா நின்று கொண்டிருந்தது. ஆனந்த பவ னத்தில் சோக அமைதி நிலவி யிருந்தது. எனக்கு விஷ யம் விளங்கவில்லை. அருகில் சென்று விசாரித்தேன்.

இந்த ஆசிரமத்தில் இரவு ஒரு பெண் கோரக் கொலை செய்யப்பட்டு விட்டாள் என்றும் ரூப்சந்த் தான் அந்தக்

கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று போலீசார் சந்தேகப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அதைக் கேட்டதும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கண்களில் பூச்சி பறந்தது. நான் சிலை போலானேன்.

16. யார் குற்றவாளி?

சகோதரா! இதைக் கேட்டதும் என் இருதயமே நொறுங்கிவிட்டது. கல்யாண வீட்டில் திடீரென்று மணமகன் மரித்து விட்டால் என்ன நிலை ஏற்படும்? என் உள்ளத்தின் நிலையும் ஏறக்குறைய அதே நிலையைப் போன்றதாகி விட்டது. ரூப்சந்தின் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் விஷயத்தில் எனக்கு எள்ளளவும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஜனங்கள் காதைக் காட்டிலும் கண்கள் மீதுதானே அதிக நம்பிக்கை வைக்கிறார்கள்! ஆனால் நான் என் கண்களினாலேயே இந்தச் சம்பவத்தைப் பார்த்திருந்தால்கூட நம்பியிருக்க மாட்டேன். 'இது நம் கண் கோளாறுகளோ, புத்திக் கோளாறுகளோதான் இருக்க வேண்டும். ரூப்சந்த் இப்படியெல்லாம் போகக்கூடியவர் அல்ல. இது ஒருபொழுதும் அவர் குற்றமாக இராது' என்றுதான் எண்ணுவேன். நான் எதை வேண்டுமானாலும் நம்பத் தயார். ஆனால் ரூப்சந்த் கொலை செய்திருப்பார் என்னும் விஷயத்தை மட்டும் சிறிதும் நம்பத் தயாராயில்லை. எனக்கு என்னவோ அது நம்பத்தகாத காரியமாக, நடக்கக் கூடாத காரியமாகத்தான் பட்டது.

ஆனால் எனக்கு நம்பத் தகாத காரியமாகப் பட்டது என்பதனால் மட்டும் என்ன ஆயிற்று? அதற்காக ரூப்சந்தை யாராவது விட்டுவிடப் போகிறார்களா? அல்லது என்னால்தான் அவருக்கு விடுதலை வாங்கி அளித்து விட முடியப் போகிறதா?

வழக்கு ஆரம்பமாகியது. அந்த வழக்கு அமெரிக்கா முழுவதையும் ஒரே பரபரப்பில் ஆழ்த்திவிட்டது. ரூப்

சந்த் கலிபோர்னியாவுக்குப் போய் அதிக நாட்கள் ஆகி விடவில்லை. ஆனால் அவர் தம்முடைய இனிமையான பேச்சு, தூய நடத்தை, ஆன்மீக அறிவு இவற்றின் பலத்தைக் கொண்டு மக்களின் மனத்தை மிகவும் கவர்ந்திருந்தார். செய்தித் தாள்கள் 'பாரதிய மகாத்மா' என்று அடை மொழி அளித்து அவரைக் கௌரவித்தன. நியூயார்க் நகரத்திலேயே மிக மிகச் செல்வாக்கு வாய்ந்த செய்தித் தாளான 'டிரிப்யூன்' கூட அவருடைய அநேக சொற்பொழிவுகளைப் பிரசுரித்ததோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அவரைப் பாராட்டிப் பல பத்திகளும் எழுதியிருந்தது. '...ஆனால் பிரும்ம ரிஷி!' என்று வசிஷ்டர் வாயிலிருந்து வெளி வந்தால் எவ்வளவு பெருமையோ, அதைக் காட்டிலும் பன்மடங்கு பெருமை அளிக்கக் கூடியது, நியூயார்க் டிரிப்யூன் புகழ்ந்து எழுதுவது. அந்தப் பத்திரிகையே அவரைப் பற்றிப் பத்தி பத்தியாகப் புகழ்ந்து எழுதி யிருந்தது என்றால் அவருடைய பெருமை அந்நாட்டவர்களிடையே எவ்வளவு தூரம் உயர்ந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறதல்லவா? மக்கள் அவரைத் தர்ம குருவாகவே மதித்து வந்தனர்.

கோரக் கொலையைப் பற்றிய செய்தி காட்டுத் தீயைப் போல நொடிப்பொழுதில் நகரம், நாடு எங்கும் பரவி விட்டது. நான் என்னால் இயன்றவரை பல முயற்சிகள் செய்து பார்த்தேன். ஆனால் என்ன செய்து என்ன? பலன் பூஜ்யம்தான். நியாயஸ்தலத்தில் நடைபெற்ற நடவடிக்கைகளைக் கண்டு என் இருதயம் இருளில் அடைந்து புழுங்கியது. இருளிலிருந்து விடுபடுவதற்கு நம்பிக்கையின் ஒளிக்கதிர் ஒன்றுகூடத் தென்பட வில்லை. வழக்கோ மிக மிகத் தெளிவாக இருந்தது. அதில் எவ்விதச் சிக்கலும் இல்லை. கொலையுண்ட பெண் கலிபோர்னியாவிலேயே மிகப் பிரசித்தி வாய்ந்த வியாபாரி ஒருவரின் மகள். அவள் ரூப்சந்தினிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து

விட்டாளாம். அவளுக்கு அவர்மீது உயிர் என்றுல் உயிர். அவ்வளவு காதல் ஏற்பட்டு விட்டதாம். அந்த அன்பு அவளை அவருக்கு அடிமையாக்கி விட்டது. ஆகவே, அடிக்கடி அவள் அவருடைய ஆனந்த பவனத்துக்குப் போய் வரலானுள். தினம்போல, அன்றைக்கும் அவள் அங்கே போயிருந்தாளாம். ஆனுல் அன்றைக்கு அவள் ஏனே மிகவும் வாட்டமாக இருந்திருக்கிருள். அன்று மாலையில் தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இதைப் பற்றி வாக்குமூலம் கொடுக்கும்பொழுது ரூப்சந்த் சொன்னதாவது:

அச்சமயம் நான் ஆசிரமத்துக்கு வெளியே உலாவிக் கொண்டிருந்தேன். திடீரென்று அறைக்குள்ளிருந்து மிகப் பயங்கரமான கூச்சல் வரவே, உள்ளே ஓடினேன். லாஸி கீழே தரையில் விழுந்து துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இருதயத்தில் பாதிக்கு மேல் அதிகமாகக் கத்தி பதிந்திருந்தது. நான் அவளருகில் ஓடிச் சென்று இருதயத்தில் செருகியிருந்த அந்தக் கத்தியை எடுத்தேன். அப்பொழுதுதான் என் உடைரத்தத்தினுல் நனைந்து விட்டது. இதற்குள்ளாகப் போலீஸார் வந்து கத்தியும் கையுமாக இருந்த என்னைப் பிடித்துக் கொண்டனர். இதைத் தவிர இது சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

சகோதரா! எனக்கு ரூப்சந்தின் வாக்கு மூலத்தின் மீது முழுக்க முழுக்க நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அவர் மேல் சந்தேகப்படுவதற்கான முகாந்திரம் ஏதும் இருப்பதாக எனக்குத் தென்படவில்லை. ஆனுல் நியாயஸ்தலத்தாருக்கு அந்த வாக்குமூலத்தில் நம்பிக்கை ஏற்பட வேண்டாமா? எனக்கு மட்டும் நம்பிக்கை ஏற்பட்டு என்ன பயன்? அவர்களுக்கு அவருடைய வாக்குமூலம் முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதாகப் பட்டது. ஆகவே, வழக்கு மாதக் கணக்கில் நீண்டது. எத்தனை எத்

தனையோ வாக்கு மூலங்கள் வாங்கப்பட்டன; வாய்தாக்கள் போடப்பட்டன. வழக்கு முடியும் வழியாகவே தோன்றவில்லை. கடைசியில் ஒருவாறு தீர்ப்புக் கூறும் அந்த நாளும் வந்தது. அன்று நியாயஸ்தலத்தில் ஏகக் கூட்டம். எள் போட்டால் எள் விழாது என்பார்களே, அப்படிக் கூடியிருந்தது! அமெரிக்காவில் உள்ள மிக மிகப் பிரபலமான நட்சத்திரங்களைக் காணக்கூட ஜனங்கள் இவ்வளவு கூட்டம் கூடியிருக்கமாட்டார்கள்; பரபரப்புக் காட்டியிருக்க மாட்டார்கள். செய்தித் தாள்களின் நிருபர்கள் கையில் காமிரா சகிதம் வந்திருந்தார்கள். ரூப் சந்தைப் படம் பிடிக்க அவர்கள் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனல் ரூப்சந்தின் முகத்தில் கவலைக் கோடுகளோ, பயத்தின் குறிகளோ வருத்தத்தின் ரேகைகளோ லவலேசங்கூடத் தென்படவில்லை. அவருக்கும் அந்த வழக்குக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இல்லாதது போலவே அவர் தோற்றமளித்தார். நான் அவரைப் பார்த்தேன். ஆனல் தலை நிமிர்ந்து நேருக்கு நேர் அவரை நோக்கும் துணிவு எனக்கு உண்டாகவில்லை. எல்லாம் என்னல் வந்த வினையாக இருக்கும் பொழுது துணிவு எப்படி உண்டாக முடியும்?

இதற்குள் ஜூரிகள் தங்கள் தீர்ப்பைத் தெரிவித்து விட்டார்கள். தீர்ப்பைக் கேட்ட மக்களுக்கு மூச்சே நின்றுவிடும் போலாகி விட்டது. உயிர் உதடுகள் வழியே வெளியேறி விட்டவர்கள் போல வாயைத் திறந்த வண்ணம் ஆடாமல் அசையாமல் நின்றனர். எங்கும் மரண அமைதி நிலவியிருந்தது.

"குற்றம் ருஜுவாகி விட்டதனல் குற்ற வாளிக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. கழுத்தில் கயிற்றைச் சுருக்கிட்டுக் குற்ற வாளியை உயிர் போகும் வரை தொங்கவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்" என்று கம்பீரமான குரலில் தீர்ப்பு அளித்தார் நீதிபதி.

அச்சொற்களைக் கேட்டதும் எனக்கு இருதயத்தில் இரும்பு ஊசியைக் காய்ச்சிச் செருகுவது போலிருந்தது. கால்களுக்கு அடியிலிருந்து பூமியே நழுவி ஓடுவதுபோலத் தோன்றியது. வானம் இடிந்து தலையில் விழுவதுபோன்ற பிரமை ஏற்பட்டது. எனக்கு உடலில் என்ன செய்த தென்றே புரியவில்லை. தலை சுற்றவே தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டேன்.

இதே சமயம் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு யாரோ உள்ளே நுழைந்தார்கள். அதன் பலனாகக் கூட்டத்திலே சிறிது சலசலப்பு ஏற்பட்டது. அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் ஓர் உருவம் நியாயாதிபதிக் கருகே போய் நின்றது. நாடகத்திலே வியப்புக்குமேல் வியப்பு களை அளிக்கும் காட்சிகளைக் கண்டுகொண்டு வருகிறவன் அதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக வியப்பு அளிக்கக்கூடிய நிகழ்ச்சியை அடுத்த காட்சியிலேயே காண நேர்ந்து விட்டால் எப்படிப் பிரமிப்பில் ஆழ்ந்து வாய் அடைத்துப் போய் உட்கார்ந்திருப்பான்? அதே போல் நான் அந்த உருவத்தைப் பார்த்துப் பிரமித்துத் திகைத்து நின்றேன். அந்த உருவம் யார், தெரியுமா? வேறு யாரும் இல்லை. சாக்ஷாத் தேவகியே தான்!

அவள் நேரே நியாயாதிபதிக்கு எதிரே போய் நின்று கொண்டாள். பிறகு மெதுவான, ஆனால் தைரியம் தோய்ந்த அழுத்தந் திருத்தமான குரலில், "இவர் குற்ற மற்றவர். கொலை செய்தவள் நான். குற்றத்துக்கேற்ற தண்டனை பெறவேண்டியவள் நான். ஆகவே, இவருக்குத் தண்டனை அளிக்காதீர்கள். நடந்தது என்னவோ நரக் கொலைதான். அதற்காக நியாயத்தைக் கொலை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்!" என்று ரத்னச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

அதைக் கேட்டதும் நியாயஸ்தலத்திலே ஏகப் பர பரப்பு ஏற்பட்டு விட்டது. மக்களின் கண்களில் நீர்

கோத்து நின்றது. தங்கம் சூடேறி விட்டால் நீராக உருகி விடுகிறது. மக்களின் கண்களில் முட்டி நின்ற நீர் சாதாரண நீர் அல்லவே! தங்கம் வெள்ளி ஆகியவை உருகி ஓடியதனால் உண்டான நீரும் அல்லவே! தங்கமான உள்ளத்து உணர்ச்சிகள் வடித்த உண்மையான கண்ணீர் அல்லவா? ஜூரிகள் கூடப் பிரமித்துப்போய் எழுந்து நின்று விட்டார்கள். சர்க்கார் தரப்பு வக்கீல் வியப்புத் தாளாமல் தம் தலையைத் தடவி விட்டுக் கொண்டார். ரூப்சந்த் தமக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பைக் கேட்டுக்கூட அவ்வளவு கலங்கவில்லை. ஆனால் தேவகி சொன்ன சொற்கள் அவரை வாய்திறக்க வொட்டாமல் உதடுகளை உலர்த்தி விட்டன. பைத்தியம் பிடித்தவர் போல் அவர் தேவகியையே சிறிதும் கண் கொட்டாமல் வெறித்துப் பார்த்தார்.

தேவகியைப் பார்த்து, "நீ யார்?" என்று கோர்ட்டார் அவர்கள் கேட்டார்கள்.

"நானா? குற்றவாளியின் மனைவி!"

அச்சொற்களைக் கேட்டதும் நியாயஸ்தலம் சிறிது நேரத்துக்கு ஸ்தம்பித்தே போய்விட்டது. யாருக்கும் என்ன பேசுவது என்று புரியவில்லை. எல்லோரும் வாய் அடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள். கோர்ட்டார் அவர்களுக்கே கூட என்ன சொல்வது என்று புரியவில்லை. சிறிது நேரம் கழித்துக் கோர்ட்டார் அவர்கள் நியாயஸ்தலத்துப் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு, "வழக்கு வேறு விதமாக உருவெடுக்கும் போலத் தோன்றுகிறது. ஆகவே, உடனே இவளைச் சிறைப் படுத்துங்கள்!" என்று அவசரமான உத்தர விட்டார்கள்.

தேவகியின் கைகளுக்குக் காப்பு மாட்டப்பட்டது. அது அவளுக்குச் சிறைத் தண்டனையாகவா தோன்றியது? அவளுடைய மரணத்துக்கு முன் அறிவிப்பாக அல்லவா அது முளைத்திருந்தது! ஆனால் தேவகி எதையும் பொருட்

படுத்தினதாகத் தெரியவில்லை. அவள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. பஞ்சத்தில் அடிபட்டவனுக்குப் புதையல் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவான்? அவ்வளவு சந்தோஷம் அவள் முகத்திலே குமிழி யிட்டுக் கொப்புளித்துக் கொண்டிருந்தது. அந்த மகிழ்ச்சி முகத்தில் மட்டும் அல்ல; முகத்தில், கண்களில், உதடுகளில் அங்க நெளிவுகளில் எல்லா வற்றிலுமே வெகு ஸ்பஷ்ட மாகத் தெரிந்து கொண்டிருந்தது.

17. வெறி முற்றியது!

சகோதரா! தேவகி தன்னைத் தானே மரணத்தின் கையில் ஒப்படைத்துக் கொண்டு தன் கணவனை விடு வித்து விட்டாள். ஆனால் தேவகியின் அந்தச் செயல் ரூப்சந்துக்கு அவ்வளவு திருப்தியை அளிக்கவில்லை. அவர் அந்தச் சம்பவம் குறித்து மிகவும் மனவருத்தப்பட்டார். கடன் வாங்கியவன், தான் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கத் தவணைக்கு மேல் தவணை கேட்டு நாட்களை முடிந்த மட்டில் ஓட்ட முயற்சிப்பான் அல்லவா? அது போல் வக்கீல்கள் அந்த வழக்கை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு நீட்டி முடியா வழக்காக்க முயன்றனர். அவர் கள் தொழிலே அது தானே? நியாய ஸ்தலத்தில் ஆரம்பம் தொட்டுப் பழையபடியும் 'அடியைப் பிடியடா, பாரத பட்டா' என்ற ரீதியில் அந்த வழக்கு ஆரம்பமாயிற்று. எப்படியாவது தேவகியை விடுவித்து விடவேண்டும் என்று ரூப் சந்த் விரும்பினார்; ஆனைப்பட்ட பாடு பட் டார். ஆனால் அந்தக் காரியம் அவ்வளவு சுலபமானதாக இல்லை. ஏனெனில் தேவகி, தானாகவே வலிய வந்து குற் றத்தை ஒப்புக் கொண்டிருந்தாள். அதுமட்டும் அல்ல, தான் கொடுத்த வாக்கு மூலத்தில் தெள்ளத் தெளிய ஐயந்திரிபுக்கு இடம் இன்றி, தானே அந்தக் கொலையைச்

செய்ததாகவும் அவள் ஒப்புக் கொண்டிருந்தாள். அவள் மேலும் அந்த வாக்கு மூலத்தில் கூறியதாவது:—

என் கணவர் என்னிடம் கோபித்துக் கொண்டு இங்கே வந்து விட்டார். என்னால் அவருடைய பிரிவுத் துயரைத் தாள முடியவில்லை. ஆகவே, அவரைத் தேடிக் கொண்டு நான் இங்கே வந்து சேர்ந்தேன். ஆனால் கண வருக்கெதிரே போய் நிற்க எனக்கு அவ்வளவு துணிச்சல் உண்டாகவில்லை. எங்களிடையே ஏற்பட்டிருந்த மனஸ் தாபம் கடுமையாக வளர்ந்திருந்தது. நேருக்கு நேர் இல் லாவிட்டாலும் மறைமுகமாகவாவது அவரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கட்டுமே என்பதற்காக, நான் வேறு ஒரு இடத்தில் தங்கிக்கொண்டு அவரைப் பார்த்துப் போக லானேன். இப்படி யிருக்கும் பொழுதுதான் லூஸி என்ப வள் அவரிடம் அடிக்கடி வந்து போவதை அறிந்தேன். அவளுடைய நடை, உடை, பாவனையிலிருந்து அவளுக்கு அவர் மீது அன்பு ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் என் உள்ளத்திலே எழுந்து வளர்ந்தது. என் கணவரின் காதலைப் பெற அவள் முயற்சிக்கிறாள் என்பதை நினைக் கவே எனக்குச் சகிக்கவில்லை. நான் என் உயிரை வேண்டு மானாலும் கொடுக்கத் தயாராயிருந்தேன். ஆனால் கண வரையும் கணவரின் அன்பையும் கண்களுக் கெதிரே விட்டுக் கொடுக்க நான் சிறிதும் தயாரா யில்லை. எந்தப் பெண்ணும் என் நிலையில் இருந்தால் என்னைப் போலவே தான் எண்ணியிருப்பாள். எந்தப் பெண்ணும் தன் கண வன் தன் கையை விட்டு நழுவி வேறு ஒருத்தியின் மைய லில் மூழ்கி, அவளுடைய கைப் பொம்மையாக மாறி ஆடு வதைக் காண விரும்ப மாட்டாள்; சகிக்கவும் மாட்டாள். பெண் உள்ளத்தின் தன்மையே இத்தகையது. நானும் ஒரு பெண் தானே? ஆகவே, என் கணவர் இன்னொருத்தி யின் மோக வலையில் சிக்கப் போகிறார் என்பதை நினைக் கவே எனக்கு மனம் கூசிற்று. அதனால் என் உள்ளத்தில்

வைஷம்ய விஷம் பாதரஸம் போல ஏறியது. என் மூளையும் மனமும் கொதிக்கத் தொடங்கின.

நான் இரண்டு ஒரு தடவை லூஸியைச் சந்தித்து அவளிடம் விவரத்தைச் சொல்லி அவளுடைய மனத்தை மாற்றக்கூட முயன்றேன். ஆனால் அவள் என் வார்த்தைகளைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. 'நான் அவரைப் பிரிந்து வாழ முடியாது. அடைந்தே தீருவேன்' என்று அவள் தீர்மானமாக என்னிடம் சொல்லிவிட்டாள். அவள் சொற்களைக் கேட்ட எனக்கு ஏற்பட்ட சீற்றத்தைச் சொல்லி முடியாது. நான் கோபவெறியில் மதி கிறங்கி என் கணவரின் குடிசையை நோக்கிச் சென்றேன். அந்தக் கெட்ட நடத்தைக் காரியின் வண்ட வாளங்களை யெல்லாம் அவிழ்த்து விட்டு என் கணவரின் மனத்தை எப்பாடு பட்டாவது மாற்றிவிட வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் அவர் குடிசையை நோக்கிச் செல்லும் சக்தியையும் துணிவையும் என் கால்களுக்கும் உள்ளத்துக்கும் அளித்தது.

ஆனால் நான் அங்கே போவதற்கு முன்பாகவே லூஸி அங்கே போய் உட்கார்ந்திருந்தாள். அவள் என் கணவருக்கு வெகு அருகே உட்கார்ந்திருந்தாள். அதைக் கண்டதும் என் வெறி முற்றியது. நான் என் நிலை மறந்து ஆவேசத்தில் மேஜையின் மீதிருந்த கத்தியை எடுத்துக் கொண்டேன். அடுத்த கணம் ஒரே ஓட்டமாக அவளருகே ஓடி அவளுடைய மார்பில் ஓங்கிக் குத்திவிட்டேன். அவள் இருதயத்தில் அது ஆழப் பதிந்து விட்டது. அப்புறம்தான் என் வெறி அடங்கியது; கண்கள் திறந்து கொண்டன. 'என்ன காரியம் செய்து விட்டோம்?' என்று எண்ணிக் கதி கலங்கினேன். ஆனால் அதைப் பற்றி யெல்லாம் அப்பொழுது சிந்தித்துக் கொண்டிருக்க எனக்குப் பொழுது ஏது? என்ன விபரீதம் நேருமோ என்று எண்ணித் திகிலுற்ற நான், செய்யும் வகையறியாது தவித்தேன். பிறகு

கடவுள் விட்ட வழி விடட்டும் என்று எண்ணி அவ்விடத்தை விட்டு அந்த நிமிஷமே வெளியேறினேன்.

தேவகியின் அந்த வாக்கு மூலம் நியாய ஸ்தலத்திலே மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணி விட்டது. கூடியிருந்த ஜனங்கள் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் 'கசமுச' வென்று பேசிக்கொண்டனர். சிலர், 'இந்த வாக்கு மூலம் முற்றிலும் உண்மையாகத்தானிருக்க வேண்டும். இவள் உண்மையை ஒப்புக் கொண்டு தன் மானத்தைக் காத்துக் கொண்டாள்; நியாயத்தின் நேர்மைக்குத் தலை பணிந்தாள்' என்று பேசிக்கொண்டனர். வேறு சிலர், 'இவள் இந்தியப் பெண்மணி யல்லவா? பாரத நாட்டுக் கலா சாரத்திலே ஊறித் திளைத்திருக்கும் இவள் தன் உயிரைக் கொடுத்துத் தன் கணவனைக் காப்பாற்றி விட்டாள். இதைத் தவிர இவளுக்கும் கொலைக் குற்றத்துக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இருக்க நியாயம் இல்லை' என்று பேசிக் கொண்டனர். ஊர்வாயை மூட முடியுமா? அல்லது உலகத்தின் வாயைத்தான் கட்டிப்போட முடியுமா?

ரூப்சந்த் இவற்றை யெல்லாம் கவனித்துக் கொண்டு தான் இருந்தார். ஆனால் வாய்திறந்து ஒன்றும் பேச வில்லை. இந்த நிகழ்ச்சி அவருடைய பேசும் சக்தியையே பிடுங்கிக் கொண்டு விட்டதோ என்று தோன்றியது.

சூரிய வெப்பம் குளத்தின் நீரைச் சுண்டச் செய்து விடுவதனால் குளத்தின் தரை மட்டம் தெரியத் தொடங்குகிறது அல்லவா? அதே போல், பயங்கர ஏமாற்றம் ரூப்சந்தின் மன அமைதியைக் கெடுத்துக் குலைத்து விட்டது. அதன் பலனாக அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் உருவாகிக் கொண்டிருந்த உணர்ச்சிப் போர் தெள்ளத் தெளிந்தது. அவர் தேவகிக்காக அல்லும் பகலும் கண்ணீர் பெருக்கத் தொடங்கினார். வெளிக்கு அவர் எவ்வளவு வெறுப்பைக் காட்டிக்கொண்டு வெளியேறி வந்திருந்தா

லும் உள்ளத்தில் அவளிடம் அவருக்கு அளவற்ற அன்பு இருக்கத்தான் செய்தது என்பது நிதர்சனமாகத் தெரிந்தது.

எப்படியாவது தேவகியைத் தப்புவித்து விட வேண்டும் என்பதற்காக அவர் தம்மால் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்து பார்த்தார். ஆனால் அவை அவ்வளவு பலனளிக்கக் கூடியவையாகத் தோன்றவில்லை.

அப்பப்பா! அந்தக் காட்சிதான் எவ்வளவு துயரம் தருவதாக இருந்தது! மனைவியோ மரணத்தின் திறந்த வாயில், தானே வலியப்போய் விழுந்து கொண்டிருந்தாள்! கணவனால் அவற்றையெல்லாம் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடிந்ததே ஒழிய, ஒரு உதவியும் செய்ய முடிய வில்லை. விதியின் சதியை என்னவென்று சொல்லுவது? ரூப்சந்த் உள்ளம் குமுறிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு என்ன செய்வார், பாவம்!

18. பிரிந்தவர் கூடினர்!

நான் ஒரு நாள் இரவு வெகு நேரங்கழித்து ஹோட்டலை அடைந்தேன். எல்லோரும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்று தூங்கிவிட்டார்கள். நானும் என் அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு படுத்தேன். ஆனால் தூக்கம் வந்தால் தானே? என் கண்கள் நல்ல தூக்கத்தைக் கண்டு எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. 'உண்மையிலேயே தேவகி தூக்கில் ஏறித்தான் ஆகவேண்டுமா?' என்ற எண்ணம் என் உள்ளத்திலே அடிக்கடி எழுந்து ஊசியாகக் குத்தியது. தூக்குத் தண்டனை என்ற அந்தச் சொல்லை நினைத்த மாத்திரத்திலேயே எனக்கு உடல் முழுவதும் மயிர்க் கூச்சல் எடுத்தது; நிலைக் குத்தல் இட்டது; கண்களிலே நீர் கசிந்தது.

இப்படி நான் சிந்தனையில் ஈடுபட்டிருந்த பொழுதுதான் பக்கத்து அறையிலிருந்து யாரோ பேசும் குரல் கேட்டது. இந்த அவேளையில் யார் பேசப் போகிறார்கள்?

என்ன பேசப் போகிறார்கள்? ஏதாவது மிக மிக முக்கிய மான விஷயமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எல்லோரும் அயர்ந்து தூங்கும் இந்த வேளையில் இவர் களுக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?

இவர்கள் என்னதான் பேசுகிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நான் சுவரோடு சுவ ராக ஒட்டிக் கொண்டு ஒட்டுக் கேட்கலானேன். பேசு வது ஆணும் பெண்ணும் என்று தோன்றவே, நான் இன்னும் காதைத் தீட்டிக் கொண்டு கேட்க முற் பட்டேன்.

"உனக்குச் சம்மதமா, இல்லையா? சொல்வதை, 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்று தெளிவாகச் சொல்லிவிடு. இப்படியே நாட்களை ஓத்திப் போட்டுக் கொண்டும் தவணை சொல்லிக் கொண்டும் இராதே! என் பொறுமையைச் சோதிக்காதே. ஆமாம், சொல்லி விட் டேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக் கிரம் நம் இருவருக்கும் கல்யாணம் ஆகிவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்ன, நான் சொல்வது புரிந்ததா?" என்றது ஆண் குரல்.

"ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கவில்லை என் பார்களே, அதுபோல் எதற்கு இவ்வளவு அவசரப்படு கிறாய்? இன்னும் கொஞ்ச நாள் நீ ஏன் பொறுத்துக் கொள்ளக்கூடாது? இப்பொழுதுதான் என் சகோதரி இறந்திருக்கிறாள். அவள் இறந்து அதிக நாட்கள்கூட ஆகவில்லை. அப்படி இருக்கும் பொழுது நம் இருவருக்கும் இப்பொழுதே கல்யாணம் நடந்தால் ஜனங்கள் என்ன சொல்லிக் கொள்வார்கள்? நம்மை ஏளனம் செய்து ஏசித் தள்ளிவிட மாட்டார்களா? அவர்களுடைய ஏச்சுப் பேச்சுக்குத் தப்பி நாம் அப்புறம் இந்தப் பட்டணத்தில் வாழ்ந்து விட முடியுமா? ஆகவே, அவசரப்படாதே, சற்றுப் பொறு!" என்றது பெண் குரல்.

"இந்த ஜனங்கள் இருக்கிறார்களே, ஜனங்கள்! இவர்கள் பேச்சை நீ சிறிதும் காதில் போட்டுக் கொள்ளாதே! ஒரு பேச்சாகவே மதிக்காதே—" இது ஆண் குரல்.

"காதில் போட்டுக் கொள்ளாமல் இருப்பதா? இந்த ஊரில் இருந்தால், அவர்கள் பேச்சுக் காதில் விழாமல் இருந்து விடுமா? இந்த ஊரை விட்டு நமக்கு வேறு போக்கிடம் ஏது?" என்று கேட்டது பெண் குரல்.

"சகோதரியின் சாவுக்குச் சோகம் கொண்டாடுகிறாயோ?" என்று ஏளனமாகக் கேட்டது ஆண் குரல்.

"நீயோ புருஷன். புருஷர்களே கடின சித்தம் வாய்ந்தவர்கள்; அதனால்தான் நீ இப்படி நெஞ்சில் சிறிதும் ஈவு இரக்கமின்றிப் பேசுகிறாய். நானே பெண், உன்னைப் போல் கல்நெஞ்சுக்காரியாக ஆக வேண்டும் என்றால் அது என்னால் எப்படி முடியும்?"

"எந்தக் கிராதக நெஞ்சத்துடன் கொலை செய்தாயோ, அப்படித்தான்...!"

"உஷ்! இரைந்து பேசாதே! யாராவது கேட்டுவிடப் போகிறார்கள்!" என்று எச்சரித்தது பெண் குரல்.

"பாவம்! ஏதும் அறியாத, ஒரு குற்றம் புரியாத ஒரு இந்தியப் பெண் அல்லவா அநாவசியமாகத் தூக்கு மரத்துக்கு இரையாகிறாள்! சிற்சில சமயம் நீ கல் நெஞ்சம் என்று சொல்லும் என் நெஞ்சமே இதை எண்ணி நெகிழ்ந்து விடுகிறது!"—இது ஆண் குரல்.

இந்தப் பேச்சு வார்த்தையைக் கேட்டதும், காரிருளில் மின்னொளி எழுவது போல் என் இருண்ட உள்ளத்திலே நம்பிக்கை ஒளி வீசியது. நான் என் அறையை விட்டு வெளியே வந்தேன். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை கோலிச் சொல்லமுடியாது. இது வானமா புவியா என்ற நினைப்பையே மறந்தேன். அடுத்த நிமிஷம் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தேன்.

அதற்கு மறு நாள் உண்மையான குற்றவாளி கையில் காப்புடன் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டாள். ஆகவே, வழக்கு மறுபடியும் ஒரு முறை தலையோடு கால்வரை புதிதாக உருவமெடுத்து விட்டது.

குற்றம் புரிந்தவள் வேறு யாரும் இல்லை. லூஸியின் கூடப் பிறந்த சொந்தச் சகோதரிதான். முதலில் அவள் தன்னைக் காத்துக்கொள்வதற்கு எத்தனை எத்தனையோ முயற்சிகள் எல்லாம் செய்து பார்த்துவிட்டாள். ஆனால் போலீஸ் இலாக்காவின் கெடுபிடிக்கும், நியாயஸ்தலத்தின் நேர்மைத் திறனுக்கும் எதிரே அவள் ஜபம் சாயவில்லை. சட்டம் அவளை உடும்புப் பிடியாக இறுக்கிப் பிடித்துக் குற்றவாளி தான் என்பதை நிரூபித்துவிட்டது. சட்டம் சிக்கெனப் பிடித்து விடவே, அவளால் ஏமாற்றி விட்டு ஓட முடியவில்லை. ஆகவே, அவள் தன் வாக்கு மூலத்தில் தன் குற்றத்தை எவ்வித ஒளிவும் மறைவும் இன்றி ஒப்புக் கொள்ளும்படியாகி விட்டது.

அவள் தன் வாக்கு மூலத்தில் கூறியதாவது:—நானும் லூஸியும் சொந்தச் சகோதரிகள். எங்கள் இருவருக்கும் ரூப்சந்தினிடம் காதல் ஏற்பட்டு விட்டது. ஆனால் நாங்கள் இருவரும் இப்படி ரூப்சந்தை ஏககாலத்தில் காதலிக்கத் தொடங்குவோம் என்று நான் கனவிலும் கருதவில்லை. கொஞ்ச நாட்கள் கழிந்த பின்னர் தான் எனக்கு, நான் காதலிக்கும் ரூப்சந்தையே என் சகோதரியும் காதலிக்கிறாள் என்னும் ரகசியம் தெரியவந்தது. என் காதலுக்கு என் தங்கையே குறுக்கே நிற்பதை அறிந்த பொழுது எனக்கு அவள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கோபவெறியில் சீறி விழும் பெண் சிங்கத்தைப் போல் நான் உள்ளம் கொதித்தேன்.

என் சகோதரியிடம் சென்று, 'நீ அந்த இந்தியப் பாதிரியின் நினைவை விட்டு விடு. இல்லாவிட்டால் உன் சதையைத் துண்டு துண்டாக்கி விடுவேன்!' என்று கடிந்து

கொண்டேன். ஆனல் லூஸி என் அதட்டல் உருட்டல் களுக்கெல்லாம் கொஞ்சமும் மசியவில்லே. அடிபணிய வில்லே. அவள் நான் சொன்னதைச் சிறிதாவது காதில் வாங்கிக் கொண்டால் தானே? பித்தனுக்கும் காதல் பித்த னுக்கும் பிறருடைய உபதேசங்கள் எங்கேயாவது காதில் ஏறுவது உண்டா? என் ஆசை அவலமாவதைக் கண்ட நான் என் சுய உணர்வை இழந்தேன்.

அதன் பலனுக ஒரு நாள் தருணம் பார்த்து, என் சகோதரியை என் இந்தக் கைகளாலேயே, அந்த இந்தியன் குடிசையில் கத்தியால் குத்திக் கொன்று போட்டேன்.

★

அவள் உண்மையை ஒளிக்காமல் சொல்லிக் குற் றத்தை ஒப்புகொள்ளவே, தேவகி விடுதலே பெற்றுள். தேவகி மீதிருந்த வழக்குத் திடீரென்று அவள் மேல் தாவியது. ஆகவே, திரும்பவும் வழக்குக்கு வேண்டிய ஆயத்தங்கள் அமோகமாக நடக்கலாயின.

ஒரு நாள் நான் லூஸியின் சகோதரியைச் சந்திப்பதற் கான அநுமதி பெற்று, அவள் வைக்கப்பட்டிருக்கும் சிறைக் கூடத்தை அடைந்தேன். அவளைச் சந்தித்ததும் முதலாவதாக, "நான் தங்களே ஒரு கேள்வி கேட்கலாமா?" என்று கேட்டேன்.

"என்ன, என் மீதுள்ள வழக்குச் சம்பந்தமாகவா?" என்று கேட்டாள் அவள்.

"இல்லே, வழக்குக்கும் அதற்கும் அவ்வளவாகத் தொடர்பு கிடையாது!" என்றேன்.

"அப்படியானல் தாராளமாகக் கேளுங்கள்." எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன் என்றுள் அவள்.

"நீங்களும் உங்கள் சகோதரியும் அந்த இந்தியச் சந்நி யாசியைக் காதலித்ததாகச் சொன்னீர்களே! அந்தச் சந்நி யாசி உங்களில் யாரையாவது காதலித்தாரா என்பதை அறிய விரும்புகிறேன்!" என்றேன் நான்.

என்னுடைய இந்தக் கேள்வி அவளுடைய மனப் புண்ணை மறுபடியும் கீறிக்கச் செய்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அவள் தலையைக் குனிந்துகொண்டு, "இல்லை. அதுதான் இல்லை. அவர் எங்கள் இருவரில் யாரையுமே கண்ணெடுத்தும் காணவில்லை; எங்கள் காதலைப் பொருட்படுத்தவும் இல்லை. அவர் அவ்வளவு அலட்சியமாயிருக்கவே எனக்கு ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது.

நம்மை இவர் இப்படி அலட்சியம் செய்வதா என்று உள்ளம் பொறுமினேன். அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்களே, அது போல என் மனத்திலே சந்தேகப் பேய் விசுவரூபம் எடுத்தது. "பெண்ணின் மையலிலே மூழ்கிப் பெரிய பெரிய மனிதர் கள் எல்லாம் அடிபணிந்திருக்கும் பொழுது இவர் மட்டும் எம்மாத்திரம்? ஆனால் நாம் இவரை எவ்வளவோ மயக்க முயன்றும், இவர் நம்மை ஏறெடுத்துக்கூடப் பார்க்க வில்லையே! என்ன காரணமாயிருக்கும்? ஒரு வேளை இவர் நம் சகோதரியின் அன்புத் தளையில் கட்டுண்டு அவளிடம் தம் உள்ளத்தைப் பறி கொடுத்திருப்பாரோ?" என்ற எண்ணம் எழுந்தது. "ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று என் உள்ளம் அந்த எண்ணத்தை ஆமோதித்தது; மனம் முத்தாய்ப்பு வைத்து உறுதி செய்தது. அது மூதற்கொண்டு என் சகோதரியையும் அவரையும் சந்தேகக் கண்கொண்டே நோக்கலானேன். அவ்விருவருடைய நடை, உடை, பாவனையையும் காணும் பொழுது அவரும் என் சகோதரியும் உள்ளன்பு கொண்டு நேசம் பாராட்டுவதாகவே எனக்குப் பட்டது. 'இவர் இப்படி நமக்குக் கிட்டாக் கனியாகி விட்டாரே!' என்ற எண்ணம் எழவே என் உள்ளத்தில் பொறுமைத் தீ மூண்டது; ஏக்கம் அதிகரித்தது. ஆகவே, நான் தருணம் பார்த்து என் சகோதரியை அவருடைய குடிசையில்

குத்திக் கொன்று போட்டேன். நான் அப்படிச் செய்த தற்குக் காரணம் என்ன, தெரியுமா? ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பார்களே, அது போல் என் இரண்டு விரோதிகளையும் அதாவது என் காதலுக் கிடையே இடையூருகக் குறுக்கிட்ட என் சகோதரியை யும், என் காதலைக் கடுகளவும் பொருட் படுத்தாமல் அலட்சியம் செய்த அந்தச் சந்நியாசியையும் ஏக காலத் தில் பழி வாங்கி விட வேண்டும் என்பதுதான். ஆனல் என் தலையில் வேறு விதமாக எழுதியிருக்கிறது என்று அப்பொழுது எனக்குக் கடுகளவாவது தெரிந்தால் அல்லவா?" என்ருள்.

சகோதரா! எனக்கு உள்ளத்திலிருந்து மாபெரும் சுமை கீழிறங்கியதுபோலிருந்தது. அசாத்திய ஜுரம் வீசும் ஒருவன் ஜுரம் இறங்கினுல், என்ன உணர்ச்சியைப் பெறுவானே, அதே உணர்ச்சி என் உள்ளத்தை ஆட் கொண்டது. அங்கிருந்து நான் நேரே ரூப்சந்தின் குடி சையை நோக்கிச் சென்றேன். ரூப்சந்த் என்னையேதான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாரோ என்னவோ? என்னைக் கண்டதும் தம் இரு கைகளையும் நீட்டி அன்புடன் வர வேற்ருர். அவர் அப்படிக் கைகளை நீட்டி வரவேற்றதைக் கண்ட எனக்கு வைகுந்தத்தின் வாயிலே திறந்துவிட்டது போன்ற பெருமித உணர்ச்சி உண்டாயிற்று. நான் மகிழ்ச்சி வெறியில் மனம் நைந்து நெஞ்சு உருகி, நெக்குரு கிப் போனேன். மனிதப் பிறவி எடுத்த பயன் அன்று தான் ஏற்பட்டதாக எனக்குத் தோன்றிற்று. மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து நான் கும்மாளி போட்டுக்கொண்டு குதிக்கவே தொடங்கிவிட்டேன் என்ருல் எனக்கு உண் டான மகிழ்ச்சியை நான் எப்படி வார்த்தை வடிவில் வைக்க முடியும்? யாராவது பார்த்தால் என்ன சொல்லு வார்கள் என்ற சிந்தனையே அப்பொழுது என் உள்ளத்தில் எழவில்லை. நான் எனது அந்த மகிழ்ச்சி வெறியை நாலு

பேர் அறியக்காட்டிக் கொள்ளத்தான் விரும்பினேன். இன்பத்தை வெளிக் காட்டிக் கொண்டால் தானே இன்பத்தின் சுவை இன்னும் பன்மடங்கு அதிகரிக்கிறது?

மகிழ்ச்சி மயக்கத்திலிருந்து விடுபட்ட பின் நான் நாற்காலியில் ரூப்சந்துக்கெதிரே உட்கார்ந்து கொண்டு, "...ஆமாம், நீங்கள் எங்களை ஒரேயடியாக இப்படி மறந்து விட்டீர்களே! ஆனால் தங்களைத் தரிசிக்கவேண்டி நாங்கள் என்ன தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தோம், தெரியுமா?" என்று கேட்டேன்.

ரூப்சந்த் வானத்தைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு, "நடப்பதெல்லாம் நாராயணன் செயல். அவன் எண்ணம் அப்படி யிருக்கும்பொழுது நாம் என்ன செய்யக் கிடக்கிறது? இப்பொழுது இந்தக் குடிசை என் உள்ளத்தில் குடி கொண்டு விட்டது. இந்த வாழ்க்கையில் உள்ள இன்பம்.....ஆகா!" என்று கூறி ஆத்ம இன்பத்தில் ஊறித் திளைக்க ஆரம்பித்து விட்டார்.

நான் குறுக்கிட்டு, "அப்படியானால் நீங்கள் எங்களுடன் திரும்பி வரப் போவதில்லையா?" என்று கேட்டேன்.

"ஆமாம், இந்நேரம் வரை அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்!" என்றார் அவர்.

"அப்படியானால் தேவகியின் நிலைமை என்ன ஆகும்? பாவம், அவளை நினைத்தால் தான் எனக்கு மிகவும் பரிதாபமா யிருக்கிறது!" என்றேன்.

"அந்தப் பாவியின் பெயரை என்னெதிரே எடுக்காதே!" என்றார் அவர் அசாத்திய வெறுப்புடன்.

"அதென்ன, அப்படிப் பேசுகிறீர்கள்? நீங்கள் இப்படி விட்டேற்றியாகப் பேசுவது கொஞ்சங்கூட நன்றா யில்லை!" என்றேன் நான்.

"அவள் பெயரைக் கேட்டாலே என் நெஞ்சு கொதிக்கிறது. குடும்பத்தின் மரியாதையைக் காற்றில் பறக்க விட்டுவிட்ட அவள் ஒரு பெண்ணா? பேய் அல்லவா?

என்னைக் கேட்டால் பேயினும் கேடுகெட்டவள் என்றுதான் சொல்லுவேன். தன் மானத்தைத் தண்ணீரில் மிதக்க விட்ட அந்தத் துர் நடத்தைக் காரியை....."

அவர் சொன்ன வார்த்தைகளை அதற்கு மேல் என்னால் காது கொண்டு கேட்க முடியவில்லை. ஆகவே, ஆத்திரம் தீர உரத்த குரலில், "நிறுத்துங்கள்! தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்த அந்த உத்தமியைப்பற்றி வாயில் வந்தபடியெல்லாம் பேசுவது தங்களைப் போன்றோருக்குச் சிறிதும் அழகில்லை!" என்றேன்.

"அதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் பாவத்தின் கறை உள்ளத்தின் உதிரத்தைக் கொண்டு அலம்பினாலும் போகாது. நினைவிருக்கட்டும்!" என்றார் அவர்.

"அப்படியானால் உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்து விட்ட தீர்மானத்தை மாற்றிக் கொள்ளுவதாக உங்களுக்கு உத்தேசம் இல்லையா?"

"மாற்றிக் கொள்வதா? உள்ளத்தில் உண்டான உறுதியை மாற்றிக் கொள்ளுவது என்பது முடிந்த காரியமா? இதோ பார், ஹரிஸேன்! இந்த விஷயத்தில் என்னை அதிகமாகக் கிண்டாதே! இந்த விஷயம் என் ஆத்மாவுக்கு அளவற்ற கிலேசத்தை உண்டு பண்ணுகிறது. அண்டிக் கெடுத்தவர்களை நினைத்தால் எனக்கு இன்னும் ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது!" என்றார் ரூப்சந்த்.

"ஆனால் தேவகி எவ்விதக் குற்றமும் அறியாதவளாயிற்றே! அவள் சொன்ன ஒரு சின்னப் பொய்க்காக இவ்வளவு பெரும் தண்டனையா?" என்று கேட்டேன்.

ரூப்சந்த் அதற்கு ஒன்றுமே பதில் பேசவில்லை. அவர் முகத்தை மிகவும் கம்பீரமாக வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

என் சொற்கள் அவருடைய உள்ளத்தில் எவ்விதக் கிளர்ச்சியையும் உண்டு பண்ணினதாகத் தெரியவில்லை.

ஆயினும் நான் நடந்த சம்பவம் அத்தனையையும் சாங்கோபாங்கமாக முறையிட்டு விட்டு, "தவறு தேவகியினுடையதல்ல; என்னுடையதுதான். ஆகவே, என்னை மன்னிக்க வேண்டும்!" என்று மன்றாடினேன்.

அதைக் கேட்டு அவர் எத்தனை ஆட்சேப சமாதானங்கள் சொன்னார், தெரியுமா? தேவகி உண்மையில் பதிவிரதையாயிருந்தால் தம்மிடம் துளிக்கூட ஒளிவு-மறைவே வைத்துக்கொண்டிருக்கக் கூடாது என்று வாதாடினார்.

"நீங்கள் சொல்வது என்னவோ சொல் அளவில் நியாயமானதாகத்தான் படுகிறது. ஆனால் யாரும் தேவகிக்கு ஏற்பட்டிருந்த அந்த நிலை தங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பார்கள். ஏனெனில் மனிதன் தவறுவது சகஜமே அல்லவா?" என்று நான் வாதாடினேன்.

என் பேச்சைக் கேட்டபின் அவர் மனம் மாறியது என்பதை அவருடைய முகபாவம் எடுத்துக் காட்டியது. ஆனால் என் பேச்சினால் அவருடைய மனம் மாறியதாக எனக்குத் தோன்றவில்லை. தேவகியின் கற்பின் சக்திதான் அவருடைய மனத்தை அப்படி மாற்றியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

அவர் கண்களிலே நீர் துளித்தது. கடும் கோடை காய்ந்தபின் இனிய மழை பொழிந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்? அவருடைய வறண்ட முகத்தில் நீரைப் பார்த்ததும் என் உள்ளம் புல்லரித்தது. நான் என் காரியம் கை கூடிவிட்டதாக நினைத்து இறுமாந்தேன். அவர் கண்கள் ஆறுகப் பெருக அழுதவாறே, "ஹரிஸேன்! முன்பின் யோசியாமல் நான் அவளுக்குப் பெருங் கொடுமை இழைத்து விட்டேன். அவள் இரண்டு மூன்று தடவைகள் என்னைப் பார்ப்பதற்காக இங்கே கூட வந்திருந்தாள். ஆனால் நான்தான் எரிந்து விழுந்து அவளை இங்கே வரவொட்டாமல் அடித்துத் துரத்தினேன். நான்

அப்படிச் செய்ததைக் கண்டு அவள் தன் மனத்துக் குள்ளே என்ன எண்ணியிருப்பாளோ, எனக்குத் தெரி யாது. அப்பொழுது என் உள்ளத்தைச் சந்தேகப் புழு குடைந்து எடுத்துக்கொண்டிருந்தது. ஆகவே, நான் அவளைக் குற்றவாளி என்றே கருதி வந்தேன். குற்றம் என்னுடையதுதான் என்ற எண்ணம் இதுவரை எனக்கு லவலேசங்கூட எழுந்ததில்லை. வா, போய் அவளிடம் மன்னிப்புக் கேட்போம்!" என்றார்.

நாங்கள் இருவரும் புறப்படத் தயாரானோம். அதற் குள்ளாகத் தேவகியே எங்களைத் தேடிக்கொண்டு அங்கே வந்து விட்டாள். அவளைக் கண்டதும் என் கண்களை நீர் கட்டியது. இல்லை யுதிர்காலத்தில் புஷ்பச்செடியின் கிளை களையிழந்து குச்சி குச்சியாகக் காட்சி அளிக்குமே, அது போல் அவள் ஒட்டி உலர்ந்து ஓடாகித் துரும்பாக இளைத்துக் காட்சி அளித்தாள்.

ரூப்சந்த் அவளைக்கண்டதும் தம் இரு கைகளையும் நீட் டித் தழுவிக்கொள்ள முன்னேறினார். தேவகியும் மகிழ்ச்சி வெறியில் ஒரே ஓட்டமாக அவரை நோக்கி ஓடிவந்தாள். அப்படி ஓடி வந்தவள் அவரை அணைத்துத் தழுவிக் கொள்ளவில்லை. காலடிகளில் விழுந்து பணிந்து வணங்கு வதற்காகக் குனிந்தாள். குனிந்தவள் அப்படியே மூர்ச்சை யாகி விட்டாள். ரூப்சந்த் அவளைத் தூக்கி அன்புடன் தழுவிக் கொண்டார். அவர் கண்களில் நீர் கசிந்தது. அந்த நீரில் ஆனந்தமும் துயரமும், அபிமானமும் அன்பும், ஆசையும் பாசமும், வெட்கமும் விருப்பமும் ஒன்றை யொன்று பிரிக்க முடியாமல் பின்னிக் கொண்டு ஒன்றுகக் கலந்திருந்தன. அதேபோல இவ்வளவு நாட்கள் பிரிந் திருந்த தம்பதிகளும் பிரிக்க முடியாமல் கலந்து விட்டனர்.

அன்றிரவு ரூப்சந்தின் குடிசையான ஆனந்த பவ னத்தின் அழகே அலாதியாகத் தனித்து விளங்கியது. எங்கும் ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

ஒவ்வொரு பொருளும் 'ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே!' என்று இசைபாடுவது போலிருந்தது. எங்கள் எல்லோருக்கும் இழந்த அமைதி மீண்டும் கிடைத்து விட்டது.

நான் அங்கே கொஞ்ச நாட்கள் தங்கியிருந்தேன். அந்தக் காலத்து இன்ப நினைவுகள் இன்னும் என் இருதயத்திலே இன்ப லாகிரியைக் கிளறி விடுகின்றன.

சகோதரா! நான் எத்தனையோ நகரங்களைப் பார்த்திருக்கிறேன். இன்னும் எத்தனையோ நகரங்களைப் பார்க்கவும் போகிறேன். ஆனால் ஆனந்த பவனத்திலிருந்த பொழுது நான் அநுபவித்த இன்பத்துக்கு ஈடு இணை சொல்ல முடியாது. அவ்விடத்துக் காற்றிலே கலந்து வந்த இன்ப கீதம் சொர்க்க சுகத்தையே தூக்கி அடிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. அங்கே ஆட்சி செலுத்தி வந்த ஆன்மீக அறிவிலே புதைந்து கிடந்த பேரின்பத்தை இது வரை நான் வேறு எதிலும் கண்டதில்லை; காணவும் முடியாது என்றே எண்ணுகிறேன்.

அங்கே காதல் கீதம் இசைத்துக் கொண்டு காற்று வீசியது. அன்புமலர் அலர்ந்து நறுமணம் கமழ்ந்தது. தேவகி-ரூப்சந்த் ஆகிய இருவரின் பரிசுத்தமே உருவான கொள்கைகளும் நோக்கங்களும் இகலோக இன்பத்தையே பேரின்பமாகக் கருதுபவனும், தன்னலத்தை யன்றிப் பிறநலம் கருதாதவனும், கபடமும் தாபமும் ஒருங்கே நிறைந்தவனுமான என்னைப்போன்ற மனிதனின் மனத்தையே அடியோடு மாற்றி விட்டன என்றால், அவர்களுடைய தூய நடத்தையின் பெருமையை எப்படி வருணிக்க முடியும்? நிகழ்ந்த அத்தனை சம்பவங்களும் எனக்காகவே, என் மனத்தை மாற்றுவதற்காகவே ஏற்பட்டவை போல எனக்குத் தோன்றின.

இப்பொழுது அவர்கள் அங்கே இல்லை. இந்தியாவுக்குப் போய் விட்டார்கள். அங்கே காச்மீரத்தில் உள்ள வெரி நாக அருவிக்கரையில் அழகிய குடிசை ஒன்றைப்

போட்டுக் கொண்டு ஆனந்தமாக வசித்து வருகிறார்கள். அதற்கும் 'ஆனந்த பவனம்' என்றேதான் அவர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள்.

ஆனல் 'ஓம்' என்று ஓங்கார ஓசையுடன் சப்தித்துக் கொண்டு, ஓங்கார ஸ்வரூபியான பகவானின் நினைவை அல்லும் பகலும் அனவரதமும் உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் அருவிக்கரையில் அந்த ஆசிரமம் அமைந்து விட்டதனல் ஆத்ம ஞானத்துக்கே இருப்பிடமான இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள் அனைவரும் அதற்கும் 'அருவிக்கரை ஆசிரமம்' என்ற அருமையான பெயரையே சூட்டி விட்டனர்.

நான் இன்று இந்தியாவுக்குப் போவதன் முக்கியமான காரணமே, அந்த அருவிக்கரை ஆசிரமம்தான். நான் அதன் எழில் மிக்க காட்சிகளைக் காணத் தண்ணீருக்காகத் தவியாய்த் தவித்துத் துடியாய்த் துடிக்கும் மீனைப்போலத் துடித்துக் கொண்டிருக்கிறேன். நான் இன்று வரை என் தாய் நாட்டைப் பார்த்ததில்லை. ஆனல் தாய் எவ்வளவுக் கெவ்வளவு அன்பானவள், எவ்வளவு மரியாதைக்கு உகந்தவள், அபிமானமும் கர்வமும் கொள்வதற்கு ஏற்றவள் என்பதை நன்கு உணருகிறேன்.

ஆகா! என் தாய் நாட்டின் பெருமையை எழுத்து வடிவில் வைப்பது இயலாத காரியம்! என் தந்தையும், தாயும் பாட்டனும் பாட்டியும், பிறந்து வளர்ந்து, விளையாடி, வயது முதிர்ந்து மண்ணோடு மண்ணுகக் கலந்த அந்தப் பூமி மண்ணின் பெருமையை என்ன வென்று சொல்லுவது? ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன் மோகன முரளி வாசித்து, ஆன் நிறைகள் மேய்த்து, அற்புத லீலைகள் புரிந்த புண்ணிய பூமி அல்லவா என் தாய்நாடு! அன்பு மாரியும் அம்பு மாரியும் பொழிந்து கோசலைச் செல்வன் ராமன் ராட்சதர்களின் கொட்டத்தை அடக்கிப் பரிசுத்தப் படுத்திய பூமி அல்லவா என் தாய்நாடு! இன்று நான் என்

னுடைய அதே தாய் நாட்டைத் தரிசிக்கப் போகிறேன். வழி தப்பித் தவறிய பாலகனை நான், அன்னையின் அடிகளிலே விழுந்து வணங்கி அழுது புரண்டு உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்காகவே என் தாய் நாட்டை நோக்கிப் புறப்பட்டிருக்கிறேன்.

என் தாய் நாடு மிகப் பரிசுத்தமாகவும், ரமணீயமாகவும், எழில் வாய்ந்ததாகவும் பயிர் பச்சை நிறைந்ததாகவும் இருக்கும். உலகினுக்கே உய்யும் வழி காட்டும் உன்னத நோக்கம் கொண்ட நாடு என் தாய் நாடுதான் என்பதை நான் நன்முக அறிவேன். அப்பேர்ப்பட்ட தாய் நாட்டைக் காணத்தான் நான் புறப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இவ்வளவு குணங்களையும் ஒன்று சேர்த்து ஒருங்கே வைத்து ஒரு இடத்தில் காண முயலும் பொழுது என் கண்களில் ஆனந்த பவனமாகத் திகழும் அருவிக்கரை ஆசிரமத்தின் அழியாச் சித்திரம்தான் தாண்டவமாடுகிறது. என் கற்பனைப் பறவைக்கு அதைத் தாண்டிப் பறந்து செல்லும் சக்தி இல்லை.

'நம் பழம்பெரும் பாரத நாடே' பேரானந்தமான அருவிக்கரை ஆசிரமமாகத் திகழும். அங்கே அன்பின் ஆட்சி நிலவி யிருக்கும். இன்ப நாதம் எக்களித்துக் கொண்டிருக்கும். மெய் ஒளி நடனம் புரிந்து கொண்டிருக்கும். அங்கே வசிக்கும் ஒவ்வொரு ஆண் மகனும் ரூப்சந்தாகத் திகழ்வான். ஒவ்வொரு பெண்ணும் தேவகியாகத் திகழ்வாள். தன்னலம் பிடித்த தனி மனிதன் யாருமே அங்கே இருக்க மாட்டான் என்று கருதுகிறேன். என் கனவு கனவாக இராமல் நினைவாகத் திகழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

★

இவ்வாறு சொல்லியவாறே ஹரிஸேன் தலை குனிந்து கொண்டான். ஹரிஸேனின் அந்தக் கதையைக் கேட்ட நான் அறியாக் குழந்தையின் உள்ளத்தில் தாய் நாட்டுப்

பற்று எப்படி உதயமாகிறது என்பதை அப்பொழுதுதான் முதல் முதலாகக் கண்டேன்.

வெளியே நீலத் திரைக்கடல் கர்ஜனை புரிந்து கொண்டிருந்தது. உள்ளே என் இருதயத்தில் ஆயிரக்கணக்கான எண்ண அலைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தன. எண்ண அலைகளிலே சிக்கிய நான் சிறிது நேரம் வாய் திறக்க வகையறியாமல் மௌனம் சாதித்தேன். பிறகு, சிறிது நேரம் கழித்துத் தலை தூக்கி ஒரு முறை ஹரிஸேனைப் பார்த்தேன். அப்பொழுது அவன் எனக்கு மிக மிக நெருங்கியவனாக, உற்ற உறவினனாகத் தோற்றம் அளித்தான். நான் அன்பு ததும்பும் குரலில், "ஹரிஸேன்!" என்று அழைத்தேன்.

ஹரிஸேன் என்னை நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய உள்ளம் உணர்ச்சிப் பெருக்கிலே மிதந்து கொண்டிருப்பதை அவன் முகம் எடுத்துக் காட்டியது. அவன் உள்ள நெகிழ்ச்சியுடன், "என் சொந்த நாட்டுச் சகோதரா!" என்று என்னை நிறைந்த உள்ளத்துடன் நாத்தழுதழுக்க அழைத்தான். அதற்கு மேல் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

கப்பல் இரவின் இருளில் நீலக் கடலின் நீரைக் கிழித்துக் கொண்டு வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. நாங்கள் தாய் நாட்டுக்கு வெகு சமீபமாக வந்து கொண்டிருந்தோம். அப்பொழுதும் என் காதுகளில் ஹரிஸேன் சொன்ன கருத்து நிறைந்த அவனுடைய சுய சரிதத்தின் சிரஞ்சீவிச் சொற்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

DR. T.P.M. LIBRARY
KAMARAJ UNIVERSITY

சங்கநூற் காட்சிகள்

ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்

★

பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்

1. மனை விளக்கு (நற்றிணைக் காட்சிகள்)

"……அற்புதமான பழைய அணிகலன்களை மெருகிட்டு, உன்னத்தைக் கவரும் வண்ணம் ஒரு பொருட்காட்சிச் சாலையில் வைத்தது போலும் இப் புத்தகம். இது தமிழ்ச்சங்க நூல்களைக் கற்று உணரும் பாக்கியம் இல்லாதவரும் இனி அவற்றைக் கற்க இருக்கும் மாணவர்களும் அவசியம் படிக்கவேண்டியதொன்று."

—சுதேசமித்திரன்: 21-1-52.

2. குறிஞ்சித் தேன் (குறுந்தொகைக் காட்சிகள்)

"……பற்பல இடங்களில் பாடற் பொருட்பகுதிகளை விளக்க ஆசிரியர் கையாளும் உவமைகள் குறிப்பிடத் தக்கன. ஆற்றொழுக்குப் போன்ற வசன நடையும் அமைந்துள்ளது. கதை சொல்வது போல, பின்னல் வரப்போகும் செய்யுட் பொருளை விரிவாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறும் சுவைபட எடுத்துக் கூறுகிறார். தமிழ்ச்சங்க நூல்களைக் கண்டு பயப்படாமல் அவற்றைக் கற்பதற்கு இது ஒரு தூண்டுகோலாக இருக்கும்."

—தினமணி: 8-3-52.

3. தாமரைப் பொய்கை (ஐங்குறுநூற்றுக் காட்சிகள்)

"……நூலின் தொடக்கத்தில் பதினைந்து பக்கங்கள் நிரம்பிய தான முகவுரை, நூலை நன்கு சுவைத்துப் படிப்பதற்கு அவசியமான பல விஷயங்களை அடக்கி இருக்கின்றது. ஓவியர் இராஜத்தினுடைய மேலுறைச் சித்திரம் பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டது போன்று விளங்குகின்றது."

—ஈழகேசரி: 4-5-52.

4. பிடியும் களிறும் (கலித்தொகைக் காட்சிகள்)

"……இது காதல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் கதை……ஸ்ரீ கி. வா. ஜ. செய்துவரும் இந்த இலக்கிய சேவையே நம் நாகரிக, சமூக, கலை வளர்ச்சிக்குப் பெரிதும் ஏற்றதாகும். ஆழ்ந்த படிப்பும், வசீகர நடையும் அரும்பெரும் புதை பொருள்களை நிதர்சனமாகக் காட்டும் ஆற்றலும், மறுமலர்ச்சி ஆர்வமும் சிறந்து விளங்கும் இந்த நூலைத் தமிழபிமானிகள் பெரிதும் வரவேற்பார்கள் என்பதில் ஐயம் இல்லை."

—பாரத தேவி: 2-6-52.

5. அறப் போர் (புறநானூற்றுக் காட்சிகள்)

"……இதில் புறநானூற்றிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட ஏழு பாடல்களுக்கு ஆசிரியர் எல்லோரும் படித்து எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் செம்மையான அழகிய தமிழ் நடையில் விளக்கம் எழுதியுள்ளார். சுவைத்துச் சுவைத்து மகிழ்வதற்குரியது இந்த நூல். அழகிய மேலட்டை ஓவியமுடன் விளங்குகிறது."

—வீரகேசரி: 5-10-52.

6. இன்ப மலை (அகநானூற்றுக் காட்சிகள்)

"……காதலர் உள்ளம், இயற்கை வருணனை, மக்கள் பண்பாடு என்பவற்றை எவ்வாறு பண்டைத்தமிழ்ப் புலவர்கள் தம் கண்முன் காட்சிப்படுத்துகின்றனர் என்பதை இவ்வாசிரியர் எழுதியிருப்பதைப் படித்த பின்னரே உணர்கிறோம். தமிழ்ச்சங்க காலத்திலேயே பிறந்து, வாழ்ந்து வருபவர் ஒருவர் நம்முடன் நாமறிந்த இந்தக் காலத்துத் தமிழில் பேசுவதுபோல இந்த நூலைப் படிக்கும் போது நமக்கு ஓர் உணர்ச்சி உண்டாகிறது."

—சுதேசமித்திரன்: 25-11-52.

7. புது வெள்ளம் (பதிற்றுப்பத்துக் காட்சிகள்)

பழைய இலக்கிய வெள்ளமாகிய சங்கநூல்களில் சேர அரசர்களின் புகழைப் பாடும் பதிற்றுப்பத்திலிருந்து தேர்ந்தெடுத்த சில பாடல்களுக்குக் கதையைப் போல எழுதிய விளக்கம் அமைந்த புத்தகம் இது. சேர அரசர்களின் போர்ச் சிறப்பும், வீரப் பெருமையும், நாடுகாத்த உயர்வும், கொடையின் இயல்பும் வெளியாகும் அருமையான பாடல்கள் இவை.

8. தமிழ் வையை (பரிபாடல் காட்சிகள்)

வையையாற்றின் புது வெள்ளக் காட்சி, மதுரைமாநகரத்து ஆண் பெண்களின் விளையாட்டு, களியாட்டம் ஆகிய இன்பக் காட்சிகளையும் திருமால், முருகன் ஆகியவர்களின் பெருமைகளையும் விரிவாகச் சொல்வது பரிபாடல். இந்த நூலின் சில செய்யுட்களுக்குரிய விளக்கத்தைக் கதைபோலவும் நாடகம் போலவும் அமைத்துத் தருவது இந்தப் புத்தகம்.

எட்டுப் புத்தகங்களும் அழுத்தமான காகிதத்தில் அழகாக அச்சிடப் பெற்றவை. ஓவியர் ராஜம் அவர்களின் கண்ணைக் கவரும் மூவர்ணப் படங்களைத் தாங்கிய ஆர்ட் மேலட்டையுடனும் உயர்தர பயிண்டுடனும் கூடியவை.

ஒவ்வொன்றின் விலை ரூ. 3 பரிசுப் பதிப்பு ரூ. 5

அமுத நிலையம் லிமிடெட்

91, மவுண்ட் ரோடு, சென்னை – 18